# இலக்கிய ஆய்வு



பி.எல்.சாமி ஐ.ஏ.எஸ்.

இந்திய நாடாளுமன்ற
உறுப்பினராகவும்

புதுவை வரலாற்றுச் சங்கத்
தலைவராகவும்

புதுவைப் புகழ்மணிகளில்
ஒளிமிக்க மணியாகவும்

இயன்றவரை முயன்று உதவும்
இதயங் கொண்ட ஏந்தலாகவும்

வாழ்ந்து மறைந்த 'வரலாற்றுக் களஞ்சியம்'

திருமுடி ந. சேதுராமன அவர்களது

மூன்றாம் ஆண்டு நினைவுநாள்
வெளியீடு!

பி. எல். சாமி, ஐ.ஏ.எஸ்.

# இலக்கிய ஆய்வு

(அறிவியல்)

BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| Title of the book | ILAKKIYA AAYVU |
| Author | P. L. SAMY I. A. S. |
| Language | Tamil |
| Edition | First |
| Date of Publication | 23 - 12 - 1982 |
| Copy right Holder | P. L. SAMY I. A. S. |
| Paper Used | 11.6 Kg D. Crown White Printing |
| Size of the book | 18 × 12. 5 Cm. |
| Printing Points | 10 pt. |
| No. of Pages | 244+12=256 |
| No. of Copies | 1,000 |
| Printer | THAMARAI ACHAGAM Madras-600 014. |
| Binding | Card Board |

**Price** **Rs. 17.**

| | |
|---|---|
| Publisher | SEKAR PATHIPPAGAM Madras-600 078 |
| Subject | Literary Etymology |
| Call Number | |

# இலக்கிய ஆய்வு

## (அறிவியல்)

அறிவியல் தமிழறிஞர்

**பி. எல். சாமி, ஐ.ஏ.எஸ்.**

**சேகர் பதிப்பகம்**

புத்தக வெளியீடு - விற்பனையாளர்

65, பெரியார் தெரு
எம். ஜி. ஆர். நகர்
சென்னை 600 078

'திருமுடி இல்லம்'
41, ஆனந்தரங்கப்பர் தெரு
புதுச்சேரி-1

முதற்பதிப்பு
23, டிசம்பர், 1982
உரிமை
ஆசிரியர்க்கு

விலை ரூ. 17

அச்சிட்டோர்
தாமரை அச்சகம்
5, ஆயில் மாங்கர் தெரு
(ஜாம்பஜார்) சென்னை 600 014

## உருவாக்கியோர்

| | |
|---|---|
| ஆசிரியர் | பி. எல். சாமி, ஐ.ஏ.எஸ். |
| ஓவியர் | பி. என். மேனன் |
| உருவச்சு செய்தவர் | பார்த்தசாரதி |
| முகப்பு அச்சிட்டோர் | ஆ. அன்பழகன்<br>பிரபு பிரிண்டிங் ஹவுஸ் |
| நூல் அச்சுக்கோப்பு | சி. வீரபத்திரன்<br>மு. மாலா, கு. விஜயா<br>ஜெ. தாமரை |
| அச்சிட்டோர் | கு. ஜெயராமன்<br>தாமரை அச்சகம் |
| பிழை திருத்தம் | பெ. பன்னீர்செல்வம் |
| உருவாக்கப் பணி | சு. அருள் |
| பதிப்பாளர் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |

## முன்னுரை

"இலக்கிய ஆய்வு" எனும் தலைப்பில் வரும் இந்நூல் எனது பத்தாவது நூலாகும்.

இது செந்தமிழ்ச்செல்வி, ஆராய்ச்சி, தினமணிசுடர் முதலிய இதழ்களில் அவ்வப்போது வந்த கட்டுரைகளின் தொகுப்பாகும்.

சங்க நூல்களில் கூறப்படும் உயிரினங்களில் பூச்சியினம் இன்னும் அறிவியலின் படி ஆராயப்படல் வேண்டும். மற்ற உயிரினங்கள் அனைத்தும் அறிவியல் அடிப்படையில் ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளன.

இந்நூலில் வந்துள்ள 6 கட்டுரைகள் பூச்சியினத்தையும் ஊர்வனவற்றையும், பெரும்பாலானவை 12 சொல்லாய்வு சார்பான வரலாறு பற்றிய அறிவியல் கட்டுரைகளாகவும் அமைந்துள்ளன.

அகநானூற்றில் கோடிக்கரை, பவத்திரி என்னும் ஊர்களைப் பற்றி ஒரே ஒரு குறிப்புச்செய்தி வருகின்றது.

கோடிக்கரையில் பறவைகள் நிறைந்திருந்து இரைச்சலிட்டதாகக் கூறப்பட்

டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறிய செய்தி இன்றும் உண்மையாக இருப்பது வியப்பினைத் தருகின்றது.

இன்று கோடிக்கரை(Point calimere) பறவைகளின் புகலிடமாக, சரணாலயமாக (sanctuary) அறிவிக்கப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

இலக்கிய ஆய்வு எனும் இந்நூலில் சங்க நூல்களில் காணப்படும் பல செய்திகள் ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

இந்த நூலைத் தொகுத்து அழகாக, மிக விரைவில் வெளியிட்ட திருவாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கள் புத்தகக் கலையில் ஒரு வித்தகர் ஆவார்.

எனது நண்பரும் எல்லார்க்கும் இனிய வருமான புதுவை திருமுடி சேதுராமன் அவர்களது மூன்றாவது நினைவு நாளையொட்டி இந்நூலை வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

அன்பன்,

பி. எல். சாமி

## பதிப்புரை

இலக்கியம் என்பது நுண்ணறிவினர்க்குரியது. நெஞ்சார்ந்த சுவையுணர்வு உடையார்க்கே இலக்கியம் பெரிதும் பயன்படும்.

உலகப் போக்கு, நடைமுறை வாழ்க்கை, மனிதப் பண்பு, இயற்கையும் செயற்கையும் கலந்த காட்சி, முரண்படும் நிலை ஆகியவற்றை இலக்கியம் தன்னகத்தே கொண்டிருக்கும். அத்தகைய இலக்கியங்கள்—அதாவது உலக வாழ்வை நன்கு எடுத்துக்காட்டும் இலக்கியங்கள், காலந்தோறும் கற்போர்க்கு இன்பமும் பயனும் நல்கும்.

வாழ்வு பல கூறுகளைக் கொண்டது. எனவே இலக்கியமும் அவ்வாறே பல்வேறு செய்திகளைக் கொண்டது.

தமிழர்களின் முற்கால இலக்கியங்கள் உலகத்தாரால் போற்றப் பெறும் பெருந்தகுதியுடையனவாகும். நுண்மையும் திண்மையும் சுருக்கமும் ஆழமும் உடையவை; உண்மை மட்டுமே நிறைந்தவை சங்க இலக்கியங்கள்.

தமிழர்தம் உயர்வான பண்பாடுகள், கலைகள், வரலாறுகள், இயற்கையழகுகள், உயிரினங்களின் இயல்புகள், உயர்திணை—அஃறிணை ஒன்றிய வாழ்வியல் நிலைகள் முதலான பல்வேறு உண்மைக் காட்சிகளை சங்க இலக்கியங்கள் பெற்றுள்ளன.

சங்க நூல்களில் ஒன்றி இன்புறும் தன்மை எல்லாரிடத்தும் காண முடியாது. நுண்ணறிவாளர்களில் ஒரு சிலரே அதில் ஈடுபாட்டுடன் மூழ்கித் திளைப்பர். குறிப்பிடத்தக்க ஒரு சிலருள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்பவர் புதுச்சேரி அறிஞர் பி.எல். சாமி ஐ.ஏ.எஸ். அவர்கள்.

இலக்கியத்தை இலக்கியச் சுவையாகக் கொள்வர் சிலர். கலையாகக் கண்டு மகிழ்பவர் சிலர். அறிவியலாகக் காண்பவர் மிகச் சிலர்.

அறிவியலாகவும் வரலாறாகவும் சுவைத்து மகிழ்பவர் அறிஞர் பி.எல். சாமி அவர்கள். சங்க இலக்கியங்களில் மூழ்கி வாழ்வின்பம் காண்பவர் இவர். இவர்தம் நோக்கும் ஆய்வும் தமிழாசிரியர்களிடமிருந்து வேறுபட்டுள்ளன.

உயிரினங்களிடத்து உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் நெருங்கிப் பழகி, அவற்றின் தன்மைகளை நன்கு ஆராய்ந்து அறியும் ஆற்றல் இவர்பால் இயற்கையிலேயே அமைந்துள்ளது. அதனால் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் அனைத்தையும் அறிவியல் நோக்குடன் ஆராய்கின்றார்; புதிய புதிய பொருள் நலம் கண்டு மகிழ்கிறார். அக்காலப் புலவர்கள் மிக எளிதாகக் கூறியுள்ள அரிய உயிரியல் கருத்துக்களை, இயற்கைச் செய்திகளைக் கண்டு வியந்து போற்றுகிறார்.

முற்கால மக்களின் இயற்கையோடியைந்த வாழ்வையும் புலமைத் திறனையும் தாம் கண்டவாறு பிறரும் அறிந்து பயன்பெற வேண்டும் என விரும்பிச் 'செந்தமிழ்ச் செல்வி' வாயிலாகத் திங்கள்

தோறும் நந்தமிழ் மக்களுக்கு கட்டுரை எழுதி விளக்கம் தந்து வருகின்றார் இந்நூலாசிரியர்.

ஆழக் கல்வியும் அகலக் கல்வியும் பெறாதாரும்கூட 'இவர்தம் உழைப்பில் வெளிவரும் விளக்கங்களால் பயன் அடையலாம். இவரது கட்டுரைகள் எளிமையானவை; நேர்முக ஆய்வுகளால் கிடைத்த நிறைவான விளக்கங்கள்.

இவர் தனிச் சிறப்புடன் செய்து வரும் அறிவியல், வரலாற்று ஆய்வுகள் எல்லார்க்கும் இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்துவனவாகும். இலக்கியத்தைச் சுவைப்போர்க்கு இவர்தம் எழுத்துக்கள் வழிகாட்டித் துணை புரியும். மேலும் புதிய படைப்பாளர்கட்கு இவர்தம் ஆய்வுகள் களஞ்சியமாகப் பயன்படும்.

இயற்கை வாழ்வும் இலக்கியப் பயனும் மிக்க பழந்தமிழ் இலக்கியங்களை இன்றைய தமிழர்க்கு எளிதாக, இனிதாக வழங்கி வரும் ஆசிரியர் தொண்டு அரிய தொண்டாகும். அவரது கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவதில் எமது நிலையம் பெருமையடைகிறது. அவர்கட்கு அன்பும் நன்றியும் உரியது.

அறிவியல் - வரலாற்று நோக்கில் அமைந்துள்ள இத்தொகுப்பு நூலினைக் கல்வியுலகம் ஏற்றுப் பயன்பெற வேண்டுகின்றோம்.

அன்பன்,

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**
**சேகர் பதிப்பகம்.**

## பொருளடக்கம்

வண்ணப்படங்கள்

1. ஆக்காட்டிப் பாட்டு 17

2. கரிக்குருவி திருவிளையாடல் 43

3. சங்க நூல்களில் முயிறு 49

4. வேட்டுவனும் முயிறும் 57

5. கடுந்தேறு எனும் குளவி 63

6. சைவசித்தாந்த இலக்கியத்தில் வேட்டுவன் எனும் குளவி 71

7. பதிற்றுப்பத்தில் 'சான்றோர்' 79

8. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 101

9. இளநீர் 109

10. உந்தூழா? முந்தூழா? 117

1 . அகநானூற்றில் 'பவத்திரி' 127

12. அகநானூற்றில் கோடிக்கரை 151

13. யானை உண்ட அதிரல் 161

14. சூல்யானை உண்ட பெருமூங்கில் முளை 171

15. நாவலும் ந்ாகமும் 175

16. சிறுபாணாற்றுப்படை ஓர் ஆய்வு 183

17. கொந்துகோலும் வேதினமும் 195

18. 'ஆராய்ச்சி' — ஓர் ஆராய்ச்சி 207

சொல்லடைவு 225

பிழை திருத்தம் 241



கட்டுரை 1 சிவப்பு ஆட்காட்டி பக்கம் 17



சிவப்பு ஆள்காட்டி

கட்டுரை 1 பக்கம் 17



மஞ்சள் ஆள்காட்டி

கட்டுரை 1 பக்கம் 17



ஆட்காட்டி-காதிலை (Wattle)

கட்டுரை 1 பக்கம் 17



வேட்டுவன் எனும் குளவி

கட்டுரை 4 பக்கம் 71



கடுந்தேறு எனும் குளவி

கட்டுரை 5

பக்கம் 63



வேட்டுவன் எனும் குளவி

கட்டுரை 6 பக்கம் 71



வரையாடு

சுட்டுரை 8 பக்கம் 101



ஆமா(ன்)

கட்டுரை 16 பக்கம் 191



நீலச் சேவல்

கட்டுரை 16 பக்கம் 186



இந்திரகோபப் பூச்சி (பட்டுப்பூச்சி)

கட்டுரை 16 பக்கம் 191



ஓதின முதுபோத்து

கட்டுரை 17 பக்கம் 200



வேதினம் (அம்பு)

கட்டுரை 17 பக்கம் 200



கொந்துகோல் (அங்குசம்)

கட்டுரை 17 பக்கம் 195

# ஆக்காட்டிப் பாட்டு

தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் 'ஆள்காட்டி' என்ற பறவையைப்பற்றி ஓர் அழகான- அரிதான நாட்டுப்பாடல் பாடப் படுகின்றது. இந்தப் பாடல் பலவகைப் பாட மாற்றங்களுடன் தமிழ் நாட்டில் பல பகுதிகளில் பாடப்படுகின்றது.

பெரியசாமித் தூரன் அவர்கள் கொங்கு நாட்டில் வழங்கிய ஆக்காட்டிப் பாடலைக் 'காற்றிலே வந்த கவிதை'என்ற தொகுப்பு நூலில் வெளியிட்டுச் சிறிது விளக்கம் தந்துள்ளார். இந்த ஆக்காட்டிப் பாடலை நானும் கொங்கு நாட்டில் சோம னூர் என்ற ஊரில் கேட்டுள்ளேன்.

இந்த ஆக்காட்டிப் பாடலில் காணப் பட்ட பல பாடமாற்றங்களை தே.லூர்து அவர்கள் எழுதிய 'நாட்டார் வழக்காற்றி யல்' என்னும் நூலில் விரிவாகக் காட்டியுள் ளார்.பாட மாற்றங்களையும் வரிகளையும் காட்டி. 'எவை சரியானவை என்பது தெளி வாகவில்லை'என்று குறிப்பிட்டுள்ளார்,

'தினமணி' தீபாவளிக் கதிர் (10—11—1977) இதழில் வெளியான ஆள்காட்டிப் பாடலைப்பற்றிய கட்டுரையை திரு. லூர்து எனக்கு அனுப்பினார்,

ஆள்காட்டிப் பறவையின் வர்ணனை எப்படி இயற்கைக்குப் பொருத்தமாக உள்ளது என்பதை இந்தக் கட்டுரையை எழுதிய ஜே. மங்கள்ராஜ் ஜான்சன் குறிப்பிட்டுள்ளார்.

'மன்னார் நாட்டுப் பாடல்கள்'என்னும் நூலில் இலங்கை எழுத்தாளர் சு. வித்தியானந்தன் அவர்கள் இலங்கையின் ஒரு பகுதியானமன்னார்நாட்டுஆட்காட்டிப்பாநிலை வெளியிட்டுள்ளார்:

ஆட்காட்டிப் பாடல்களில் பொதிந்துள்ள சிறந்த இயற்கைச் செய்திகளையும் பாட மாற்றங்களில் எவையெவை சிறந்தவை என்பதைப் பற்றியும் இக்கட்டுரையில் விளக்குவோம்;

பெரியசாமித் தூரன் வெளியிட்ட ஆட்காட்டிப் பாடல் கீழே தரப்படுகின்றது:

**"ஆக்காட்டி ஆக்காட்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்**
**கல்லைத் திறந்து கருங்காட்டுப் பாறையிலே**
**இட்டது நாலுமுட்டை, பொரித்தது மூணு குஞ்சு**
**முதற்குஞ்சுக் கிரைதேடி மூணுகாதம் போய்வந்தேன்**
**நடுக்குஞ்சுக் கிரைதேடி நாலு காதம் போய்வந்தேன்**
**கடைசிக் குஞ்சுக் கிரைதேடி கனதூரம் போய்வந்தேன்**
**வண்ணாரப்பாவிமகன் பார்த்திருந்து கண்ணி வைத்தான்**
**காலிரண்டும் கண்ணியிலே கையிரண்டும் மாரடிக்க**
**நான் அழுத கண்ணீரோ நாடெல்லாம் வெள்ளம் போய்**
**குண்டு குளம் ரொம்பிக் குதிரை குளிப்பாட்டி**
**ஆடுகளும் மாடுகளும் அங்கு வந்து நீர்குடிக்க**
**எங்கும் பரந்ததுவே எல்லோரும் பார்த்துருக"**

இந்தப் பாட்டைக் கொங்கு நாட்டு மாடு மேய்க்கும் சிறுவர்கள் பாடக் கேட்டதாகத் தூரன் எழுதியுள்ளார். தூரன் பதிப்பித்துள்ள இதே பாடலை நான் புதுச்சேரி மாநிலத்தில் நெட்டப்பாக்கம் என்ற ஊரில்கேட்டுள்ளேன்.

தூரன் பதிப்பித்துள்ள ஆக்காட்டிப் பாடலில் நான் கேட்டறிந்த ''ஆக்காட்டி ஆக்காட்டி ஆவரம்பூ ஆக் காட்டி'' என்று வரும் இரண்டாவது வரியைக் காணோம் இந்த வரியை நான் கொங்குநாட்டிலும் புதுவை மாநிலத் திலும் பாடப்பட்ட ஆக்காட்டிப் பாடலில் கேட்டிருக்கி றேன்.

'ஆவரம்பூ ஆக்காட்டி' என்பது மிக முக்கியமான வரி

ஆட்காட்டி என்ற பெயரில் ஒரே இனமான இருவகைப் பறவைகள் தான் தமிழ் நாட்டில் முக்கியமாக வழங்குகின் றன. ஆதலின் ஆக்காட்டிப் பாடலில் 'ஆவரம்பூ ஆட் காட்டி' என்ற வரியே, எந்தக் குறிப்பிட்ட ஆட்காட்டி இப்பாடலில் கூறப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இந்த வரி இலங்கை நாட்டுப் பாடலிலும் வருவதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். குடியேற்ற நாட்டில் பழமைப் பண்புகள், மரபுகள் உறுதியாகப் பாது காக்கப்படுவதைப்பற்றி அறிஞர்கள் கூறியுள்ளனர். அந்த வகையில்,

''ஆக்காட்டி ஆக்காட்டி
ஆவரம்பூ ஆக்காட்டி''

என்ற இலங்கை நாட்டுப்பாடல் வரிகள் சரியானவை என்று தெளிவாகத் தெரிகின்றது. இந்த முதல் இரண்டு வரிகள் லூர்து அவர்கள் காட்டியுள்ள,

''ஆக்குருவி ஆக்குருவி
எங்கே கொண்டு முட்டையிட்டே''

என்று வரும் பாடலிலும்,

'அக்காண்டி அக்காண்டி
எங்கெங்கே மொட்டு இட்டே'

என்று வரும் பாடலிலும் இல்லாததால் இந்த இரு பாடல்களிலும் உண்மையான மூலப்பாடம் இன்லையென்று தெரிகின்றது. மூலப்பாடம் மறக்கப்பட்டுள்ளது என்று கருதலாம். ஆனால் இதே உண்மையான பாடல் வரிகள் மங்கள் ராஜ் ஜான்சன் எழுதிய கட்டுரையில் வெளியிட்ட ஆக்காட்டிப் பாடலில் பத்தாவது பதினொன்றாவது வரியாக வருவதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

"ஆக்காட்டி ஆக்காட்டி
அழகியம்மா ஆக்காட்டி

எங்கெங்கே கூடுகட்டி
எத்தினி மொட்டு வெச்சே?

ஆத்தோரம் குழி பறிச்சு
கரையோரம் கால்பாத்து

கல்லைப்போல் நான் போட்ட
நல்லமொட்டு நாலல்லோ

ஆக்காட்டி ஆக்காட்டி
ஆவரம்பூ ஆக்காட்டி

நீ பெத்த மொட்டுலே
பொரிச்சது எத்தினியோ?

நானிட்ட நாலு மொட்டில்
முளைத்தது மூணு குஞ்சு!

மஞ்சக்குஞ்சுக் கிரைதேடி
அஞ்சுமலை அலஞ்சுவந்தேன்

ஆக்காட்டி ஆக்காட்டி
அரளிப்பூ ஆக்காட்டி

ஆள்கூட்டி ஊருகட்டி
ஒப்பாரி வெச்சதேனோ?

என் பொன்னுக் குஞ்சுக்
கிரைதேடிப் போகையிலே

பருவக்கார பாவி வெச்ச
கண்ணியிலே கால்மாட்ட

சிந்தினேன் கண்ணிரும்
சிற காலே மாரடித்து

நானழுத கண்ணீரும்
பச்சக் குஞ்சழுத கண்ணீரும்

வாய்க்கால் வழிந்தோடி
வயலெல்லாம் பாஞ்சோடி

குளம் நிரஞ்சு கோயில் தேர்
முழுகிப் போச்சுதையோ,''

ஆதலின் ஆக்காட்டிப் பாடலில் குறிப்பிடப்பட்ட ஆக்காட்டிப் பறவை எதுவென்று திட்டமாக அறிய (Identi fication)) 'ஆவரம்பூ ஆக்காட்டி' என்ற வரி மிக மிக முக்கியமானது.

ஆனால் மங்கள்ராஜ் ஜான்சன் அவர்கள் காட்டிய பாடலில் இந்த இரண்டு வரிகளுக்கு முன் வரும் ஒன்பது வரிகள் தமிழ் நாட்டில் வேறு எந்தப் பகுதியிலும் வழங்கிய ஆட்காட்டிப் பாடலிலும் காணப்படாததால், இவ்வரிகள் பிற்காலத்தில் இந்த ஆள்காட்டிப் பறவையைப் பற்றி நன்றாகத் தெரிந்தபின் சேர்க்கப்பட்டதென்று தெளிவாகத் தெரிகின்றது.

ஆள்காட்டிக் குருவியில் முக மிக்கியமானவை இரண்டு வகையாகும். ஒரு வகை ஆட்காட்டிச் குருவி, கற்பாங்கான நிலத்திலும்' பரம்பு, முரம்பு நிலத்திலும் வாழ்வதாகும். அதன் கண்ணுக்கு முன்னே மஞ்சள் நிறமாக நீட்டியிருக்கும் இலை போன்ற தோலைக் கொண்ட இந்த ஆட்காட்டிக்

குருவியை எளிதில் கணடு கொள்ளலாம் கண்முன்னே உள்ள இந்தத் தோலைஆங்கிலத்தில் 'Yellow wattle' என்று அழைப்பர்.

இது போன்று பிணந்தின்னிக் கழுகின் காதில் உள்ள சதைப் பாகத்தை மிகப் பொருத்தமாக மலையாள மொழியில் "காதிலை" என்றுஅழைப்பர் இந்தச்சொல்லைத் தமிழிலும் அறிவியல் (பெயராக (Scientific tearm) கண்ணிலை' என்ற பெயரைப் பயன்படுத்தலாம்.

மலையாளத்தில் இந்த ஆள்காட்டியைக் குறிப்பாக **மஞ்சள் கண்ணி** என்று அழைப்பர். தமிழில் பொதுவாக **ஆள்காட்டி** என்றழைப்பர்.

மஞ்சள் கண் ஆள்காட்டி எளிதாகக் காணப்படுவது.

மற்றொரு முக்கியமான ஆட்காட்டியான சிகப்புக் கண்ஆட்காட்டியை அரிதாக நீர்நிலைக் கருகில் காணலாம்,

மஞ்சள் கண் ஆள்காட்டி வறட்சியான சூழ்நிலையில் காணப்படும்.

ஆனால் சிவப்புக்கண் ஆள்காட்டி நீர்நிலைக்கருகில் காணப்படும்.

தமிழ் நாட்டிலும் இலங்கை நாட்டிலும் வழங்கும் ஆட்காட்டிப் பாடல்களிலும் மஞ்சள் ஆட்காட்டியே பெரும்பாலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதுதெளிவாகத் தெரிகின்றது.

இந்த மஞ்சள்கண் ஆட்காட்டிப் பறவையே கல்லும் கரடுமான நிலத்தில் முட்டையிடும் குருவியாகும். இதை நான் கேரளத்திலும் தமிழ் நாட்டிலும் நேரிலே கண்டு தெரிந்துள்ளேன்.

வடமலையாளத்தில் இந்த மஞ்சள்கண் ஆள்காட்டி என்ற பறவையைப் 'பரம்பத்தையான்' என்று இன்றும் பாமர மக்கள் மிகத் தெளிவாக 'அழைக்கின்றனர்'. இந்தப் பறவையை 'Yellow Wattled Lapwing' என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.

பரம்பிலும், முரம்பிலும், பாலைப் பாங்காவ இடத்திலும் பெரும்பாலும் காணப்படுவதால் இப்பறவையைப் 'பரம்பத்தைய்யன்' என்று கூறுவர்.

மங்களராஜ் ஜான்சன் வெளியிட்ட ஆக்காட்டிப் பாடலில் தான் மஞ்சள்கண் ஆள்காட்டியுடன் சிவப்புக் கண் ஆள்காட்டி கூறப்பட்டுள்ளது என்பது மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.

கிராமத்து மக்கள், மாடு மேய்க்கும் சிறுவர்கள் கூட இயற்கையில் வாழும் ஆள்காட்டிக் குருவி வகைகளைக் கவனித்து நன்கு தெரிந்திருந்தனர் என்பதை நாம் உணர வேண்டும்.

பறவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் கூறிய செய்திகளைக் கூடப் பாமர மக்கள் அனுபவ வாயிலாக இயற்கைச் செய்திகளைத் தெரிந்து, நாட்டுப் பாடல்களில் கூறியுள்ளவர் என்பதைக்கவனிக்க வேண்டும்.

முதல்வரியான 'ஆக்காட்டி ஆக்காட்டி' என்பதே சரியான வரியாகும்.

''ஆக்குருவி ஆக்குருவி' என்பதும்'அக்கண்டி அக்காண்டி'' என்பதும் சிலபகுதிநாட்டு மக்கள் பாடும் வாயில் மாறி வந்த வழக்காகும். ஆதலின் 'ஆக்காட்டி ஆக்காட்டி' என்பதே சிறந்த முதல் வரியாகும். ஆள்காட்டி என்ற பெயரே 'ஆக்காட்டி' என்று பேச்சு வழக்கில் வந்தது.

ஆள்காட்டி என்ற பெயர் எப்படி பாமர மக்களால் இப்பறவைக்குச் சூட்டப்பட்டது என்பது பின்னர் தெளிவாக விளக்கப்படும்.

பெரியசாமித்தூரன் வெளியிட்ட பாடலில் அடுத்து வரும் வரிகளைக் காணலாம்.

''கல்லைத் திறந்து கருங்காட்டுப் பாறையிலே
இட்டது நாலுமுட்டை பெரித்தது மூணுகுஞ்சு''

என்று குறிப்பிடப்படும் பறவை, தெளிவாக- மஞ்சள் கண் ஆள்காட்டிப் பறவையாகும். இந்த மஞ்சள்கண் ஆள்காட்டிப் பறவையை நான் பலமுறை கண்டு ஆராய்ந்துள்ளேன் இந்த மஞ்சள்கண் ஆள்காட்டிப் பறவை கற்குவியலிலும் கற்பாங்கான சந்துகளிலும் முட்டையிடுவது வழக்கமாகும். ஆள்காட்டிப் பறவை கூடுகட்டும் பழக்கமுடையதல்ல.

கற்பாங்கான இடத்தில் முட்டையிடுவதால் 'கல்லைத் திறந்து' என்றும், இலங்கையில் 'கல்லைத் துளைத்து' என்றும்,' சேலம் பகுதியில் 'காட்டைத் தொலைச்சு' என்றும் ஆட்காட்டிப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பாட மாற்றங்களில் உண்மையானதும் சிறப்பானதும் எவை என்று சொல்லமுடியாது.

'கல்லைத் துளைத்துக் கடலோரம் முட்டையிட்டேன் என்று வரும் இதே வரிகளில் கற்பனையே மிகுந்துள்ளது.

கடலோரத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் வலசை வரும் சில ஆள்காட்டி இனப் பறவைகளையும் 'ஆட்காட்டி' (Lawpwing) என்று இலங்கையில் அழைக்கும் வழக்கம் உண்டு. மஞ்சள் நிற ஆட்காட்டியை வலசைவரும் (Migration) ஆட்காட்டியோடு இணைத்துக்

குழப்பியதன் காரணமாகவே 'கல்லைத் துளைத்து காலோரம் முட்டையிட்டேன்' என்ற பாட்டுவரி வந்தது.

உள் நாட்டில் வாழும் ஆட்காட்டியையும் (Rysiden+ Birds) வெளிநாட்டில் இருந்து வலசை வரும்ஆட்காட்டியை யும் இணைத்து, நாட்டு மக்கள் மயங்கிக் குழப்பியதன் காரணமாக இந்த வரிகள் வந்தநாகத் தெரிகின்றது. ஆயினும்,

''காட்டெ தொளச்சுமல்ல
கருங்கரட்டுலே மொடடு இட்டேன்''

என்ற பாடம் இயற்கைக்கும் உண்மைக்கும் ஒத்த தாகும். கரட்டு நிலத்திலே, பரம்பு நிலத்திலே ஆட்காட்டி முட்டையிடுவது இயற்கையான உண்மையான செய்தியா கும்.

ஆள்காட்டிக் குருவி முட்டையிடுவது அரிய விசித்திர மான அறிவியல் செய்தியாகும். இது கூடுகட்டுவதில்லை. கல்லிலும் பாறையிலும் குழிவுகளிலும் பள்ளங்களிலும் முட்டையிடும். கரட்டு முரட்டு நிலத்திலும் குழிவுகளிலும் முட்டையிடும் மஞ்சள்கண் ஆள்காட்டி. பாழ்நிலத்திலும் வறட்டு நிலத்திலும் குழிவானபரம்பு நிலத்திலும் முட்டை யிடுமென்று அறிவியலார் கூறுவர். மற்றும் முட்டையிடும் போது கூழாங்கல்லையும் முரம்புக் கற்குவியலையும் (Head of stones and kankar) முட்டையிடும் சூழலில் சுற்றி வைக்கும். ஆதலின் ஆள்காட்டிக் குருவி கூடுகட்டுவதில்லை கூடுகட்டுவதென்று வரும் வரி சரியற்றதாகும். ஆள்காட்டிக் குருவி பாறையின் சூழலிலும் மண்ணின் சூழலிலும் பொருத்தமாக முட்டைகளை மறைத்து வைப்பதால், ஆள்காட்டிக் குருவியின் முட்டையைக் கண்டு பிடிப்பதே மிகக் கடினமாகும். இது என்னுடைய சொந்த அனு பவம்.

மற்றும் இந்த மஞ்சள் ஆள்காட்டிக் குருவியின் முட்டை வடமலையாளத்தில் செந்நிறமான பரம்புநிலத்திற்கு ஏற்பச் சிவப்புப் புள்ளிகளுடன் மாறிக் காணப்படுவது மிக வியப்பான செய்தியாகும். இவ்வாறு வேறு எந்தப் பறவையும் முட்டையிடும்சூழலுக்கேற்ப—இடத்திற்கேற்ப முட்டையின் நிறத்தை மாற்றி முட்டையிடுவது கிடையாது. நானே வடமலையாள நாட்டுச் சிவப்புப் பரம்பில் ஆள்காட்டியின் சிவப்பு நிறம்கலந்த முட்டைகளைக் கண்டிருக்கிறேன்.

இச்செய்தியை டாக்டர் சலீம்அலி எனும் பறவைநூல் பேரறிஞர் தெளிவாகக் கூறியுள்ளார். (An erythristic type of egg often found which when laid on red lateraite soil proves adaptively coloured to a high degree). ஆதலின்ஆள் காட்டியின் முட்டையை எளிதாகக் கண்டறிவது எளிது அன்று.

ஆள்காட்டியின் முட்டையும் ஆள்காட்டியின் குஞ்சுகளும் சூழலுக்கேற்ப மாறி யிருப்பதால்தான் ஆள்காட்டி தன்னுடைய இனத்தையே பாதுகாத்துக் கொள்ளுகின்றது என்று அறிவியலார் கூறுவர்.

இந்த ஆள்காட்டிக் குருவியை வடமலையாள நாட்டில் நான் சிவப்பான பரம்பில் ( red laterite) கண்டேன். கேரள நாட்டில் பொதுவாக மஞ்சள்கண்ணிஎன்றுபொருத்தமாகக் கூறினும் வடமலையாளத்தில் 'பரம்பத்தையன்' என்று இதை அழைப்பது மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.

வடமலையாளத்தில் இந்த மஞ்சள் ஆள்காட்டி சிவந்த பரம்பு நிலத்தில் வாழ்வதை நான் கவனித்திருக்கிறேன். ஆதலின் வடமலையாளநாட்டு மக்கள் வழங்கும் பெயர் மிகப் பொருத்தமானதே. 'காட்டைத் தொளைச்சு. கல்லைத்தொளைச்சுஎன்றவரிகள் கற்பனைச் செய்திகளே' காட்டிலும் கரட்டிலும் முட்டையிடுவதால் நாட்டு மக்கள் இவ்வாறு கூறினர்.

ஆனால்இவ்வாறு கூறியதற்கும் காரணமுண்டு. ஏனென்றால் காட்டு நிலத்திலும் கரட்டு நிலத்திலும் மஞ்சள் ஆள் காட்டுக்குருவி முட்டையிடும்போது சில கூழாங்கற்களையும் முரம்புக் கற்களையும் முட்டையிட்ட இடத்தில் சுற்றி வைப்பதுண்டு என்று சலீம்அலி கூறியுள்ளார். இதை நானும் கண்டுள்ளேன். இந்தச் செய்தியைக் கண்டே கிராம மக்கள் 'கல்லைத் திறந்து' என்றும், 'காட்டைத் தொளைச்சு' என்றும் கூறினர். ஆட்காட்டிக் குருவி கூழாங்கற்களையும் முரம்புக்கல்லையும் சேர்த்து வைத்து முட்டைகளை மறைத்ததால் நாட்டு மக்கள் இவ்வாறு கூறினர்,

மங்கள்ராஜ் ஜான்சன் காட்டிய பாடலில் 'கல்லைப் போல நான் போட்ட நல்ல மொட்டு நாலல்லோ' என்று கூறியதிலிருந்து கல்லைப்போலச் சூழலுக்கேற்ப ஆள்காட்டி முட்டையிடுவதையும் மக்கள் தெரிந்திருந்தனர் என்பது விளங்குகின்றது.

மேலும்,

'ஆள்காட்டிக் குருவி ஆகாசத்தில்கூடு கட்டுவதுபோல, என்ற பழமொழி போன்ற ஒரு பேச்சுமொழி பொது மக்களிடையே வழங்குகின்றது. வெறும் நம்பிக்கையிலும் கற்பனையிலும் காலங் கழிப்பதைக் குறித்து இவ்வாறு வழங்குவர்.

ஆள்காட்டிக் குருவியின் கூட்டைத் தரையில் பார்க்க முடிவதில்லை என்பதால் ஆகாசத்திலே கூடு கட்டுவதாகக் கூறினர். இந்த வழக்கு மொழியும் ஆள்காட்டியைப்பற்றி மக்கள் அனுபவ வாயிலாக அதன் பழக்க வழக்கத்தைத் தெரிந்து கூறியுள்ளதைக் காட்டுகின்றது.

'ஆட்காட்டிப்பட்சி கடல் மேகம் போயொளிக்கும்' என்பர். ஆள்காட்டிக் குருவி முட்டையிட்டு அடைகாக்கும் போது அதன் சூழலில் கண்டு பிடிக்க முடியாது மறைந்து கொள்ளும். அது போன்றே ஆட்காட்டியின் குஞ்சுகளும்

நிறத்தின் சூழலுக்கு ஏற்ப இருப்பதால் மறைந்து கொள்ளும். இக்காரணத்தால்தான் 'ஆட்காட்டிப் பட்சி கடல் மேகம் போய் ஒளிக்கும்' என்று கூறினர்.

அதற்கடுத்த வரிகளான 'இட்டது நாலுமுட்டை பொரித்தது மூணு குஞ்சு' என்று வரும் பெரியசாமித்தூரன் பதிப்பித்த பாடல்வரிகள் சரியானதாகும். ஏனென்றால் மஞ்சள்கண் ஆள்காட்டி நாலு அல்லது மூன்று முட்டைகளைக் கற்பாங்கான தரையில் போடும். முட்டையின் நிறமும் தரையின் நிறமும் ஒரே தன்மையாக இருப்பதால் முட்டைகளைச் சூழ்நிலையில் கண்டுபிடிப்பது கடினமாகும்.

ஆனால் முட்டையிட்ட செய்தி தமிழ் நாட்டில் வெவ்வேறு இடங்களில் மாறி மாறிப் பாடப்படுகின்றது.

"போட்டது அஞ்சு முட்டை
பொரிச்சது மூணு குஞ்சு"

என்றும்,

'இட்டமொட்டு மூணு மொட்டு
பொரிச்சகுஞ்சு ரெண்டுகுஞ்சு'

என்றும் வழங்குகின்றது. "இட்டது நாலு முட்டை பொரித்தது மூணு குஞ்சு" என்று இலங்கையில் பாடப்படுகின்றது.

இயற்கையில் இந்தப் பறவை முட்டையிடும் வழக்கத்தையும் பாமர மக்கள் கூறும் அனுபவச் செய்தியையும் பார்க்கும்போது "இட்டது நாலு முட்டை பொரித்தது மூணு" என்ற பாடல் வரியே சரியானது என்று தோன்றுகின்றது.

கொங்கு நாட்டில் பாமர மக்களிடையே முட்டை என்பது 'மொட்டு' என்றே வழங்கப்படுவதைக் காணலாம். நாலு முட்டையிடுவதும் நாலும் பொரிப்பதும் உண்டு

என்று பறவை நூலார் கூறுவர், ஒன்று பொரிக்காமல் போவதும் உண்டு ஆனால் இங்கு எடுத்துக்கொண்ட பாடல்கள் மஞ்சள்கண் ஆள்காட்டியைக் குறித்ததே.

அடுத்துவரும் வரிகள் பெரியசாமித்தூரன் பதிப்பித்த பாடல் வரிகளை வைத்துப் பார்த்தால் பலவகையாக மாறி வருவதைக் காண்க.

> ''முதற்குஞ்சுக் கிரைதேடி
> மூணுகாதம் போய்வந்தேன்,
> நடுக்குஞ்சுக் கிரைதேடி
> நாலுகாதம் போய்வந்தேன்
> கடைசிக்குஞ்சிக் கிரைதேடி
> கனதூரம் போய்வந்தேன்''

என்பன தூரன் பதிப்பித்த வரிகள்,

> ''மூத்தகுஞ்சிக் கிரைதேட
> மூணு மலை சுத்தி வந்தேன்

என்று தூரன் பதிப்பித்த வரிகள்,

> ''மூத்தகுஞ்சிக் கிரைதேட
> மூணுமலை சுத்தி வந்தேன்.
>
> எளைய குஞ்சிக்கு எரைதேட
> ஏழுமலை சுத்தி வந்தேன்
>
> கடைசிக் குஞ்சிக்கு இரைதேட
> காடெல்லாம் சுத்தி வந்தேன்.''

என்று 'தாமரை' என்னும் மாத இதழில் வந்த பாடலில் மாறி வருகின்றன. இதே வரிகள் திருநெல்வேலி மாவட்டத்தில்,

''மூத்த குஞ்சுக் கிரை தேடி
முக்காதம் போயி வந்தேன்
எளய குஞ்சுக் கிரை தேட
இருகாதம் போயி வந்தேன்''

என்று வருகிறதுஆனால், இலங்கையில் இந்தப் பாட்டு வரிகள்:

''மூத்தக்குஞ்சுக் கிரை தேடி
முணுமலை சுத்தி வந்தேன்
இளையக் குஞ்சுக் கிரை தேடி
ஏழுமலை சுற்றி வந்தேன்''

என்று வருகின்றன. இந்த வரிகளில் பெரும்பாலும் பொருளில் மாற்றமில்லை. சுரட்டு முரட்டு நிலத்தில் இந்த மஞ்சள் ஆள்காட்டிப் பறவை வாழ்வதால் இப்படிப் பல தூரம் அலைந்ததாகக் கூறினது நாட்டு மக்கள் கற்பனையில் எழுந்ததே என்று கருதலாம்.

'இளைய குஞ்சுக் கிரை தேடி ஏழுமலை சுத்தி வந்தேன்,' 'பார்த்திருந்த குஞ்சுக்கு பவளமலை சுத்தி வந்தேன் என்ற பாடம் இலங்கை நாட்டின் ஆட்காட்டிப் பாட்டின் தனிப் பாடமாகத் தெரிகின்றது.

பெரியசாமித் தூரன் பதிப்பித்த பாடலில் 'வண்ணாரப் பாவி மகன் கண்ணி வைத்தான்' என்று ஏழாவது வரியில் குறிப்பிடப்பட்ட ஆட்காட்டிக் குருவி, மஞ்சள் ஆட்காட்டியா, சிவப்பு ஆட்காட்டியா என்ற ஐயத்தை எழுப்புகின்றது.

''வண்ணாரப் பாவி மகன்'' நீர்நிலைச் சூழலில்தான் கண்ணி வைக்க முடியும். ஆதலின் நீர்நிலைச் சூழலில் வாழும் சிவப்புக்காதிலை ஆட்காட்டியே (Red wattled Lapwing) இங்கு கூறப்பட்டது என்பது தெளிவாகின்றது.

ஆயினும் முதலில் நாட்டு மக்கள் மஞ்சள் ஆட்காட்டியையும் சிவப்பு ஆள்காட்டியையும் தெளிவாகத் தெரிந்து

கொள்ளாததால் 'வண்ணாரப் பாவி மகன்' கண்ணிவைத்த தாக இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

இதே வரிகளுக்கு மாற்றுப் பாடலாகக்

"கானக் குறத்தி மகன்
கண்டிருந்து கண்ணிவச்சான்"

என்றும்

"கானக் குறத்தி மகன்
கண்ணிபோட்டுப் பிடிச்சானே"

என்றும் தமிழ் நாட்டில் பிற பகுதிகளில் பாடப்படும்வரிகள் பொருத்தமாக உள்ளன. ஏனெனில் மஞ்சள் கண் ஆள் காட்டியைப்பிடித்தவன் 'வண்ணாரப் பாவிமகனாக' இருக்க முடியாது. கானக் குறத்தி மகனாகவே இருக்க வேண்டும். ஏனெனில், மஞ்சள்கண் ஆள்காட்டி கரம்பிலும், பரம்பிலும், முரம்பிலும் வாழ்வதாகப் பறவை நூலார் கூறுவர். ஆதலின் 'வண்ணாரப் பாவி மகன்' மஞ்சள் கண் ஆள்காட்டியைப் பிடித்திருக்க முடியாது. கண்ணிபோட்டுப் பிடித்தவன் கானக் குறத்தி மகனாகவே இருக்கவேண்டும்.

ஆதலின் கானக் குறத்தி மகன் கண்ணி வச்சுப் பிடித்த தாகக் கூறிய வரிகள் திருநெல்வேலிப் பகுதியிலும் இலங்கையிலும் வழங்கியிருப்பதால் இந்த வரிகள் சரியானவை என்று கருதலாம். "வண்ணாத்திப் பாவி மகன்" கண்ணீ வைத்துப் பிடித்த ஆட்காட்டிப் பறவைச் சிவப்புக் கண் ஆட்காட்டியாகவே இருக்க முடியும். ஏனெனில் இந்தச் சிவப்புக் கண் ஆட்காட்டி நீர்நிலைச் சூழ்நிலையில் காணப் படுகின்றது. (In open well-watered country, sometimes in grassy galdes with rain puddles and pig wallows) பறவை நூலார் கண்டு பிடித்தபடி நீர்நிலைச் சூழலில் இந்தச் சிவப்புக் கண் ஆள்காட்டிப் பறவை வாழ்வதையும் முட்டையிடுவதையும் தெளிவாக நாட்டு மக்கள் தெரிந் திருந்துள்ளனர்.

பெரியசாமித் தூரன் காட்டிய பாடலில்,

''கல்லைத் திறந்து கருங்காட்டுப் பாறையிலே

இட்டது நாலுமுட்டை பொரித்தது மூணுகுஞ்சு''

என்ற வரிகள் இரண்டாவது மூன்றாவது வரியாக வருகின்றன. இந்த வரிகளில் வியப்பான செய்தி என்னவென்றால் 'இட்டது நாலு முட்டை' என்பதாகும்.

ஆக்காட்டிப் பறவைகளில் பாமர மக்கள் நன்கு தெரிந்த மஞ்சள் கண் ஆள்காட்டியும் சிவப்புக் கண் ஆள் காட்டியும் நான்கு முட்டைகளைத்தான் பெரும்பாலும் இடுவதையும் கருங்காட்டுப் பாறைகளிலும் கல்லிலும் முட்டையிடுவதையும் நாட்டுப் பாடல் வாயிலாகக் கூறியது பறவை நூலார் கூறிய செய்திகளோடு ஒத்திருப்பது மிக அரிய செய்தியாகும்.

ஆயினும் பாமர மக்கள் மஞ்சள் கண் ஆள்காட்டியையே பெரும்பாலும் கண்டு தெரிந்திருந்ததால் ''கல்லைத் திறந்து கருங்காட்டுப் பாறையிலே இட்டது நாலு முட்டை, பொரித்தது மூணு குஞ்சு'' என்ற நாட்டுப்பாடல் வரி வழங்கிற்று. இந்த ஆள்காட்டிக் குருவியும் நாலு முட்டை இடுவது தெளிவாகவும் உறுதியாகவும் பறவை நூலார் தெரிந்த செய்தியாகும்.

நாலு முட்டையிட்டது என்று கூறியது சரியான இயற்கைச் செய்தியாகும்.

ஐந்து முட்டையிட்டது என்று அயன் பொம்மைய புரத்தில் பாடப்படுவதாகக் காட்டப்படும் வரி பொருத்த மற்றதாகத் தெரிகின்றது.

மூன்று முட்டையிடலாம், நாலு முட்டையிடலாம். மூணு குஞ்சு பொரிக்கலாம். நாலு குஞ்சும் பொரிக்கலாம் இந்த வேற்றுமைகள் இயற்கையில் நிகழும் செய்திகளாகும்

இந்தப் பாட மாற்றங்களைப் பெரிதுபடுத்த வேண்டிய தில்லை. ஆதலின் பொதுவாக "இட்டது நாலு முட்டை பொரித்தது மூணுகுஞ்சு" என்ற வரியே சரியாக. இயற்கைச் செய்திக்கொத்த பாடல் வரியாகத் தெரிகின்றது.

அடுத்துவரும் ஆக்காட்டிப் பாடல் வரிகளைக் காண லாம்.

"முதற்குஞ்சுக் கிரைதேடி
மூணுகாதம் போய்வந்தேன்
நடுக்குஞ்சுக் கிரைதேடி
நாலு காதம் போய் வந்தேன்
கடைசிக் குஞ்சுக் கிரைதேடி
கன தூரம் போய் வந்தேன்"

என்று பெரியசாமித் தூரன் காட்டிய வரிகள் சரியான வையே என்று தோன்றுகின்றது. இதில் இயற்கையான உண்மைச் செய்தியைவிட மக்களுடைய கற்பனையே மிகுந் துள்ளதைக் காணலாம். உண்மையான இயற்கைச் செய்தி யையும் கற்பனையையும் சேர்த்துக் கூறுவது நாட்டுப் பாடல்களின் இயல்பேயாகும். இந்த வரிகள் பலவகையான பாட மாற்றங்களுடன் வருவதைக் காணலாம்.

"மூத்த குஞ்சுக்கு இரைதேட
மூணுமலை சுத்தி வந்தேன்
எளைய குஞ்சுக் கிரைதேட
ஏழுமலை சுத்தி வந்தேன்
கடைசிக் குஞ்சுக் கிரைதேட
காடெல்லாம் சுத்தி வந்தேன்"

என்று 'தாமரை' இதழில் வந்த பாடல் காட்டியுள்ளது இதே வரிகள் திருநெல்வேலி மாவட்டத்தில்,

"மூத்த குஞ்சுக் கிரைதேட
முக்காதம் போயி வந்தேன்
எளையக் குஞ்சுக் கிரைதேட
இருகாதம் போயி வந்தேன்"

என்று வருகின்றது. இலங்கையில் இதே பாட்டு வரிகள்,

"மூத்த குஞ்சுக் கிரைதேடி
மூணுமலை சுத்தி வந்தேன்
இளைய குஞ்சுக் கிரைதேடி
ஏழுமலை சுற்றி வந்தேன்
பார்த்திருந்த குஞ்சுக்கு
பவளமலை சுற்றி வந்தேன்"

என்று வருகின்றன. இந்த வரிகள் எல்லாம் நாட்டார் வழக்காற்றியலில் இயற்கையாக வருபவையே. மஞ்சள் கண் ஆட்காட்டி கரடுமுரடான நிலத்திலும் கரம்பிலும் முரம்பிலும் வாழ்வதால் இந்தப்பறவை உண்ணும் வெட்டுக் கிளி முதலிய பூச்சிகளைத் தேடி மிக தூரம் அலைவது இயற் கையே. இந்த இயற்கைச் செய்தியையே இருகாதம், முக் காதம், நாலுகாதம் போய் வந்தேன், மூணுமலை,ஏழுமலை சுத்தி வந்தேன் என்று பாடியது நாட்டார் மக்களின் கவி நயம் நிறைந்த கற்பனைச் செய்தியேயாகும்.

ஆதலின் இந்த வரிகளில் மலையைச் சுற்றி வந்ததாகக் கூறிய வரிகள் அவ்வளவு பொருத்தமாக இல்லை. 'காதம் போய் வந்ததாகக்' கூறிய வரிகள் ஓரளவு பொருத்தமாக உள்ளன.

மூத்த குஞ்சு, இளையகுஞ்சு, (நடுக்குஞ்சு) கடைசிக் குஞ்சு என்ற பெயர்கள் பொருத்தமாகவே உள்ளன. ஏனென்றால் மஞ்சள்கண் ஆள்காட்டியும் சிவப்புக்கண் ஆள்காட்டியும் நான்கு முட்டைகளையே பெரும்பாலும் இடுகின்றன.

இந்த வரிகளுக்கும் அடுத்த வரிகளைக் கவனிக்கலாம்.

''காலு ரெண்டும் கண்ணிக்குள்ளே
சிறகு ரெண்டும் மாரடிக்க
நான் அழுத கண்ணீரு''

என்று வரும் வரிகளில் ஓர் உண்மையான இயற்கைச் செய்தி உள்ளதைக் கவனிக்க வேண்டும்!

''காலுரெண்டு கண்ணிக்குள்ளே
சிறகு ரெண்டு மாரடிக்க''

என்றும்,

''காலிரண்டும் கண்ணியிலே
ரெக்க ரெண்டும் படபடக்க''

என்றும் நாட்டார் பாடலில் வருகின்றது. கண்ணியிலே அகப்பட்டு மாரடிச்சதாகக் கூறப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கதாகும்.

ஆயினும் இந்த ஆள்காட்டிப் பறவை வேட்டைக்காரன் கண்ணியில் எளிதில் அகப்படாத பறவையாகும். ஆள் காட்டி மிக மிகக் கண்காணிப்புடன் முட்டைகளையும் குஞ்சுகளையும் காப்பாற்றும் என்று அறிவியலர் கூறுவர். பறவைகளை வேட்டையாடும் வேட்டுவனையும் கெட்டிக் காரத்தனமாக ஏமாற்றும் பறவை என்று ஆள்காட்டியைக் கூறுவர்.

இந்தப்பறவையின் முட்டைகளையோ குஞ்சுகளையோ கண்டுபிடித்து வேட்டைக்காரன் அணுகினால் கிட்டே வராதபடி பாதுகாக்க ஒரு கால் ஒடிந்து போனது போலவும் ஓர் இறக்கை ஒடிந்து போனது போலவும் பாசாங்கு செய்து தப்பிக்கும் அரிய பறவை இது,-என்று பறவை நூலறிஞர் கூறுவர். ஆதலின் 'சிறகு ரெண்டும் மாரடிக்க' என்று கூறியது கண்ணியில் பிடிக்காததற்கு முன்னரே ஆள்காட்டிப் பறவை செய்த பாசாங்கை அனுபவ வாயிலாக உணர்ந்த

நாட்டார் மக்கள் கற்பனையாக இப்படிக்கூறினர் என்பதை உணர வேண்டும்.

ஆட்காட்டி என்ற பெயரை நாட்டு மக்கள் இந்தப் பறவைக்குச் சூட்டினர். ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டில் வேட்டையாடிய போது இந்தப் பறவையினால் பெருந் தொல்லை அடைந்தார்கள். வேட்டையாளரைப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் காட்டிக் கொடுக்கும் பறவை என்று கருதினர்.

சிவப்பு ஆள்காட்டி கத்தும் ஓசையை, ஆங்கில மொழியில் 'Did ye do it' அல்லது 'pity to do it' என்று காதில் கேட்பதாகக் கற்பித்துக் கூறினர்.

இந்தப் பறவையின் கூச்சல் மிகுந்த இரைச்சலுடன் நெடுந்தூரம் ஓசை கேட்கும்படி இருக்கும் என்பர். இதனால் இந்தச் சூழ்நிலையில் இருந்த பிற பறவைகளோ, விலங்குகளோ இதன் கூச்சலைக் கேட்டு வேட்டையாளனைக் கண்டு பிடித்து ஓடித் தப்பித்துக் கொள்ளும். இந்தக் காரணத்தாலேயே இந்தப் பறவைக்கு ஆளைக்காட்டும் பறவை என்ற பொருளில் ஆள்காட்டி என்ற பெயரை நாட்டு மக்கள் சூட்டினர்.

"ஆட்காட்டி இருப்பது தெரியாமல் திருடப் போகிறவன் கெட்டிக்காரனாக இருக்க முடியாது" என்று வழங்கும் நாட்டார் வழக்கு, இயற்கையான உண்மைச் செய்தியைக் கூறும் சிறப்பைக் காட்டுகின்றது.

ஆள்காட்டி இருப்பது தெரியாமல் ஒருவன் திருடப் போனால் மாட்டிக் கொள்வான். ஆதலின் அவனுக்குப் பின்னால் அவன் காலடியைப் பிடித்துப் போகிறவன் கெட்டிகாரன் என்று நாட்டார் மக்கள் கூறினதும் உண்மையான இயற்கைச் செய்தியாகும். ஏனென்றால் பின்னால் வருப

வன் மாட்டிக்கொள்ள மாட்டான். முதலில் போன திருடனை ஆள்காட்டிப் பறவை காட்டிக்கொடுத்துவிடும் பின்னால் வருபவன் தப்பித்துக் கொள்வான்.

ஆள்காட்டி முட்டையிட்ட இடத்தில், குஞ்சு பொரித்த இடத்தில் அந்த இடத்தின் சொந்தக்காரன் நெருங்கினால் கூட அவனையும் ஆள்காட்டிக் குருவி காட்டிக் கொடுத்து விடும் என்பதையே ''ஆள்காட்டி சொந்தக் காரனையும் திருடனையும் பிடித்துக் கொடுக்கும்'' என்று கிராம மக்கள் உண்மையாகக் கூறினர்.

ஆள்காட்டிக் குருவிக்குச் சொந்தக்காரனையும் திருடனையும் பிரித்துணர முடியாது. ஆதலின் யார் நெருங் கினாலும் கூச்சலிட்டுக் காட்டிக் கொடுக்கும். இந்தக் கூச்சல் பலிக்காவிடில் சிறிது தூரம் சென்று தனது இறக்கை ஒடிந்தாற்போலப் பாசாங்கு செய்து தான் போட்ட முட்டையையோ பொரித்த குஞ்சுகளையோ வேட்டைக்காரன் கண்டு பிடிக்காதபடி ஏமாற்றும். இந்தச் செய்தியைச் சங்க காலத்திலேயே பண்டைத் தமிழன் தெரிந்து வைத்திருந்தான் என்பது மிகவும் வியப்புக் குரிய தாகும்.

நான் எழுதிய 'சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் என்னும் நூலில் 'கணந்துள்' என்ற பெயருடன் வழங்கும் பறவை ஆள்காட்டி என்பதை முதன் முதலில் இரு சங்கப் பாடல்களில் காணப்படும் உள்சான்றுகளைக் காட்டி விளக்கியுள்ளேன். இதையே வைத்துக் கொண்டு மங்கள் ராஜ் ஜான்சன் அவர்கள் நான் முதலில் கண்டு பிடித்ததைக் குறிப்பிடாது தினமணிக்கதிரில் விளக்கம் கொடுத்தார் ஆனால் இந்த விளக்கம் முழுமையாக இல்லை.

நான் இரண்டு சங்கப் பாடல்களைக் காட்டியுள்ளேன். மங்கள் ராஜ் ஜான்சன் ஒரு பாடலையே காட்டியுள்ளார்.

ஆனால் விளக்கமும் சரியாக இல்லை.

"பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ
நெடுங்கால் கணந்துளம் புலம்புகொள் தெள்விளி
சுரஞ்செல் கோடியர் கதுமென இசைக்கும்"
—நற்றிணை 212

ஆற்ற யலிருந்த விருந்தோட் டஞ்சிறை
நெடுங்காற் கணந்து ளாளறி வுறீஇ
ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கான நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்தி சினாரே.
—குறுந்தொகை 350

'பார்வை (Decoy) ஒற்றனை வைத்து வேட்டுவன் அமைத்த வலையைக் கண்டுவெருவி, நெடிய காலையுடைய கணந்துள் பறவை தான் தனிமையிலிருந்து கத்தா நின்ற ஓசை, என்று முதற்பாட்டுக்கு உரை கூறப்பட்டுள்ளது. பார்வை என்பது பழக்கப்பட்ட பறவைகளையும், விலங்குகளையும் வைத்துமற்றப் பறவைகளையும் விலங்குகளையும் வேட்டுவர்கள் கவர்ந்து பிடிப்பதற்குப்பயன்படுத்துவதாகும். ஆதலின், பார்வை என்ற பழக்கப்பட்ட ஆட்காட்டியைக் காட்டி வலைவிரித்து ஆட்காட்டிப் பறவைகளை வேட்டையாடப்பார்த்த வேட்டுவனையும் இனங்கண்டு நெடுங்காலையுடைய கணந்துள் பறவை தனிப்பட்ட தெள்ளிதான எச்சரிக்கையான கூச்சலை இட்டதை வறட்சியான காட்டு நிலத்தில் சென்ற கூத்தாடிகள் கேட்டனர். இவ்வாறு கூறியது தெளிவாக மஞ்சள் கண் ஆள்காட்டிக் குருவியை விளக்கியதாகும்.

பார்வைப் பறவையைக் கொண்டு வேட்டையாடிய சங்க நூற் செய்தி மங்கள்ராஜ் ஜான்சன் காட்டியுள்ள ள்காட்டிப் பாடலில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்

''என் பொன்னுக் குஞ்சுக்கிரை
தேடிப் போகையிலேப்
பருவக்காரப் பாவி வெச்ச
கண்ணியிலே கால் மாட்ட''

என்று வரும் வரிகளில், 'பருவக்காரப் பாவி' என்ற பெயர், 'பார்வைக்காரப் பாவி' என்று இருக்க வேண்டும்.

பார்வையை வைத்து ஆள்காட்டியைப் பிடிக்கக் கண்ணிவச்ச செய்தியை இந்தப் பாடல் வரிகள் கூறியுள்ளன. இதை மங்கள்ராஜ் ஜான்சன் விளக்கவில்லை, இந்த முக்கியமான செய்தியைக்கூடச் சங்கப்பாடல் கூறியதைக் கவனிக்கவில்லை.

ஆள்காட்டி கொடுத்த எச்சரிக்கைக் குரலானது கூத்தாடிகள் இசைக்கருவியால் விரைவாகத் திடுமென ஓசையெழுப்பும் குரலுடன் சேர்ந்து ஒலித்ததாகக் கூறப்பட்டுள்ளதைச் சங்கப் பாடலில் காணலாம்.

**புலம்பு** என்ற சொல் தனிமையைக் குறித்ததால் **'புலம்பு கொள் தெள்விளி'** என்பது ஆள்காட்டியின் தனித்த தன்மையுடைய (Exceptional) உரத்த குரலையே குறிப்பிட்டது தெளிவாகின்றது.

**சுரம்** என்பது வறட்சியான காட்டு நிலமாகும். இந்தக் காட்டு நிலத்தில் சங்கப்பாடல் கூறும் ஆட்காட்டி மஞ்சள் கண்ஆட்காடடிப் பறவையே என்பதில் அய்யமேயில்லை.

குறுந்தொகைப் (350) பாடலில் ஆற்றயலில் இருந்ததாகக் கூறப்பட்ட நெடுங்காலையுடைய கணந்துள் பறவை சிவப்பு ஆள்காட்டியாகவே இருக்கும். இந்தப் பறவைதான் நீர்நிலைக்கருகில் வாழ்வது. இந்தப் பறவை தனக்கு ஊறும் கேடும் தருகின்ற வேட்டுவர்கள் இருப்பதை உணர்த்தி அவ்வழியாகச் சென்ற வழிப்போக்கர்களை எச்சரிக்கை செய்து, அந்த இடத்தைவிடடு விரைவில் நீங்கச் செய்யும்

என்று குறுந்தொகைப் பாட்டு கூறினது சிறந்த இயற்கைச் செய்தியாகும்.

'ஆள் அறிவுறீ இ' என்று வரும் வரி தெளிவாக ஆளைக் காட்டினதைக் குறித்து இந்தப் பாடலில் வந்துள்ளது கவனிக்கத்தக்கது. ஆதலின் சங்க காலத்திலேயே ஆளைக் காட்டும் பறவையாக இந்தப் பறவையைக் கருதினர் என்பது தெரிகின்றது.

இது நெடிய காலையுடைய பறவை என்றுஇரு பாடல்கள் கூறுவதையும் கவனிக்க வேண்டும், இதன் கால் நீளமாக இருப்பதைப் பறவை நூலாரும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். பறவைகளின் அளவைப் பார்க்கையில் இதன் கால்கள் மிக நீளமானதாகும் என்பதில் ஐயமில்லை.

மங்கள்ராஜ் ஜான்சன் காட்டியுள்ள பாடலில் ஆவரம் பூ ஆள்காட்டியுடன் 'அரளிப் பூ ஆள்காட்டி' என்று சிவப்பு ஆள்காட்டியை வர்ணித்துள்ளது சிறப்பான செய்தியாகும். இந்தப் பெயர் வேறு எந்த ஆள்காட்டிப் பாடல்களிலும் காண முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆவரம் பூ ஆள்காட்டி, அரளிப் பூ ஆள்காட்டி என்ற பெயர்களை அறிவியற் பெயர்களாக இன்று நன்றாகப் பயன்படுத்தலாம். மங்கள்ராஜ் ஜான்சன் காட்டிய பாடல் ஆள்காட்டிப் பறவையின் மூலப்பாடலை அடிப்படையாகக் கொண்டு இரண்டு ஆள்காட்டிகளையும் நன்கு தெரிந்து கவிதை நயத்துடன் பின்னர் பாடியதாகும். மூலப் பாடல் மஞ்சள் ஆள்காட்டியை மட்டும் குறித்துப் பாடினதாகலாம்

எளிதில் கண்ட மஞ்சள் ஆள்காட்டியை முதலில் பாடி, பின்னர் அரிதாகக் கண்ட சிவப்பு ஆள்காட்டியையும் இனங்கண்டு பாடினர் என்று கருதலாம். ஆயினும் சங்கப்பாடல்

களில் இந்த இரண்டு ஆள் காட்டிக் குருவிகளும் பாடப் பட்டதை மங்கள்ராஜ் ஜான்சன் கவனிக்கவில்லை.

ஆள்காட்டி அழுத கண்ணீர் பெருகிப் பாய்ந்த விதத்தை மிகச் சிறந்த கவிதை நயத்துடன் பாடியுள்ள தைக் காணலாம். இந்த வரிகள் வட்டாரப் பாடல்களில் சிறிது மாற்றத்துடன் மாறிவருவதைக் காணலாம். மங்கள்ராஜ் ஜான்சன் காட்டியுள்ள பாடலில் அழுத கண்ணீர் பற்றிய கற்பனைச் செய்தி இன்னும் கூடுதலாக உள்ளதையும் காணலாம்.

ஆள்காட்டி அழுத கண்ணீரைப்பற்றிப் பாடிய நாட்டுப் பாடல் வரிகள் குழந்தைத் தாலாட்டுப் பாடல்களிலும் ஒன்றே போல வருவதால் தாலாட்டுப் பாடல் வரிகளையே ஆள்காட்டிப் பாடலிலும் இணைத்ததாகக் கருதலாம். நாட்டார் பாடல்களில் குழந்தையைப் பற்றிய தாலாட்டுப் பாடல்கள் முதலில் தோன்றியிருக்க வேண்டும். இயற்கையைப்பற்றி நுண்ணிய அறிவியற் செய்திகளை அனுபவ வாயிலாகத் தெரிந்து பாடிய ஆட்காட்டிப் பாடலில் 'அழுத கண்ணீர்' பற்றிய வரிகள் முன்னர் தோன்றிய தாலாட்டுப் பாடல்களிலிருந்து பின்னர் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

நாட்டார் பாடல்கள், வட்டாரங்களில் வழங்கிய வண்ணம் வெளியிடப்பட்டால் மூலப் பாடம், உண்மைப் பாடம்—நாட்டார் பாடல்களில் எவை எவை என்று கண்டு கொள்ள வழிகோலும். அதன் வழி நாட்டார் பாடல் களின் அருமை பெருமைகளை உணர முடியும். இயற்கைச் செய்திகளை உள்ளது உள்ளபடியேயும் தன்மை நவிற்சி யுடனும் மிக மிகப் பின்னர் கண்டு பிடித்த அறிவியல் செய்திகளையும் ஒத்துக்கூறும் இந்த ஆள்காட்டிப் பாடல் கள் நாட்டார் பாட்டுக்களில் மிகச் சிறப்பானவையும் தனித்தன்மையும் உடையனவாகும். (unique).

# 2
# கரிக்குருவி திருவிளையாடல்

'கரிக்குருவிக்கு அருள் புரிந்த திருவிளையாடல்' என்ற திருவிளையாடல் புராணக் கதை நாட்டுப்புற மக்கள் வாயில் வழங்கிய கதையிலிருந்து புனையப்பட்டு இலக்கியமானதாகத் தெரிகின்றது.

வலியன் என்று இன்று இக்குருவி அழைக்கப்படுவதற்கு அமைந்த ஒரு காரணத்தைப் போல இந்தத் திருவிளையாடல் கதை உள்ளது.

இந்தக் குருவியே மயிலை நாதர் நன்னூல் உரையில் வயவன் என்று அழைக்கப்பட்டுள்ளது.

வயவன் என்ற பெயரும் வலியன் என்ற பெயரும் பொருளில் ஒத்துள்ளன.

இயற்கையில் இந்தப் பறவை சிறியதாயினும் பெரிய பறவைகளான கழுகுகளையும் காக்கைகளையும், தான் கூடுகட்டியஇடத்தை நெருங்காதபடி உரத்த குரலுடன் பாய்ந்து விரட்டும் வீரம்மிக்கது என்று பறவை நூலார் கூறுவர். இதன் காரணமாகவே மற்ற வலிமையற்ற பெரிய பறவைகள்கூட வலியன் குருவிகள் கட்டிய கட்டிற்கடியில் கூடுகட்டும் என்று கண்டுபிடித்துள்ளனர். மற்ற பறவைகளுக்குப் பாதுகாப்பாக வலியன் குருவி இருப்பதைக் கூறியுள்ளனர்.

வலியன் குருவியின் சினத்திற்கு அஞ்சி இதைவிடப் பெரிய பறவைகளான கழுகு முதலியவை பயப்படுவதைக் கண்டறிந்த ஆப்பிரிக்க காங்கோ நாட்டு மக்கள் இதைச் 'சினப்புலி' (Angrv Leopard) என்று அழைக்கின்றனர்.

சங்க நூலில் வயமான் என்ற பெயர் புலியைக் குறிக்கும். வயவன் என்ற சங்க காலப் பெயர் புலியையும் குறிக்கலாம்; கரிக்குருவியையும் குறிக்கலாம்.

இந்தியாவில் வாழும் 'குக்கி' (Kuki) என்ற மலைக்குடிகளின் முன்னாள் அரசன் தனது அரசுச் சின்னமாகக் கருங்குருவி இறக்கையைத் தலையில் அணிவதுண்டாம்.

திருவிளையாடற் புராணத்தில் 'கோக்கயம்' என்ற பெயர் வருவதைக் காணலாம். பறவைகளின் அரசன் என்ற பொருளில் கோக்கயம் என்றழைக்கப் பட்டது. கயவாய், கயவு என்றும் கரிக்குருவி அழைக்கப்பட்டது. பெரிய வாய் என்று அழைத்தது இக்குருவியின் உரத்த குரலைக் குறித்ததாகும்.

இக்குருவியின் அரசத் தன்மையைக் குறித்தே இன்றும் இந்தக் கரிக்குருவியைக் 'காக்கத் தம்புரான்' 'காக்கத் தம்புராட்டி' என்று மலையாளத்தில் அழைக்கின்றனர். தம்புரான், தம்புராட்டி என்ற பெயர்கள் அரசனையும் அரசியையும் குறிக்கும். பீமராஜன் என்றும் மலையாளத்தில் அழைக்கின்றனர். ஒரு யானையையும் இராய்ஞ்சிச் செல்லும் என்ற பொருளில் **யானை ராஞ்சி** என்றும் மலையாளத்தில் அழைக்கப்படுகின்றது. இதன் உரத்த போர்க்குரலைக் கேட்டு, 'காடு முழக்கி' என்றும் மலையாளத்தில் அழைப்பர்.

இன்றைய மலையாளப் பெயர்களான காக்கைத் தம்புரான், காக்கைத் தம்புராட்டி என்ற பெயர்கள் திருவி

ளையாடற் புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை என்பதில் ஐயமில்லை.

தமிழ் விடுதூதில்,

''கோகிலத்தை நான் விரும்பேன்.
கோகிலமும் காக்கையினம்
ஆகிவலியானுக் கஞ்சுமே''

என்று வலியன் பறவையின் வீரம் பாடப்பட்டுள்ளது.

காக்கைத் தம்பிரான், காக்கைத் தம்பிராட்டி என்ற மலையாளப் பெயர்கள் தோன்றிய காரணம் தமிழ் விடு தூதுப் பாட்டு வரிகளிலிருந்து விளங்குகிறது.

**கதைகளின் பிறப்பு**

கரிக்குருவி சோமசுந்தரப் பெருமானால் உபதேசம் பெற்று அவன் அடிநிழல் அடைந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறும் வரலாறு, நாட்டுமக்கள்இந்தப் பறவையை நன்கு கவனித்து இதன் வலிமையை உணர்ந்து படைத்த கதையின் அடிப்படையாக வந்ததாகத் தெரிகின்றது.

திருவிளையாடற் புராணத்தில் சில கதைகள் புத்த சாதகக் கதையைப் பின்பற்றியதாகும். கடல் சுவற வேலெறிந்த திருவிளையாடல் சேரன் செங்குட்டுவனுக்குச் சங்ககாலத்தையொட்டி வழங்கப்பட்டதால் இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு பாண்டியனுக்குப் படைக்கப்பட்ட கதையாகத் தெரிகின்றது.

வலைவீசின திருவிளையாடல், வளையல் விற்ற திருவிளையாடல், வங்காள நாட்டுக் கிராம மக்களின் திருவிழாக்களில் இன்றும் சடங்காக நடைபெறுகின்றதைக் காணும் போது, இந்தக் கதைகள் திருவிளையாடலாக மாறுவதற்கு முன் இந்திய நாட்டுப் பாமரர் கதைகளாக வழங்கியிருக்கலாம் என்று தோன்றுகின்றது. ஆதலின் திருவிளையாடல்களில் சில தமிழ்நாட்டுக்கே உரியவை.

சில புத்தசாதகக் கதையைப் பின்பற்றியவை. சில இந்திய நாட்டார் மக்கள் பண்பாட்டுக் கதைகளைப் பின் பற்றியவை என்று தெரிகின்றது. இக்கதைகளே பிற்காலத்தில் புராணமாக்கப்பட்டு சிவனின் பெருமையைக் குறிக்கும் திருவிளையாடல்களாக மாறின என்பதைக் காணலாம்.

கரிக்குருவிக்கு அருள் புரிந்த திருவிளையாடலும் நாட்டார் பண்பாட்டுக்கதையில் தோன்றியதாகும். காக்கையை வென்ற கரிக்குருவியைப் பார்த்துப் படைத்த கதையாகும்.

சிவபெருமான் காக்கையை வெல்லும் வீரத்தை கரிக் குருவிக்கு மந்திர உபதேசம் செய்ததாகத் திருவிளை யாடல் புராணம் கூறுகிறது. இயற்கையிலேயே வீரமுடைய, அரசத் தன்மையுடைய கரிக்குருவிக்கு சிவபெருமானின் அருளால் கோக்கயத் தன்மை வந்தது என்று படைத்துப் புராணமாக்கினர்.

மலையாளப் பெயர்கள் பாமர மக்களின் வாயில் இன்றும் வழங்குவதால் காக்கையைக் கருங்குருவி வென்ற கதை, காக்கைக்கும் அரசனான கதை, நாட்டார் மக்களின் வாயில் வழங்கிய கதையாகத் தெரிகின்றது. இந்தக் கருங் குருவிகள் விடியற் காலத்தில் பேசுவது போல குரலிடும்.

ஆண்டாள் திருப்பாவையில்,

"கீசுகீசென் றானைச்சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ
பேய்ப்பிள்ளாய் .. ... ... ..."

என்று வரும் வரிகளில் விடியற்காலச் செய்தியாகக் கூறப்பட்டுள்ளது.

ஆண்டாள் திருப்பாவைக்குப் பிற்பட்ட திருவிளையாடல் புராணங்களில் இந்த இயற்கைச் செய்தியையே சோம

சுந்தரக்கடவுள் உபதேசித்த 'மிருத்தியுஞ்சய' மந்திரத்தை, சாகா வழிக்குதவும் மந்திரத்தை இந்தக் கரிக்குருவிகள் ஜபிப்பதாகக் கூறியுள்ளனர். இதைக் காஞ்சிப் புராணமும் கூறியுள்ளது. இந்தக்கரிக்குருவிக் கதை கல்லாட்டத்திலும் வருகின்றது.

ஆதலின் திருவிளையாடல் புராணக்கதைகளைப்புராண மாகக் கருதாமல் அக்கதைகளின் கருக்கள் (Sources) எங்கிருந்து வந்தன என்று ஆராய்வது உண்மையைப் புலப்படுத்தும் என்பதை உணர வேண்டும்.

**பயன்படுத்திய நூல்கள் :**


1. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்— செல்விநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றியது.

2. திருவிளையாடற் புராணம்—பரஞ்சோதி முனிவர் இயற்றியது.

3. கல்லாடம்

4. தமிழ்விடு தூது

5. The Birds of India- Dr. Salim Ali and Dillon Riply (O. U. P.)

## கட்டுரை 2



கரிக்குருவி

# 8

# சங்க நூல்களில் முயிறு

முயிறு எனும் ஒரு தனிப்பட்ட எறும்பைப் பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன.

''பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி நாரை உரைத்தலிற் செந்நெல்
விரவுவெள்ளரிசியின் தாஅம் ஊரன்''

—நற்றிணை 180

வயலருகிலுள்ள பலா மரத்தில் முயிற்றெறும்புகள் முட்டையிட்டு மொய்த்துள்ள கூடுகளை நாரை உறிஞ்சுதலாலே அம் முயிறுகளும் அவற்றின் முட்டைகளும் சிவந்த நெல்லோடு கலந்த அரிசி யுதிர்ந்ததுபோல் பரவும் என்று நற்றிணை கூறியுள்ளது. செந்நெல், முயிறு என்ற எறும்புக்கும் அதன் அரிசி எறும்பின் முட்டைகளுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளதாகக் கூறுவர்.

''பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி யெருமை கதிரொடு மயக்கும்''

—ஐங்குறுநூறு—99

பலா மரத்தில் காணப்படும் முயிறுகள் மூசும் கூட்டைப் பற்றி ஐங்குறுநூறு கூறியுள்ளது.

இயற்கையில் எறும்பினங்கள் பெரும்பாலும் புற்றில் வாழ்கின்றன. மரப் பொந்திலும், துளையிலும் வாழ் கின்றன.

ஆனால், இனக்கூட்டு வாழ்க்கையினை உடைய தனித்த ஒருவகைஎறும்புகள் இலைகளை ஒருங்குசேர்த்துக் கூடாகத் தைத்துக் கூடு கட்டி வாழ்கின்றன. இந்த எறும்பினம் அரிதாகக் காணப்படுகின்றது. இந்த இன எறும்புகள் பலா மரத்தில் கூடுகள் கட்டி வாழ்வதை நானே நேரில் கண்டிருக்கிறேன்.

நான் மாகியில் (Mahe) ஆட்சித் தலைவராக Administrator) இருந்தபோது **தர்மடம்** என்ற தீவுக்கு ஆராய்ச்சி செய்ய விசைப்படகில் சென்றேன். அங்குள்ள சிறிய குன்றில் குறுங்காடு இருந்தது. அக்காட்டில் பலா மரங்கள் நிறைய இருந்தன. அந்த மரங்களில் முயிற்றெறும்புகளின் கூடுகள் நிறைய இருந்தன. அவை நெருங்கியும் இருந்தன. எனக்குத் துணையாக வந்தவர் இந்த எறும்புக் கூட்டில் எனது உடல் படாதவாறு கொம்புகளை விலக்கிக் கூட்டிச் சென்றார்.

எறும்புக் கூட்டில் உடல் பட்டால் கூட்டமாகக் கொட்டும் என்றும், கடுமையான வலிதரும் என்றும் அவர் கூறினார். கூட்டமாகக் கொட்டும் தன்மை இந்த எறும்பு களுக்கு உண்டு. இந்த எறும்புகள் இளஞ் சிவப்பானவை. ஆதலின் செந்நெல்லுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன. பதிற்றுப் பத்தில் செந்நெல்லுடன் ஒருவகைக் குளவிகளை ஒப்பிட்டி ருப்பதையே 1981 'மே' திங்கள் 'செந்தமிழ்ச் செல்வி'யில் விளக்கியுள்ளேன்.

உலகிலேயும், இந்தியாவிலேயும் இலைகளைத் தைத்துக் கூடு கட்டி வாழும் ஒரே இன எறும்பு முயிறுதான். கூடு கட்டும்போது முட்டையிலிருந்து வந்த புழுவின் உடலி

விருந்து பட்டுநூலை எடுத்து இலைகளை நூலால் தைக்கின் றன. குஞ்சுப் புழுக்களை நூலுடைய நெய்யும் குழல் போல் விடுத்தும் வாங்கியும் முயிற்று எறும்புகள் பயன் படுத்துகின்றன.

The observation of Deflein (and others had proved that the silk is provided by the larvae of the species concerned. They are held by the workers of the species and used as if there are shuttles in weaving the silken thread of the nest.)

நாரையானது முயிறு மூசு குடம்பையை உறிஞ்சு வதற்குக் காரணம் எறும்பின் முட்டையைத் தின்பதற்கு என்பதை உரையாசிரியர்கள் கூறவில்லை. இக்காலத்தில் உறிஞ்சுவது என்ற பேச்சு வழக்கிற்கு உள்ள பொருள் சங்க காலத்தில் இல்லை. ஆனால் சங்க காலத்தில் இவ் வழக்கு சிதறுவது என்று பொருளுடையதாகும்.

சில பறவைகள் எறும்பு முட்டைகளை விரும்பித்தின்னும் என்று அறிவியலறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனால், முட்டை களைவிட அவற்றின் கூட்டுப் புழுக்களைச் சில பறவைகள் விரும்பி உண்ணும் என்று அறிவியலார் கூறுவர்.

சிறுபஞ்ச மூலத்தில் முயிற்றெறும்புபற்றிக் கூறப்பட் டுள்ளது.

> "தக்க திளையான் தவஞ்செல்வன் ஊன்மறுத்தல்
> தக்கது கற்புடை யாள்வனப்புத்—தக்க
> தழற்றண்ணென் தோளாள் அறிவிலளாயின்
> நிழற்கண் முயிறாய் விடும்" —சிறுபஞ்சமூலம் 91

ஒருவன் மனையாள் அறிவிலாது ஒழுகின் அவன் வாழ்க்கை நிழலினிடத்து முயிறு கடித்தாற் போன்று ஆகிவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

முயிற்றெறும்புகள் நிழலில் வாழ்பவை. இலைகளைக் கூடாகத் தைத்து உள்ளே வாழ்வன. வெயிலைப் பொறுக்காதவை. நிழலில் முயிற்றெறும்புகள் நன்றாகக் கடிக்கும். அதுபோலே அறிவிலாது ஒழுகும் மனைவியைப் பெற்றவன் வீட்டிலேயே துன்புறுவான் என்று சிறுபஞ்சமூலம் கூறியுள்ளது.

பலா மரத்தின் அடியில் நிழலில் படுக்க வைத்திருந்த குழந்தை மேல் முயிற்றெறும்பின் கூடு விழுந்து எறும்புகள் கூடிக் கடித்துக் குழந்தை இறந்து போயிற்று என்று நான் கேரளத்தில் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

கம்பன் தன் காவியத்தில் முயிற்று எறும்பைப் பற்றிக் கூறியுள்ளான்.

> ''முயிறலைத் தெழுந்து மரத்தின் மொய்ம்புதோள்
> கயிறலைப் புண்டது கண்டு காண்கிலாது
> எயிறலைத் தெழுமித ழரக்க ரேழையர்
> வயிறலைத் திரியலின் மயங்கி னார்பலர்'' 5—13—8

'முயிற்றெறும்பு அலைத்து எழும் முதுமரம் போல் வலிய தோளையுடைய அனுமான்' என்று கம்பன் கூறியுள்ளான். அனுமனுடைய தோள்கள் நாகபாசத்தால்பிணைக்கப்பட்டிருந்தாலும் அந்தத் தோள்கள் முயிறுகள் சினந்து கடிக்க அலையும் முதுமரம் போன்று ஊறு `செய்யக் கூடியவை என்பது கம்பன் வாக்கு

முயிறுகள் மரத்தின் இலைகளை நூலிழைகளைக் கொண்டு கட்டினதைப் போல அனுமன் கட்டப்பட்டிருந்தான் என்றும் உவமை கூறலாம்.முயிறுகளை அரக்கராகவும் முதுமரத்தை அனுமனின் தோளாகவும் கொள்ளலாம்.

முயிற்றெறும்பை இக்காலத்தில் தமிழில் முசுட்டெறும்பு என்று அழைப்பர். முசுட்டை என்றும் அழைப்பர்.

முயிறு என்ற பெயர் பண்டைக் காலத்தில் முசிறு என்றிருந்திருக்க வேண்டும். 'முசு' என்ற சொல் கூட்டமாக மொய்ப்பதைக் குறிக்கும், 'மூசு வண்டறையும் பொய்கை' என்று அப்பர் பாடியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆதலின் 'முசு' என்ற சொல் முதலில் கூட்டமாக மொய்ப்பது என்ற பொருளில் வந்திருக்கலாம். முசிறு என்ற பெயரில் 'று' என்பது ஊறு என்ற சொல்லின் இறுதி யெழுத்தாகவும் இருக்கலாம்.

முசிறு என்ற பண்டைப் பெயரே சங்க காலத்தில் முயிறு என்று மாறிற்று என்று கருதலாம்.

முயிறு போன்று திடீரென்று சினங் கொள்பவனை 'முசுடன்' என்று கூறுவதையும் காணலாம். முசிறு என்ற பட்டினம் 'முயிறி' என்று வழங்கியதற்குச் சான்று உள்ளது.

சேர நாட்டில் கொடுங்களூரில் வந்து தஞ்சம் புகுந்த யூதர்களின் தலைவனாக 'இரப்பானுக்கு' (Reffan) கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கொடுத்த செப்பேட்டில்''கோசிரீ பாற்கர இரவிவர்மன் திருவடி முயிரிக் கோட்டு இருந் தருளிய நாள்'' (Epigraphica Indiga iii p 68) என்று கூறப் பட்டுள்ளது. முசிரி என்ற பட்டினம் முயிரிக்கோடு என்ற ழைக்கப்பட்டுள்ளது. மற்றும் 'முயிரிக்கோட்டு அஞ்சு வண்ணம்'' என்ற பெயரும் உள்ளது. ஆதலின் முசிரி என்ற சங்க காலப் பெயர் முயிறு என்று மாறினதாகத் தெரி கின்றது.

முயிறிக்கோடு என்று அழைக்கப்பட்டிருப்பதால் முயிறு என்ற எறும்பு மலிந்த ஊராக இருக்கலாம். சங்க காலத்தின் பட்டினப் பெயர் முசிரி என்று இருந்தாலும் முசிறு என்ற எறும்பின் பெயர் சங்க காலத்திலேயே முயிறு என்று மாறி விட்டதாகத் தெரிகின்றது.

சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் முசிறு என்ற பெயருக்குக் கடுகடுப்புள்ள (Easily enraged and irritable person) என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இந்த எறும்பு எளிதில் சினங்கொண்டு அலைவதாகும். அது போன்ற தன்மையுடையவனை முசடன், முசுடு என்று பேச்சுவழக்கில் அழைப்பதும் பொருத்தமேயாகும்.

முசுமுசுக்கை என்ற குறுமரம் உள்ளது. இதில் சுணை முட்கள் நிறைய உண்டு. இதன் காரணமாகவே 'முசு' என்ற பெயர் வந்ததாகத் தெரிகின்றது. இதன் இலையைக் கம்பளிப் புழுக்கள் விரும்பித் தின்கின்றன. பட்டுப்பூச்சிகளின் புழுக்களை இந்தச் செடியில் வளர்க்கின்றனர்.

இந்தச் செடியில் வளரும் புழுவை 'முசுக்கொட்டாம் பூச்சி' (கம்பளிப் பூச்சி) என்பர். இது நஞ்சுடைய சுணை மயிரையுடையது; இந்தப் புழுவைத் தின்னும் ஒருவகைக் குயிலை முசுக்கொட்டாம் பூச்சிக் குருவி என்றும் தென்னார்க்காடு மாவட்டத்தில் அழைக்கின்றனர்:

முசுட்டெறும்பின் முட்டையிலிருந்து ஒருவகை மருந்துத் தைலம் எடுப்பதையும் மருத்துவ நூல்கள் கூறியுள்ளன. முசுட்டு முட்டைத் தைலம் என்ற பெயரில் மருந்துஉள்ளது.

மற்றும் முசுறுப் புல், முயிற்றுப் புல் என்ற பெயர்களையும் சென்னைப் பல்கலைக் கழக அகராதி கூறியுள்ளது.

சேரர்களுக்கு உரிய துறைமுகப்பட்டினமான முசிறி மேற்குக் கடற்கரையில் இருந்தது. இந்த முசிறி என்ற பெயரே முசிறு என்ற எறும்பின் பெயரால் வந்திருக்க வேண்டும். கேரளத்தில் இந்த முசிறு எறும்பு இயற்கையில் நிறையக் காணப்படுகின்றது. முசிறுகள் நிறைந்த ஊர் முசிறி என்றழைக்கப்பட்டது என்று கருதலாம்.

உரையாசிரியர்கள் பொதுவாக முயிறுஎன்ற பெயருக்கு 'செவினி', 'செவ்வெறும்பு' என்று பொருள் கூறியுள்ளனர்.

தமிழ் நாட்டில் முசுட்டெறும்பை முசுட்டை என்று அழைப்பர். மலையாளத்தில் 'மீறு' என்றும் 'நீறு' என்றும் இந்த எறும்பு அழைக்கப்படுகின்றது.

(Kui) கூயி மொழியில் 'முரவி', 'முகிறி' (MuraVi,Mugiri) என்று அழைக்கின்றனர்.

மலையாளத்தில் 'மீறு' என்பது (நீறு) என்று ஆகி இக்காலத்தில் வழங்குகின்றது.

வட கேரளத்தில் தேவாங்கைப்பற்றி நான் ஆராய்ந்த போது இந்த எறும்பின் முட்டையைத் தேவாங்கு விரும்பித் தின்பதாக ஊர்மக்கள் கூறினர். இதனை நீற்றின் கூட்டுத் தேவாங்கு என்று கூறினர். நீற்றின் கூடு என்பது முசுட்டெறும்பின் கூட்டைக் குறித்ததாகும்.

இக்காலத்தில் மரத்தில் வாழும் கடிய வலியைத் தரும் எறும்பு வகைகளைக் குறித்து முசுட்டை என்ற பெயர் பொதுவாக வழங்கினும் சங்க காலத்தில் முயிறு என்ற பெயர் இலைகளைக்கொண்டு கூடுகள் தைத்து வாழும் ஒரு வகைத் தனிப்பட்ட சிறப்புற்ற எறும்பைக் குறித்தே வழங்கினதாகும்.

உலகிலேயே எறும்பினத்தில் ஒரே ஒருவகை எறும்பு தான் இவ்வாறு கூடுகட்டி வாழ்வதாகும். இதையும் நன்கு தெரிந்து இதன் முட்டைகளைப் பற்றியும் கூறிய சங்க நூற் புலவர்கள் போற்றுதற்குரியர்.

முசுட்டெறும்பைஆங்கிலத்தில்Red Weaver ant என்றும் அறிவியலில் Occopyia Smardgidinel என்றும் அழைப்பர்.

கருவி நூல்கள்:

(1) A General Text Book of Entomology The English Language Book Society and Methuen & Co. Ltd, 11s New Felter Lane' E. C. 4. LONDON.

(2) Twelve Little House Mates, Karl von Frish—Noble Laureate.

(3) Dravidian Etymological Dictionary—Dr. Burrow and Dr. Emenou,

(4) Malayalam—English Dictionary —Dr. Gundert.

## கட்டுரை 3



முயிறு (எறும்பு)

# 4

# வேட்டுவனும் முயிறும்

வேட்டுவனைப் பற்றியும் முயிற்றெறும்பைப்பற்றியும் எழுதியதைத் தொடர்ந்து அவற்றைப்பற்றிய வழக்குச் செய்திகள் சில எனக்குக் கிடைத்தன.

சூரன்குடி பெரிய நாடார் என்ற நண்பர் குமரி மாவட்டத்தில் வழங்கும் வழக்குச் செய்திகளை எனக்குத் தெரிவித்தார். அவை பயனுடையனவாய் இருந்தன. குமரி மாவட்டத்தில் வேட்டுவாளி என்ற பெயர் இன்றும் பேச்சு வழக்கில் வழங்குவதாக நண்பர் பெரிய நாடார் தெரிவித்துள்ளார்.

மற்றும், சைவசித்தாந்த உரையில் கூறும் 'மயிர்க்குட்டி' என்ற கம்பளிப்பூச்சியின் பெயர் 'மைக்குட்டி' என்று வழங்கப்படுகிறது.

குமரி மாவட்டம் ஒரு காலத்தில் திருவாங்கூர் அரசிற்கடியில் இருந்தும் சைவ சித்தாந்தத்தைச் சார்ந்த தூய தமிழிலக்கிய வழக்குகளைப் போற்றிப் பாதுகாத்ததைப் புகழாதிருக்க முடியாது.

வேட்டுவன் என்ற பெயர் மலையாளத்திலும் வழங்குகின்றது. 'வேட்டுவன் போற்றிய புழுவைப் போல' என்ற வழக்கு மலையாளத்தில் வழங்குவதை டாக்டர் குண்டர்ட் மலையாள மொழி அகராதியில் குறிப்பிட்டுள்ளார்.

வேட்டுவன் என்ற பூச்சி போற்றிய புழு என்று கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

'வேட்டுவன் தியானிச்சிட்டுவேட்டுவனாய் முடியுன்னு' என்ற மலையாள வழக்கு உள்ளது. இதில் புழு வேட்டுவனாதலை விரும்பி வேட்டுவனைத் தியானிக்க வேட்டுவனாய்ப் பிறந்தது என்ற கருத்து புலப்படுகின்றது இதில் சிவஞான போதக் கருத்து இருப்பதைக் காணலாம். சிவஞானபோதத்தில் வேட்டுவனாதலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவைக் கொடுக்குமாறு போலஇறைவனும் அவரவர் வேண்டுமுருவினைக்கொடுத்து அவ்வினைக்குத் தக்க பயன்களைக் கூட்டுவான் என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

மலையாள வழக்கில் காணப்படும் இந்தக்கருத்து சைவ சித்தாந்தக் கருத்தாகும். ஆதலின் கேரளத்திலும் சைவ சித்தாந்தம் நாட்டு மக்களிடையே பரவியிருந்தது தெளிவாகின்றது.

''வேட்டுவனும் கீடஜாலங்களே கூட்டில் அடைச்சிடும் சணக்கென, ஆகையால் ஒரு குரு வேட்டுவன் எனிக்காக'' என்றதொரு வழக்கு மலையாள மொழியில் வடிவில் உள்ளதை டாக்டர் குண்டர்ட் கூறியுள்ளார்.

கீடஜாலம் என்பதுவடமொழியில் புழுக்களைக் குறித்ததாகும். கூட்டில் அடைத்திடும் புழுக்கள் வேட்டுவனாகப் பிறக்க நினைத்தால் வேட்டுவனாகும் என்ற கருத்து இதில் காணப்படுகின்றதாகத் தெரிகின்றது. இந்தக் கருத்தின்படி வேட்டுவனே குருவாகக் கொள்ளப்பட்டதாகத் தெரிகின்றது.

டாக்டர் குண்டர்ட் இந்த வேட்டுவன் எனும் குளவியைப்பற்றி,

வெட்டா வாளன்

வொட்டார்வெளியன்

வேட்டாவெளியின்

வேட்டாளியன் கூடும்

என்று மலையாளத்தில் மாறி வழங்கும் பெயர்களை யும் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலத்தில் waso hornet என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முயிறு என்ற எறும்புகள் பலா மரத்தில் கூடு கட்டுவதைப் பற்றிச் சங்க நூல்கள் கூறியுள்ளன. இச்செய்தி உண்மையென்பதை வட மலையாளத்தில் நேரில் கண்டு எழுதினேன். நான் அண்மையில் மட்டக்களப்பு **வசந்தன் கவித்திரட்டு** என்ற நூலைப் படிக்கும்போது முயிறு என்ற சங்ககாலப் பெயர் இலங்கையில் பாடப்படும் நாட்டுப் பாட்ல்களில் வழங்கி வருவதைக் கண்டு வியப்புற்றேன். 'வசந்தன் பாட்டுக்கள்' இலங்கையில் வழங்கப்படும் நாட்டுப் பாடல்களாகும்.

''பற்று எழுந்திடு பசியால் நானும்
பாகலிலேறிப் பழம் கொய்யப் போனேன்
தொற்றியே வருகுது முயிறு - என்
துடையைத் துடையடி தோகை நல்லாரே''
—மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு

சங்கநூல்களில் நற்றிணையிலும் (186). ஐங்குறுநூற்றிலும் (99) 'பழனப் பாகல் முயிறு மூசு குடம்பை' என்ற வரியில் கூறப்பட்ட செய்தியைப்போல 'இலங்கை வசந்தன்' பாட்டிலும் முயிற்றெறும்புகள் பாகலில், அஃதாவது பலா மரத்தில் கூடுகட்டுவதாகக் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. மற்றும் தமிழகத்தில் வழங்காத இரண்டு தூய சங்கநூற் பெயர்கள் இலங்கைத்தமிழில் வழங்குவதையும் காணலாம்.

பாகல் என்ற பெயர் சங்ககாலத்தில் பலாவைக் குறித்தது. பகுப்பது என்ற பொருளில் பாகல் என்ற பெயர் பல பழங்களை ஒரு பெரும் பழத்தில் அடக்க உடைய மரத்தைப் பற்றி வந்திருக்கலாம். பலா என்ற பெயர் பல சிறு சுளைகள் அடங்கிய பெரும் பழத்தைத் தரும் மரத்தைக் குறித்ததாகும்.

தமிழ் நாட்டில் இப்பொழுது வழங்கிவரும் பாகல் என்ற பெயர் ஒரு கொடியாகும். இதன் மேலேறிப் போக முடியாது. இதன் பழத்தையும் யாரும் கொய்துண்ணப் போகார்.

சங்க இலக்கியத்தில் வழங்கிய முயிறு என்ற எறும்பின் பெயரே இலங்கை நாட்டார் பாட்டில் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. குடியேற்ற நாட்டில் மொழி மரபுகள் வ தயாது காப்பாற்றப்படுவதைக் காணலாம். இலங்கைப் பேச்சுத் தமிழில் தூய தமிழ் இலக்கிய வழக்குகள் பாதுகாக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

சங்க காலத்திலேயே ஈழத்துப் பூதந்தேவனார் முதலிய புலவர்கள் வாழ்ந்தனர். ஈழ நாட்டில் சிறந்த பாடல் எழுதும் திறமைமிக்க புலவர்கள் சங்க காலத்திலேயே வாழ்ந்தனர் என்பதைப் பார்க்கும்போது அதற்கு முன்னர், சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தமிழர் இலங்கையில் குடியேறியிருக்க வேண்டுமென்பதில் ஐயமேயில்லை. சிங்களர் அதற்குப் பின் வந்தவராவர்.

நான் எழுதிய 'சங்க நூல்களில் மீன்கள்' என்ற நூலில் மீன்களின் பல சங்க காலத் தமிழ்ப் பெயர்கள் இலங்கை மொழியில் அப்படியே எடுத்துக் கொள்ளப்பட்டு இன்றும் சிங்களர்களின் பேச்சு வழக்கில் வழங்குவதை விளக்கியுள்ளேன். இதிலிருந்து சிங்களர் ஈழத் தமிழர்களுக்குப் பிறகு இலங்கை நாட்டில் குடியேறியவர்கள் என்பது தெளிவாகும்.

நல்லூர் ஞானப்பிரகாச அடிகள் இலங்கையில் வழங்கி வரும் இடப்பெயர்களில் பலவும் தூய தமிழ்ப் பெயர்களாகவும் இலக்கியப் பெயர்களாகவும் உள்ளதை ஈழகேசரியில் எழுதிக் காட்டினார். அது போன்றே இலங்கை மொழியில் மாவிடை, மரவிடைப் பெயர்கள் (Flora and Fauna) தமிழிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

நண்பர் பெரிய நாடார் அவர்கள், குமரி மாவட்டத்தில் முயிற்றெறும்பின் பெயரை **மீறு** என்றும் **முசிறு** என்றும் சொல்வர் என்று எழுதியுள்ளார் மலையாளத்தில் மீறு என்பது எப்படி நீறு என்று மாறியதைக் குறிப்பிட்டுள்ளேன். வட மலையாளத்தில் **புளி எறும்பு** என்றும் கூறுவர்.

இது கடிக்கும்போது வலியைத்தரும். நீர் (Formic Acid) புளிப்புச் சுவையுடையதென்பதைக் கண்டு புளியெறும்பு என்றும் கூறுவர். இதை ஒரு மருந்தாகவும் கருதுவர்.

இதன் மொய்க்கும் தன்மையை நான் நேரில் கண்டிருக்கிறேன். ஒரு கொல்லமாவுக்குக் காவலாக இளந்தையில் ஒருபோது இருந்தேன் அம்மரத்தில்அப்போது கட்டெறும்புகள் வாழ்ந்திருந்தன. முயிறுகள் அம்மரத்தில் குடியேறத் தொடங்கின. கட்டெறும்புகள் முயிறுகளைக் கடித்துத் துண்டுபடுத்திவிடும். கட்டெறும்புகள் தனித்தனியாகவே தாக்கும். ஆனால் முயிறுகளோ கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு கட்டெறும்பையும் அதன் கால்களையும் உணர்ச்சி முடியையும் பிடித்து மரத்தோடு வைதது அப்படியே வைத்துக் கொல்லும். இவ்வாறு அம் மரம் முழுவதையும் முயிறுகள் கைப்பற்றிக்கொண்டன.

ஆனால் இவற்றைக் கடிக்காத **செவினி** என்றோர் எறும்பு வகை மரங்களிலிருந்து துரத்திவிடுகின்றது. இஃது எவ்வாறு நிகழ்கின்றதென்று தெரியவில்லை.இச் செவினிகள் முயிற்றைவிடச் சற்றுச் சிறியவை. யுதன் நிறம் இன்னும் கொஞ்சம் அடர்த்தியாக இருக்கும்; கடிக்காது.

ஆனால் இது வாழும் மரங்களில் விளைச்சல் குறையும் பூவையும் பிஞ்சுகளையும் இது வாட வைத்துவிடும். முயிறு வாழும் மரங்களில் விளைச்சல் பெருகும். ஆனால் அதைக் கொய்வதுதான் கடினம்.

'முயிற்றுக்கடி' என்று பெரிய நாடார் எழுதிய பட்டறிவுச் செய்தி அரிய, பெரிய செய்தியாகும். இந்தியாவில் வாழும் பூச்சிகளையும் எறும்புகளையும் முற்றிலும் அறிவியல் அறிஞர்கள் ஆராயவில்லை. சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள அழகிய பூச்சியான மூதாயைப் பற்றிக்கூட ஆராய்ந்து அறிவியல் செய்திகளைக் கூறவில்லை. மூதாயைப் பற்றிப் பின்னர் விளக்குவேன்.

விந்தைப் பூச்சி நூல் வெளிவந்து விட்டது.

செவினி என்று குமரி மாவட்டத்தில் வழங்கிவரும் எறும் பின் பெயரை வடமலையாளத்தில் சில பகுதிகளில் முயிற் றெறும்பிற்கே வழங்கி வருவதையும் கேட்டுள்ளேன்.

பேச்சு வழக்குச் சொற்களையும் மரபுகளையும் இலக்கிய வழக்குகளோடு இணைத்து ஆராய்வது மிகவும் பயன் தரும். பேச்சு வழக்குகள் ஒரு மொழியின் உயிர்நாடியாகும் என்பதை உணர வேண்டும். அதனால் தமிழ்நாட்டிலும், தமிழ்பேசும் உலகமெங்கும் வட்டார வழக்குகளை அறிவியல் தந்த நாடாப்பதிவுக் கருவிகளைக் கொண்டு பதிவு செய்து ஆராய்ந்து முடிவுகளைக் காண வேண்டுவது இன்றியமையாதது; காலந் தாழ்த்தாது செய்ய வேண்டிய கடமையுமாகும்.

# 5

# கடுந்தேறு எனும் குளவி

சங்க நூல்களில் ஒருவகைக் கடுங்குளவிக்குக் 'கடுந்தேறு' என்று பெயர் வழங்கியுள்ளது. இக் குளவி கூடு கூட்டி, கூட்டின் வாழ்க்கையைப் பின்பற்றுவதாகும்.

செறுவினை மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப்பக டுதிர்ந்த மென்செந்நெல்லின்
அம்பண வளவை யுறைகுவித் தாங்குக்
கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த விளந்துணை மகாஅரின்
அலர்ந்தனர் பெருமரின் னுடற்றி யோரே''
(பதிற்றுப்பத்து 8: 71-3-8)

"செந்நெல்லை மரக்காலால் அளத்தற்கு உறையாகக் குவித்தாற்போல மொசிந்திருந்த குளவியினம்இருந்த கூட்டைக் கலைத்த இளஞ்சிறார்போல, உன்னோடு மாறுபட்ட பகைவர் துன்ப முற்றனர்''

என்று பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்து கூறியுள்ளது.

---

Polistes Rebraeus

'குளவிக் கூட்டைக் கலைத்தாற்போல' என்ற பழமொழி தமிழில் வழங்குகின்றது.

இதே பழமொழி மலையாளத்தில் 'கடந்நல் கூடின்ன கல்லெடுத் தெறிக' என்று வழங்குகின்றது.

ஆங்கிலத்திலும் 'To arouse a nest of hornets' என்று இதே முறையான பழமொழி பகைவரைத் தூண்டி விடுவதைக் குறித்து வருகின்றது.

கடுந்தேறுறு கிளை என்ற தொடருக்குக் கடிதாகத் தெறுதலையுடைய மிக்க குளவியினம் என்று பழையவுரை கூறியுள்ளது. குளவிக்குக் கடுந்தேறு என்ற பெயர் சங்க காலத்தில் வழங்கியது என்பது தெரிகின்றது. ஆனால் இப்பெயர் பிற்கால இலக்கியங்களில் வழங்கவில்லை.சிறந்த உரையாசிரியரான நச்சினார்க்கினியர் இந்தப் பெயரைப் பத்துப் பாட்டில் ஓரிடத்தில் மறந்து உரை கூறியிருப்பதைக் காணலாம்.

''கடுப்புடைப் பறவைச் சாதியன்ன
பைதற விளைந்த பெருஞ் செந்நெல்லின்'''

என்று பெரும்பாணாற்றுப்படையும் இந்த உவமையைக் கையாண்டுள்ளது. ''கடுப்புடைப் பறவைச் சாதி'' என்ற நீண்ட பெயர் குளவியைப் பற்றிய நீண்ட விளக்கப் பெயராகும். தெறுதல் என்ற சொல் அச்சந் தருதல் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

சாதி என்ற சொல் தமிழிலக்கியத்தில் முதன் முதலில் பெரும்பாணாற்றுப்படையில் வழங்கப்பட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

"அருந்தெறன் மாபிற் கடவுள் காப்ப" என்று வரும் அகநானூற்று (372) வரியில் தண்டிக்கும் கடவுளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. குளவிக் கூட்டைக் கலைக்கும் சிறுவர் குளவிகளால் ஊறுபட்டு தண்டிக்கப்படுவராதலால் 'கடுந் தேறு ஊறுகிளை' என்றழைத்தனர்.

திண்டிவனத்தில் கல்லறைத் தோட்டத்தில் இருந்த குளவிக் கூட்டைக் கலைத்த நானும் என் நண்பர்களும் துரத்திய குளவிகளிடமிருந்து ஓடித் தப்பித்ததை இன்றும் நினைவு கூறுகின்றேன்.

இந்தக் குளவிகள் பெரும்பாலும் ஆட்கள் போக்குவரவு இல்லாத இடங்களில்தான் கூடு கட்டும். ஆனால், யாராவது ஓர் ஆள் கூட்டை நெருங்கினாலோ, கலைத்தாலோ குளவி கள் எல்லாம் கலைந்து வெளிப்பட்டு ஆளைக் கொட்டி விடும். அவ்வாறு இக்குளவிகள் கூட்டமாகச் சேர்ந்து ஒரு பெண்ணைத் துரத்திச் சென்று தலையில் கொட்டியதால் அந்தப் பெண் தன் உயிரை இழந்ததை நான் கண் கூடாகக் கண்டேன். ஆதலின் கூட்டுக் குளவிகள் மிகவும் கொடியனவாகும். மனிதருடைய உயிர்க்கே ஊறு விளை விப்பனவாகும்.

குளவி கொட்டினால் கடுப்பு மிகுந்து இருக்குமாதலால் 'கடுப்புடைய பறவைச் சாதி' என்று அழைக்கப்பட்டுள்ளது. கடுந்தேறு என்ற குளவிப் பெயர் மிகுந்த கடுப்பைத் தருவது, அஃதாவது கடிய வலியைத் தருவது என்று பொருள்படும். அவ்வாறு கடுப்பைத் தரும் நஞ்சுடைய ஒருவகைப் பெரிய தேளை 'நண்டுத் தெறுக்கால்' என்று தென்னார்க்காடு மாவட்டத்தில் அழைப்பதைக் காணலாம் கொட்டித் தெறும் காலை உடைய பெரிய தேள் என்ற பொருளில் தெறுக்கால் என்று அழைத்தனர்.

வல்லூறு என்ற பெயர் வலிய ஊறு என்ற பொருள் தருவது போல, புள்ளூறு என்ற பெயர் புட்களுக்கு ஊறு என்று பொருள் தருவதுபோல, 'கடுந்தெறு ஊறு' கடுந்தேறூறு என்று பதிற்றுப்பத்தில் வழங்கிற்று.

கடுந்தேறு என்ற பெயரை மறந்து நச்சினார்க்கினியர் பொருநராற்றுப்படையில் உரை கூறியுள்ளார்.

"குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி"

—பொருநராற்றுப்படை 244 - 246.

நெல்லை அறுத்து நெல்மணியைக் குவித்து வைத்திருந்தது 'கடுந்தெற்று மூடை' போலிருந்ததாகப் பொருநராற்றுப் படையில் கூறப்பட்டுள்ளது.

இங்குக் கடுந்தெற்று மூடை என்பதற்கு நெருங்கத் தெற்றின குதிர் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். மூடு என்ற உரிச்சொல்லிற்கு 'நெருங்க' என்ற பொருள் வேறு எந் நூல்களிலும், நிகண்டுகளிலும் காணப் படவில்லை. இங்கே கூறிய பொருள் பொருத்தமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நெல்லின் குவியலுக்குக் கடுந்தேறு என்ற குளவியின் கூட்டத்தை ஒப்பிட்டுப் பொருநராற்றுப்படை கூறினது பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட மரபு உவமையைப் பின்பற்றியதாகும்.

"கடுந்தெற்று மூடையின்.........
வாடிய மாலை மலைந்த சென்னியுள்"

—புறம். 285

புறநானூற்றிலும் 'பொருநராற்றுப்படை'யில் காணப்பட்ட 'கடுந்தெற்று மூடை' என்ற சொற்றொடர் வருகின்றது. இதற்கு உ. வே. சாமிநாதய்யர் நச்சினார்க்கினியரைப் பின் பற்றி அடிக் குறிப்புரை எழுதினார். பொருநராற்றுப் படை வரிக்கு நேரிய உரை நெல்லின் குப்பை, குளவியின் மூடைபோல் இடத்தை அடைத்து இருந்ததாகக் கூற வேண்டும்.

பதிற்றுப்பத்தில் நெல் குவியலுக்குக் குளவியின் செழுங்கூட்டை நிறத்தினாலும் உருவத்தினாலும் ஒப்பிட்டிருப்பதைக் காணலாம். ஆதலின் கடுந்தெற்று என்பதற்கு நெருங்கிப் பின்னின என்ற பொருளில் உரை கூறியது பொருத்தமாகத் தெரியவில்லை. கடுந்தெற்று என்பதற்குக் கடுந் தெறுதலை யுடையது என்று பொருள் கொள்ள வேண்டும்.

கடுந்தெற்று மூடை என்ற சொற்றொடர் கடுந்தெறு தலையுடைய குளவி மூடை என்று பொருள் தரும்.

'மூடு' என்று முடியும் ஊர்ப் பெயர்கள் நாஞ்சில் நாட்டில் உள்ளன. மக்கள் கூட்டமாக வாழும் தன்மையைக் குறித்தே மூடு என்ற பெயர் ஊர்ப் பெயர்களின் இறுதியில் வருகின்றது. 'மரமூடு' என்ற பேச்சு வழக்கு மரக் கூட்டம் என்ற பொருளில் நாஞ்சில் நாட்டில் வழங்குவதைக் காணலாம்.

கூட்டில் குவிந்துள்ள குளவிகளின் கூட்டத்தையே கடுந் தெற்று மூடை என்று கூறியதாகத் தெரிகின்றது. இவ்வாறு நெல் களஞ்சியக் கூட்டில், பத்தாயத்தில் கூட்டுக் குளவிகள் கூடு கட்டுவது உண்மையேயாகும்.

மொய்த்தல் என்ற சொல் மூடுதல் என்றும் பொருள் தரும். குளவிகள் கூட்டமாகச் சேர்ந்து மூடி யிருந்ததைக்

கடுந்தெற்று மூடை என்றனர். கடுந்தெறுதலையுடைய குளவி மூடைபோலச் சாலி நெல் குவிந்திருந்தது என்று நேராகப் பொருள் கூறவேண்டிய இடத்தில் நச்சினார்க்கினியர் வேறாக வலிந்து பொருள் கூறியுள்ளார்.

பதிற்றுப்பத்தில் நெல்லைக் குவித்தாற்போன்ற 'கடுந்தேறு உறு கிளை' என்று சொல்லியிருப்பதைப் போன்றே கடுந்தெற்று மூடைபோலச் சாலி நெல் கிடந்ததாகப் பொருநராற்றுப்படை கூறிற்று.

ஆதலின் சங்க காலத்தில் குளவிக்கு வழங்கிய பெயர் கடுந்தேறு என்பதாகும். இந்தப் பெயர் சில பழந் திராவிட மொழிகளிலும் வழங்குவது கவனிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் சில இடங்களில் குளவியைக் 'கடம்பை' என்று அழைத்தாலும் இந்த வழக்கு மிகவும் அரிதாகத் தமிழில் காணப்படுகின்றது.

மலையாளத்தில் இந்தக் கூட்டுக் குளவியின் பெயர் 'கடந்நல்' என்று வழங்குகின்றது. 'கடந்தை' என்று தமிழில் வழங்குவது போலக் கன்னட மொழியில் 'கடந்தூறு', 'கடந்துறுத்தெ', 'கடஜ', 'கனஜ' என்ற பெயர்கள் வழங்குகின்றன.

தெலுங்கு மொழியில் 'கடுதூறு', 'கனூதுரு', 'கடஜு', 'கனஜு' என்ற பெயர்கள் வழங்குகின்றன.

கன்னடப் பெயரில் பதிற்றுப்பத்தில் வரும் 'கடு' என்ற சொல்லும் 'ஊறு' என்ற சொல்லும் ஒத்திருப்பதைக் காணலாம்.

கடுந்தெறு என்று சங்க காலத்தில் வழங்கிய பெயர் தற்காலத் தமிழில் கடந்தை என்று பழக்கத்தில் அரிதாக வழங்குகின்றது. இப்பெயரில் ஊறு என்ற சொல் தமிழில் மறைந்துவிட்டது. ஆனால் கன்னடத்தில் 'ஊறு', 'உறுத்தே' என்று வருவதைக் காணலாம். வல்லூறு, புள்ளூறு என்ற தமிழ்ப்பெயர்களில் ஊறு என்ற சொல் இதே பொருளில் வழங்குவதைக் காணலாம்.

குடகு மொழியில் கூட்டுக்குளவியைக் 'கடந்தி' என்றும் துளு மொழியில் 'கனஜடபுரி' என்றும், கோல் மொழியில் 'காண்டில் பொட்டே' என்றும், கோண்டி மொழியில் 'கண் டேலி', 'கண்டோலி' என்றும், கூயிமொழியில் 'கிராண்டி' என்றும் அழைக்கப்படுகின்றது.

கடு என்ற சொல் 'கண்டு' என்று கண்டாம்பூனை என்ற தமிழ்ப் பெயரில் மாறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

டாக்டர் எமனோவின் சொற்பிறப்பு அகராதியில் (Dravidian Etymological Dictionary) இந்தப் பழந் திரா விட மொழிப் பெயர்கள் எல்லாம் காணப்பட்டாலும் 'கடுந்தெறு' என்ற சங்க நூற்பெயர் காணப்படவில்லை; கடு என்ற மூலச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே தமிழில் கடுந்தெறு என்ற சங்க காலப் பெயரும், கடம்பை என்ற தமிழ்நாட்டுப் பெயரும் வழங்கியுள்ளன. 'கடந்நல்' என்ற மலையாளப் பெயரும், மற்ற திராவிட மொழிப் பெயர்களும் வந்துள்ளன.

கடு என்பது கண்டு என்றும், 'கண' என்றும் மாறித் திராவிடமொழிப் பெயர்களில் வந்துள்ளது. இந்தக் குளவி யின் பெயர் வடமொழியிலும் மராத்தி மொழியிலும் சென்றிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

வடமொழியில் 'கணபா', 'கண்டாலி', 'கண்டோளி' என்றும் பிராகிருதத்தில் 'கண்டெல்லி' என்றும், மராத்தி மொழியில் 'கடில்' (Khadil) 'கடில்மாசி' என்றும் வருகின்றது.

குளவிகளில் ஓரினம் தேனினம் போலக் கூட்டமாக வாழ்கின்றது. சங்க இலக்கியத்தில் செந்நெல் குவியலைப் போன்ற கடுந்தெறு என்று உவமித்திருப்பதால் அவ்வாறு கூடு கட்டி வாழும் இனமான குளவி Polistes Rebraeus என்பதேயாகும்.

இந்தக் குளவிகள் செந்நெல் போன்று நிறத்திலும் உருவத்திலும் தோற்றமளிக்கும். இந்தக் குளவிகள் முக்கால் மீட்டர் அளவுள்ள கூட்டைக் கட்டுகின்றன.

'சுற்றுக்கருங் குளவிச் சூரைத்தூறு'

என்று பிற்காலத்திய தனிப் பாடலில் (1, 107, 44) கூறப்பட்டுள்ள கருங்குளவியும் இதுவேயாகும்.

# 6

## சைவசித்தாந்த இலக்கியத்தில் வேட்டுவன் எனும் குளவி

"வண்டுக ளாகிமாறும் மயிர்க்குட்டி
மற்றோர் செந்துப்
பண்டைய வுருவந் தானே வேட்டுவ
னாய்ப்பி றக்கும்
கண்டுகொள் யோனி யெல்லாம் கன்மத்தால்
மாறு மென்றே
கொண்டன சமயம் எல்லாம் இச்சொல்நீ
கொண்ட தெங்கே"

— சிவஞானசித்தியார், சுபக்கம் - 43

சிவஞான சித்தியார் சுபக்கத்தில் கூறப்பட்டுள்ள வேட்டுவன் என்பது ஒருவகைக் குளவியாகும். இது கல்லாடத்தில் 'வேட்டுவப் பெயரளி' என்று வழங்கியுள்ளது.

"........வேட்டுவப் பெயரளி
யிடையுறழ் நுசுப்பின் குரவைவாய்க்
கடைசியர்"

கல்லாடம் 27: 21 - 22

வேட்டுவனென்ற பெயரையுடைய குளவியினது இடையைப் போன்று இடையினையுடைய உழத்தியர் என்று மிக அழகான உவமை கல்லாடத்தில் கூறப்பட்டுள்ளது. வேட்டுவப் பெயரளி என்று கூறியது வேட்டுவன் என்ற பெயரையுடைய பூச்சியைக் குறித்ததாகும். இக் காலத்தில் ஆங்கிலத்திலும் மகளிர் இடைக்குக் கல்லாடத்தில் கூறப்பட்ட அழகிய உவமையே Wasp—Waisted வழங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்டிர் இடையை மிகவும் குறுகிக் காணப்படும் ஒருவகைக் குளவியின் இடைக்கு ஒப்பிட்டுக் கூறினது பொருத்தமாகும்.

சிவஞான சித்தியாரில் வரும் செய்தி ஆராயத் தக்கதாகும். மயிர்க்குட்டி வண்டுகளாகி மாறும் செந்து (ஐந்து) வேட்டுவனாகப் பிறக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மயிர்க்குட்டி என்பது கம்பளிப் புழுவைக் குறித்ததாகும்.

இலைகளில் காணப்படும் கம்பளிப் புழுக்கள் வண்டுகளாக அஃதாவது ஒருவகைப் பூச்சிகளாக மாறுவதுண்டு. ஒருவகைக் கம்பளிப் புழு, பட்டுப் பூச்சியாக மாறுகின்றது. சிவஞான சித்தியாரில் மயிர்க்குட்டி போன்ற மற்றோர் செந்து (ஐந்து) அஃதாவது மற்றும் ஒரு புழு தன் பழைய வடிவமான வேட்டுவனாக மாறும் என்று உரை கூறப்பட்டுள்ளது.

உரையில் மயிர்க்குட்டி வண்டாக அச்சு மாறும். மற்றும் ஒரு புழு வேட்டுவனாக அச்சுமாறும் என்று கூறப்பட்டுள்ளது.

ஒருவகைப் புழு வேட்டுவன் எனப்படும் குளவியாக மாறுவது இயற்கையில் உண்மைதான். குளவி புழுவைக் கொட்டிக்கொட்டிப் பூச்சியாக்குவதுபோல என்று தவறாகத்

தற்காலத்தில் கூறுவர். 'குளவி புழுவைத் தன்னினமாக்குகிறது' என்று ஒரு பழமொழி வழங்குகின்றது.

மண்கூடு கட்டும் ஒருவகைக் குளவி ஒருவகைப் பச்சைப் புழுவைத் தூக்கி வந்து கொட்டி மயக்கமடையச் செய்து அந்தப் புழுவின்மேல் முட்டையிட்டு, அதன்மேல் மண் கூடு கட்டி மறைத்துவிடுகின்றது. முட்டைகள் பொரிந்து புழுவானதும் முன்னரே குளவி மண் கூட்டில் வைத்த ஒரு வகைப் புழுவை உணவாக உண்டு வளர்ந்து குளவியாக மாறுகின்றது. பச்சைப் புழுவைக் குளவி எடுத்துச் செல்வதைப் பார்த்த நாட்டார் மக்கள் அந்தப் புழுவைக் கொட்டிக் கொட்டிப் பூச்சியாக்குவதாகக் கருதினர்.

ஆனால், குளவிகளின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்தறிந்த பூச்சி நூலறிஞர்கள் (Entomologists) இதன் உண்மையைத் தெரிந்து கூறியுள்ளனர். இந்தக் குளவியை இக் காலத்தில் 'மண் குளவி' என்றழைப்பர். சிவஞான சித்தியாரில் கூறிய வேட்டுவனைப் பற்றிச் சிவஞான போதமும் கூறியுள்ளது.

> "வித்துண்டா மூலம் முளைத்தவா தாரகமாம்
> அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால்—
> வித்தகமாம்
> வேட்டுவனாம் அப்புழுப்போல் வேண்டுருவைத்
> தான்கொடுத்துக்
> கூட்டானே மண்போற் குளிர்ந்து."
>
> —சிவஞானபோதம் - 3

'வேட்டுவனாதலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறுபோல இறைவனும் அவரவர் வேண்டுகின்ற உருவினைக் கொடுத்து அவ்

வினைக்குத்தக்க பயன்களையும் கூட்டுவன். ஆதலான் அது கொண்டு சுதந்திரத்திற் கிழுக்கென்னை என்று உரை கூறுவர்.

வேட்டுவன் எனும் குளவி தனது புழுவைக் கொட்டிக் கொட்டிப் பூச்சியாக்கும் என்ற நாட்டார் மக்கள் நம்பிக்கையைத் தத்துவக் கொள்கையாக விளக்க, மெய்கண்டார் கையாண்டுள்ளார். இதை வித்தகும் என்று கூறியுள்ளனர். இதில் ஓர் இயற்கை உண்மையுள்ளது. பெரும்பாலும் பூச்சிகளாக மாற வேண்டுமாயின் புழுவாக முட்டையிலிருந்து வந்து மாறவேண்டும். இதை அறிவியலில் Metamorphosis என்று கூறுவர். இந்த உருவ மாற்றத்தையே 'அச்சு மாறுதல்' என்று பிற்காலத்திய உரையாசிரியர் கூறியுள்ளார். Metamorphosis என்பதற்கு அச்சு மாறுதல் என்று பெயர் வழங்குதல் சிறந்த அறிவியல் பெயராகும்.

உருவ மாற்றம் என்பதைவிட 'அச்சு மாறுதல்' என்று கூறிய வழக்கு பண்டை மரபு தழுவிய அறிவியல் வழக்காகும். இலக்கிய மரபு தழுவிய, நாட்டார் பண்பாட்டில் தழுவிய வழக்குகளைப் போற்றி வழங்கினால் அறிவியலும் வளரும், பண்டைத் தமிழ்ப் பண்பாடும் மரபும் வளரும்.

ஒருவகைப் புழு வேட்டுவனெனப்படும் குளவி உருவை அடைய விரும்புகின்றது என்று கருதினர். ஆனால், இயற்கையில் தனது குஞ்சுப்புழு தனது உருவை அடையவே குளவி இன்னொரு பூச்சியின் பச்சைப் புழுவைத் தூக்கி வந்து அதன்மேலே முட்டையிட்டு மண் கூட்டால் மூடுகிறது. இந்தக் குளவியை இக்காலத்தில் மண் குளவி என்றழைப்பதைக் காணலாம்.

பிற்காலத்திய உரையில் 'கூட்டா மண்போற் குளிர்ந்து' என்ற கடைசி வரியை 'வித்துண்டா மூலம்

முளைத்தவா தாரகமாம்' என்ற முதல் வரியோடு இணைத்து வித்துக்கு ஆதாரமான நிலம் குளிர்ந்த வழி அதன்கண்ணுள்ள வித்தினின்று முளை தோன்றியதென்பர். ஆயினும் அவ்வாறு கொண்டு கூட்டிப் பொருள் கூறாமல் நேராகப் பொருள் கூறினால்,

'வேட்டுவனாம் அப்புழுப்போல் வேண்டிய வேட்டுவ உருவைக் கொடுத்து உதவும் குளிர்ந்த மண் கூட்டானே'

என்றும் பொருள் கூறலாம். ஏனென்றால் மண் குளவி என்று இக்காலத்தில் அழைக்கப்படும் இக் குளவி, குளிர்ந்த மண், ஈரமண்ணால் கூடு செய்கின்றது. அந்தக் கூட்டிலிருந்துதான் வேட்டுவனாம் குளவி உருவைப் பெற்று வெளி வருகின்றது. ஆதலின் இந்தச் சிவஞான போதப் பாட்டிற்குக் கூறும் பழக்கமான உரை பொருத்தமானதா என்பதை மேலும் ஆராயவேண்டும்.

இடை சிறுத்த ஒருவகைக் குளவிக்கு வேட்டுவன் என்ற பெயர் வந்ததற்குக் காரணமுண்டு. இந்த வகைக் குளவிகள் பூச்சிகளை வேட்டையாடித் தின்பனவாகும். பெரும்பாலும் தேன்கூடு அருகில் பதுங்கி யிருந்து தேனீக்களை வேட்டையாடித் தின்னும் தன்மையால் வேட்டுவன் என்று பொருத்தமாக அழைக்கப்பட்டது. சிலந்திப் பூச்சிகளையும் வேட்டையாடும் இந்தக் குளவியை Icheumon என்று அறிவியலில் அழைப்பர்.

வேட்டுவன் என்ற பெயர் பேச்சுமொழிப் பெயராகத் தெரிகின்றது. வேட்டுவன் என்ற பெயர் பொதுவாக வேட்டையாடும் ஓரின மக்களைக் குறிக்கும். வேடரினத்தார் ஈழ நாட்டின் முதல் மூத்த பழங்குடி மக்களாகக் கருதப்படுகின்றனர். ஆனால், அதே பெயரைச் சிறப்புப் பெயராக வேட்டையாடும் குளவிக்கு இட்டுக் கூறியது

பேச்சு வழக்காகத் தெரிகின்றது. இதுபோன்று இடையன், வண்ணான் என்ற நாட்டு மக்கள் வழக்குகள் பூச்சி வகைகளைக் குறிப்பதைக் கவனிக்க வேண்டும். நாட்டு மக்கள் 'இடையன் பூச்சி' என்று அழைப்பதைக் காணலாம்.

இடையன் தாங்கிய கோல்போல இந்தப் பூச்சியும் நீண்ட கைகளைப் போன்ற உறுப்புக்களைப் பெற்றுள்ளது. சங்க நூல்களில் கோல் தாங்கிய இடையனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. இடையன் என்ற சொல்லே சிறப்புப் பெயராக நாட்டு மக்கள் வாயில் இந்தப் பூச்சியைக் குறிப்பிட்டு வழங்கியிருக்கலாம். இடையன் பூச்சியும் வேட்டையாடும் பூச்சியேயாகும். நீண்ட கை போன்ற உறுப்பைக் கும்பிடுவதுபோல வைத்து ஆடாமல் அசையாமல் காத்திருக்கும் போது எந்தப் பூச்சியாவது நெருங்கினால் இடையன் பூச்சி சடுதியில் பிடித்துக் கொன்று உண்டுவிடும். இதனால் இந்தப் பூச்சியைக் கும்பிடும் பூச்சி (Praying Mantis) என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.

இந்த இடையன் பூச்சியில் பெண் பெரியதாகவும் ஆண் சிறியதாகவும் இருக்கும். இணைவிழைச்சுக் காலத்தில் (Mating Season) சேருவதற்கு முன்னால் ஆணும் பெண்ணும் நடனமாடிக் கொண்டே இணை சேரும். இணை சேர்ந்தபின் பெண் பூச்சி ஆண் பூச்சியைக் கொன்று உண்டுவிடும்.

மலையாளத்தில் எட்டுக்கால் பூச்சியை நாட்டு மக்கள் 'வண்ணான்' என்று அழைக்கின்றனர். சிலவகை எட்டுக்கால் பூச்சிகள், சிலந்திகள் இடும் முட்டைகளை மூட்டை போல வயிற்றின் அடியில் தூக்கிச் செல்வதால் வண்ணான் என்று அழைத்தனர். இந்த வழக்கு வட மலையாளத்தில் காணப்படுகின்றது.

இலக்கண உரையாசிரியர்கள் விரவுப் பெயராகச் சாத்தன், சாத்தி, மருதி முதலிய பெயர்களைக் காட்டியுள்ளனர். இந்த வழக்குகள் உயர்திணையில் மட்டுமின்றி அஃறிணையிலும் விரவி வழங்கும் என்று கூறுவர்.

சாத்தன் என்ற வழக்கு விரவுப் பெயராக அஃறிணைக்கு வழங்குவதைத் தற்காலத்தில் பேச்சுத் தமிழில் காண முடியவில்லை. ஆனால் கேரளத்தில் இன்றும் கோழிச்சாத்தன் என்று வீட்டுக் கோழியையும், ஆனைச்சாத்தன் என்று கருங்குருவியையும், காராடன் சாத்தன் என்று நீண்ட வால் கருங்குருவியையும் பேச்சு வழக்கில் அழைக்கின்றனர்.

தமிழில் ஆண்டாள் திருப்பாவையில் மட்டுமே 'ஆனைச் சாத்தன்' என்று கருங்குருவியை அழைக்கும் வழக்கு காணப்படுகின்றது.

அன்பு காரணமாகவும் பயன் காரணமாகவும் மாட்டை இத்தகைய விரவுப் பெயரால் அழைத்தனர் என்று பிற்காலத்திய ஆசிரியர் விளக்கம் கூறினர். அன்பும், பயனும் காரணமாக இருக்கலாம்; பழக்கமும் காரணமாக இருக்கலாம்.

வீட்டில் வளர்க்கும் நாயை முனியன், கலியன் என்றெல்லாம் பெயரிட்டு அழைப்பதும், இலக்கண உரையாசிரியர் கூறிய மரபை ஒட்டியதே என்பது தெரிகின்றது.

ஆதலின் வேட்டுவன் என்ற பெயர், வழக்குப் பெயராகத் தெரிகின்றது. மெய்கண்டார் சைவசித்தாந்தத்தை விளக்குவதற்கு வேட்டுவன் என்னும் குளவியின் வாழ்க்கைச் செய்தியைப் பயன்படுத்தியிருக்கிறார் என்று தெரிகின்றது.

# 7

# பதிற்றுப்பத்தில் 'சான்றோர்'

பதிற்றுப்பத்தில் 'சான்றோர் மெய்ம் மறை' என்று சேர மன்னர் போற்றப்படுகின் றார்கள்.

''எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர்
மெய்ம்மறை

—பதிற்றுப்பத்து 14; 11 - 12.

இந்தப் பாட்டில் துறையும் வண்ணமும் தூக்கும் பெயரும் கூறப்பட்ட இடத்தில் பெயராக 'சான்றோர் மெய்ம்மறை' என்ற வழக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலின் 'சான்றோர் மெய்ம்மறை' என்ற பெயரின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்துக்குரிய பழைய உரையில் ஈண்டு 'சான்றோர் என்பது போரில் அமைதி யுடைய வீரரை' என்று பொருள் கூறப்பட் டுள்ளது.

போரில் அமைதியுடைய வீரர் என்றது முரண்பாடு போன்று தோன்றும். ஆனால் இங்கு கூறிய நுண்மையான விளக்கம் என்னவென்றால் போருக்குப் பொருந்தும், அமையும் வீரர் என்பதாகும். இத்தகைய வீரர்களுக்கு, சான்றோர்க்கு மெய்புகு கருவி போல, கவசம்போல போர் நடந்த காலத்தில் சேரன் முன்னால் நின்றானாதலின் சேரனைச் 'சான்றோர் மெய்ம்மறை' என்று அழைத்தனர்.

எயிலெறி வல்வி லேவிளங்கு தடக்கை
ஏந்தெழி லாகத்துச் சான்றோர் மெய்ம்மறை
வான வரம்ப னென்ப கானத்து

—பதிற்றுப்பத்து 52: 10 - 12

பதிற்றுப்பத்தில் வானவரம்பன் என்ற சேரனையும் 'சான்றோர் மெய்ம்மறை' என்று கூறியிருப்பதைக் காணலாம். 'வீரர்களைச் சான்றோர் என்றும் கூறும் மரபு 'தானைச் சான்றோர்' (பதிற்றுப்பத்து 82, 13) 'தேர்தர வந்த சான்றோர்' (புறம் 63; 5) என்பவற்றால் உணரப் படும்' என்று உ. வே. சாமிநாதய்யர் எழுதிய அடிக்குறிப்பு கவனிக்கத்தக்கது.

பாடுநர், கொளக்கொளக் குறையாச்
செல்வத்துச் செற்றோர்
கொலக் கொலக் குறையாத் தானைச்
சான்றோர்
வண்மையுஞ் செம்மையுஞ் சால்பு மறனும்

—பதிற்றுப்பத்து 82 - 12 - 14.

தானைச் சான்றோர் என்றதால் போரிடச் சான்றவர் என்ற பொருள் தருகின்றது. சான்றோர் என்ற சொல் போரிடுவதில் சால்புடையவர், போரிடுவதற்கு அமைந்தவர்,

என்ற பொருள் தருகின்றது. சால் என்ற சொல் நிறைவு, மிகுதியைக் குறித்து வந்ததென்று கருத வேண்டும். போர்த் தன்மை நிறைந்தவர், மிகுந்தவர் சான்றோர் எனப் பட்டார்.

சிறுபாணாற்றுப்படையில் 'முல்லைசான்ற' (169) மருதம்சான்ற (186) என்ற வரிகள் வருவதைக் காணலாம். இவைகளில் 'சான்ற' என்ற சொல் அமைந்து என்ற பொருளில் வருவதைக் காணலாம். சான்ற என்ற சொல் சங்கநூல்களில் பொருந்திய, அமைந்த என்ற பொருளில் வந்துள்ளது. ஆதலின் சான்றோர் என்ற சொல் போருக்குப் பொருந்தியவர், அமைந்தவர், போர்வீரர் என்ற பொருள் தருமென்பதில் அய்யமில்லை.

இலக்கண உரையாசிரியர்கள் 'அவனும் அவன் படைக் கலமும் சாலும்' என்ற சொற்றொடரை எடுத்துக் காட்டு வர். சாலும் என்ற சொல் பொருந்தும், போதும் என்ற பொருளில் வருவதைக் காணலாம். படைக் கலத்துக்குப் பொருந்தும் வீரனே, சாலும் போர் வீரனே சான்றோன் என்றழைக்கப்பட்டான்.

புறநானூற்றிலும் "தேர்தர வந்த சான்றோரெல்லாம் தோல்கண் மறைப்ப ஒருங்கு மாய்ந்தனரே" என்று கூறிய வரியில் சான்றோர் என்ற சொல் போர்வீரரைக் குறித்து வழங்கியதைக் காணலாம். இங்கு போர்க்கு அமைந்தோர் என்று பழைய உரை கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே

—புறம். 312

சான்றோன் என்று புறநானூறு கூறுவது போர் வீரரையே என்பது உ. வே. சாமிநாதய்யர் கூறிய குறிப்புரையால் விளங்கும். 'தன் குலத்துக்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி, அதற்குரிய அறிவு, அதற்குரிய செய்கைகள் ஆகிய இவற்றால் நிறைந்தவனாகச் செய்தல் தகப்பனுக்குக் கடமையாம்' என்று உரை கூறியிருத்தலைக் கவனிக்கவேண்டும்.

ஆதலின் சான்றோன், சான்றோர் என்பதற்குப் பொருள் முதலில் போர்வீரர் என்பதேயாகும்.

பிற்காலத்தில் சான்றோர் என்பதற்குச் சால்புடையவர், நல்லவர், ஒழுக்கமுடையவர் என்று உரை கூறினர்.

சான்றோர் என்பவர் சங்ககாலத்தில் இருந்த ஒருவகைப் போர் வீரர் என்று கருத வேண்டும்.

சங்ககாலத்தில் குடிமன்னர்களின் படையில் இனக்குழு மக்கள் (Tribals) தனித் தனிக் குழுவாக படைவீரர்களாக இருந்தனர் என்று கருத வேண்டியுள்ளது. பிற்காலத்தில் சோழர் படையிலும் கைக்கோளர் முதலிய போரிடும் சாதியினர், இனக்குழு மக்கள் வலங்கை, இடங்கை வகுப்புப் படைவீரர்களாகவே இருந்தனர்.

சங்ககாலத்தில் மழவர், மறவர், பாணர் போன்ற இனக்குழுக் குடிகள் மூவேந்தர்கள் படையில் படைவீரர்களாக இருந்தனர். பதிற்றுப்பத்திலே சேரனை 'மழவர் மெய்ம்மறை' என்று கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

மிதியற் செருப்பிற் பூழியர் கோவே
குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை

—பதிற்றுப்பத்து 21 - 23 - 24.

தண்கடற் படப்பை நன்னாட்டுப் பொருந
செவ்வூன் றோன்றா வெண்டுவை முதிரை
வாலூரன் வல்சி மழவர் மெய்ம்மறை

—பதிற்றுப்பத்து 55 - 6 - 9

'மழவர் மெய்ம்மறை' என்று பதிற்றுப் பத்து கூறுவதால் மழவர் என்ற குடியினர் போர்வீரர்களாக இருந்ததையும் அவர்களுக்குக் கவசம் போன்று சேரமன்னன் இருந்தான் என்பதையும் அறிகிறோம்.

பூழியர் என்பாரும் செருப்புமலைக்கடுத்த நாட்டில் இருந்தனர். அவர்களுக்கு அரசனாகவும் மழவர் என்ற வீரக் குடியினருக்குக் கவசமாகவும் சேர அரசர் இருந்தனர் என்று பதிற்றுப்பத்து கூறியுள்ளது.

சங்ககாலத்தில் மூவேந்தர் படையில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த போர் வீரர்கள் தனித் தனியாக, படைகளாக அமைக்கப்பட்டு இருந்தனர் என்று கருத இடமுண்டு. பூழியர் கோவே, குடவர் கோவே என்று சொல்லப்பட்ட இடங்களில் சேரநாட்டுக்குரிய குடிகளின் பெயர்களால் சேர அரசன் விளிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. ஆனால் சான்றோர் மெய்ம்மறை என்ற பெயர்களில் 'பிற நாட்டுப் போர்வீரர்கள் அடங்கிய படைகளின் கவசம் போன்றவன்' என்று சேர அரசன் விளிக்கப் பட்டதாகத் தெரிகின்றது. இவ்வாறு போரில் சிறந்த இனக்குழு மக்களைப் போர்ப் படைகளாக அழைக்கும் பழக்கம் சங்ககாலத்திலிருந்தே இருந்திருக்கின்றது.

பதிற்றுப்பத்தில் மழவர் மெய்ம்மறை என்பதற்குப் பழைய உரையில் மழவர் என்றும் வீரர்களுக்குக் கவசம் போன்றோர் என்றும் கூறப்பட்டுள்ளது. இது 'சான்றோர்

மெய்ம்மறை' என்பது போல நின்றது என்று கூறப் பட்டுள்ளது. மழவர் ஒருவகை வீரர் என்றும் குதிரையை யுடையவரென்றும் அகநானூறு கூறுவதை அதன் பழைய உரையில் ஒரு முக்கியமான செய்தியாகக் கூறப்பட்டுள்ளது. மழவர் ஒருவகை வீரர் என்றதனாலே சான்றோரும் ஒரு வகை வீரர் என்பது கொள்ளத்தக்கதே.

இது போன்றே பாணர் என்பாரையும் ஒரு வகை வீரர் என்று பழைய உரையில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இவர்கள் தமிழ் நாட்டின் வட எல்லையில் குறுநிலத் தலைவர்களாக வாழ்ந்ததை அகநானூறு 13-325 ஆம் பாடல்கள் கூறியுள்ளன. இந்தப்பாணர், பாடும் பாணரின் வேறான படைக் குடியினர் என்பதை உணர வேண்டும். இந்த வீரக் குடியினரான பாணரே பிற்காலத்தில் பெரும் பாணப்பாடி, பாணராஷ்டிரம் என்ற அரசை நிறுவி பல்லவர் போன்ற பெருமன்னரோடு சேர்ந்தும் முரணியும் வாழ்ந்தனர். பிற் காலத்தில் வந்த வாணகோவரையர்கள் இந்த பாணர் குடி வழிவந்த அரச பரம்பரையினராவர்.

ஆதலின் சங்ககாலத்தில் சேர, சோழ, பாண்டியர் பேரரசர்களாக இருந்த போதிலும் அவர்களுக்கடியில் பழங்குடி மக்களைச் சேர்ந்த படையினரும், குறுநிலத்தலைவர்களும் வாழ்ந்து வந்தனர் என்று தெரிகின்றது. சிறந்த போர்வீரர்கள் நிறைந்த குடியினரை (war tribes) முடி மன்னர்கள் பயன்படுத்தினர்.

பதிற்றுப்பத்தில் 'சான்றோர் மெய்ம்மறை' என்று சேர மன்னன் கூறப்பட்டது, ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்று கருத வேண்டும். இங்கு கூறப்பட்ட சான்றோர் ஒரு போர்க் குடியினர் என்று கருதினால் அக்குடியினர் ஈழ நாட்டி லிருந்து வந்தவர் என்று கருத பிற்காலச் சான்றுகள் உள்ளன.

இன்று கேரளத்திலும் தமிழ் நாட்டிலும் உள்ள ஈழவர் தீயர், சாணார், நாடார் என்ற குடிமக்களின் வரலாற்றை ஆராயும்பொழுது இலங்கை நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு இந்தக் குடிமக்கள் இரண்டு முறை குடியேறியதாகப் பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன. கி. மு. சில ஆண்டுகளுக்கு முன்னரே இந்தக் குடிமக்கள் முதலில் சேரநாட்டில் குடியேறினர் என்பது கேரளத்தில் வாழும் ஈழ குல மக்களும், தீயர்களும் கூறும் பரம்பரைச் செய்திகளில் தெரியவருகின்றது.

கரிகால் சோழன் இலங்கையை வென்று இலங்கையிலிருந்து சில குடியினரை அடிமையாகக் கொண்டு காவிரிக் கரையைச் செப்பனிடப் பயன்படுத்தினான் என்று செவி வழிச் செய்திகள் கூறுகின்றன. இவ்வகையாக ஈழவர் தமிழ்நாட்டிலும் வந்திருக்கவேண்டும்.

ஆனால் முதலில் பெரும்பான்மையாக—கேரளத்தில் ஈழவர் வந்திருப்பார்கள் என்று கருத சான்றுகள் உண்டு. கேரளத்தில் ஈழவர்களிடையேயும் தீயர்களிடையேயும் இலங்கை நாட்டிலிருந்து வந்ததற்குப் பரம்பரைக் கதைகள் மரபுச் செய்திகள் உள்ளன. சென்னை ராஜ்ய சென்சஸ் அறிக்கையில் ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது.

சைவர்களும் பௌத்தர்களும் ஈழ நாட்டில் இருந்து சிதம்பரம் வந்து அரசன் முன்னர் வாதம் செய்தனர். அதில் சைவர் வெல்லவே ஈழ அரசனும் சைவனாக மாறி விட்டான்; ஈழவர்கள் இந்த ஈழ அரசனின் சந்ததியார் என்று தமிழ்நாட்டு சாணாரிடையே ஒரு பரம்பரைக் கதை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

தெற்குப் பக்கத்திலிருந்து வடக்கு இலங்கைக்கு வந்த ஈழவர் திருவாங்கூர், கொச்சி—நாடுகளில் குடியேறினர்

என்றும், அவர்களே தெங்கின மரத்தை (தென்னை) அதாவது தெற்குத் திசை மரத்தைக் கேரளத்துக்குக் கொண்டு வந்தனர் என்றும் கேரளத்து ஈழவர் கூறுவர். இந்த ஈழவரின் ஒரு பிரிவினர், கேரள ஈழவர் சாணார் என்ற பெயரைக் குலப்பெயராகவும் பட்டபெயராகவும் சூடினர். இலங்கைத் தீவிலிருந்து வடக்கு மலபாரில் குடியேறியவர் தங்களைத் தீவர்(தீயர்)என்று கூறிக் கொண்டனர்.

அவர்கள், நம்பூதிரிகளாலும் நாயர்களாலும் சாதி வகுப்பு ஏற்பட்டபோது தீயர் என்று தீண்டத்தகாதவராக ஆக்கப்பட்டனர். தீயர் தங்களை ஈழவரிலும் உயர்ந்த சாதியாகக் கருதுகின்றனர்.

ஈழவர் இலங்கையிலிருந்து வந்ததற்கு வேறொரு கதையும் கூறப்படுகின்றது:

சேரமான் பெருமாள் ஆண்டு வந்த காலத்தில் கம்மாளர்களிடையே வந்த சண்டையில் நாட்டாண்மைக் காரர்களால் தச்ச ஆசாரிகள் துன்புறுத்தப்பட்டார்கள். ஆதலின் எல்லா தச்ச ஆசாரிகளும் இலங்கைக்கு ஓடி விட்டனர். மலையாள நாட்டில் வீடு கட்டவோ அகப்பை செய்யவோ கூட ஒரு தச்சனும் கிடைக்கவில்லை. ஆதலின் சேரமான் பெருமாள் ஈழத்துக் கண்டி அரசனை வேண்டிக் கொள்ளவே கண்டி அரசன் தச்ச ஆசாரிகளைத் திருப்பி அனுப்ப ஒப்புக் கொண்டான்.

ஆனால் ஆசாரிகள் திரும்பவும் மலையாள நாட்டுக்குப் போக அஞ்சினர். அந்த ஆசாரிகளுக்குப் பாதுகாப்பாகவும் சேரமான் பெருமாள் அவர்களைத் துன்புறுத்தாமல் இருப்பதற்கும் தச்ச ஆசாரிகள் தங்களுடன் இரண்டு சோகர்களை (சோவர்களை) அனுப்பக் கண்டியரசனை கேட்டுக்

கொண்டனர். ஆசாரிகள் அந்த இரண்டு சோகர்களுக்கும் அவர்கள் பரம்பரையினருக்கும் கலியாணம் முதலிய சடங்குகளின்போது மூன்று மரக்கால் அரிசி கொடுக்க வேண்டும் என்று உடன்பட்டனர். அதன் பிறகு ஆசாரிகள் மலையாள நாட்டுக்கு வந்தனர்.

சோகன், சேகொன் என்ற பெயர்கள் ஈழவருக்கு இன்றும் வழங்குகிறது. இந்தப் பெயர்கள் சேவகன் என்ற பெயரின் திரிபாகும். பண்டைக்காலத்தில் சேவகன் என்ற பெயர் போர்வீரர்களில் தலைசிறந்தவருக்கு வழங்கியது. திருவண்ணாமலைக்கு அடுத்துள்ள 'செங்கம்' நடுகற்களில் சேவகன் என்ற பெயர் போரில் பல்லவ அரசருக்காகப் போரிட்டு வீர மரணம் அடைந்தவரைப் பற்றி வந்துள் ளதைக் கவனிக்க வேண்டும். வேறு கல்வெட்டுகளிலும் இந்த வழக்கு உள்ளது.

ஆதலின் இலங்கை மன்னன் தச்ச ஆசாரிகளுக்குப் பாதுகாப்பாக அனுப்பிய ஈழவர், சேவகன் என்றழைக்கப் பட்ட போர்வீரர்களாவர். அவர்களே சான்றோராக பதிற்றுப்பத்தில் அழைக்கப்பட்டனர். சேவகன் என்ற பெயர் வழக்கும் ஈழவர் போர்வீரர்களாக அக்காலத்தில் இருந்ததைக் குறிப்பிடுகின்றது.

இந்தக் கம்மாளர் கதை வேறுவிதமாகவும் கூறப்படு கின்றது. இந்தக் கதை திருவஞ்சிக் குளத்தில் கல்வெட்டாக புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையில் இருந்து தச்ச ஆசாரிகள் வந்தபோது சிலர் பின்னாலேயே தங்கி விட்டனர். அவர்கள் திரும்பவும் மலையாள நாட்டுக்கு வந்தபோது அவர்களை ஏற்கனவே வந்த ஆசாரிகள் தங்கள் சாதியில் சேர்க்க மறுத்தனர். அவர்களைப் பதினெட்டான்மார், பூழித்தச்சர் என்று அழைக்கின்றனர்.

கேரளத்தில் பூழி நாட்டில் தங்கினதால் அவர்கள் பூழித்தச்சர் என்று அழைக்கப்பட்டனர். இன்றும் பழைய பிரெஞ்சுத்திட்டான மாகியில் பூழி நாட்டின் தலைமையிடம் இருந்ததைக் குறிப்பிட பூழித்தலை என்ற ஊர் உள்ளது.

இந்த ஊரிலும் சுற்றிலும் தீயர்கள் மிகுந்து உள்ளனர். ஈழ்வரும் தீயரும் முற்காலத்தில் போர்வீரர்களாக இருந்தனர் என்பதை அவர்களுடைய சில சடங்குகளும் காட்டுகின்றன. தீயர்களின் திருமணச் சடங்குகளில் சண்டை போடுவதற்குச் செல்வது போல் மணமகன் வேட்டியைக் கீழே பாய்ச்சி உடுத்துக்கொண்டு கேடயமும், வாளும் எடுத்துச் செல்வான். மாப்பிள்ளைத் தோழராக வரும் இருவர் போர்வீரர்போல உடுத்திக் கொண்டு உடன் இருந்து ஆடிக்கொண்டே செல்வர்.

தீயர்களின் சாதித்தலைவனுக்குப் பெயர் தண்டன் என்பதாகும். தண்டன் என்ற பெயர் தண்டுக்குத் தலைவன் என்று பொருள் தரும். தண்டு என்பது பிற் காலத்தில் சேனையைக் குறிக்கும். தீயர்கள் போர்வீரர் களானதால் போர் வீரர்களின் தலைவன் தண்டன் என்றழைக்கப்பட்டிருக்கலாம்.

போரில் முதன்மையாக நின்றவர்களை முதலில் என்று அழைத்தது, பின் சாதிப் பெயராகத் தமிழ் நாட்டில் மாறியதையும் இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

தொல்காப்பியத்தில் போரில் சிறந்த வீரத்தைக் குறித்து வழங்கிய பெயரான ‘பிள்ளை’ மறம் என்ற பெயரடிப்படையாகத் தோன்றியதே பிள்ளை என்ற சாதிப் பெயராகும். போரில் சிறந்தோருக்கு வழங்கிய பிள்ளை என்ற பெயர் பின்னர் சாதிப் பெயராக மாறியதைக் காணலாம்.

தீயர்களின் திருமணத்தில் மணமகன் ஊர்வலமாகச் செல்லும்போது தண்டன் தலைமையில் போர் புரிவது போல வாளைச் சுழற்றி, போர்வீரர் உடையில் மணமகனும் சிலரும் செல்லும் சடங்கு தீயர்களின் பழைய தொழிலின் எச்சமாகவும் நினைவு மரபாகவும் கருதலாம்.

ஈழவரும் தீயரும் போர்வீரர்கள் என்பதற்கு மற்றொரு சான்றும் உள்ளது. கன்னட நாட்டில் கள்ளிறக்குவோர் 'ஹலெபெய்க்க' (Halebapika) என்றழைக்கப்படுகின்றார்கள். இவர்கள் ஈழவர் போலவே உருவத்திலும் நிறத்திலும் உள்ளனர். 'ஹலெபெய்க்க' என்ற பெயர் 'பழைய பய்க்க' என்று பொருள்படும் என்றும் பழைய காலத்தில் இக்குடியினர் போர்வீரர்களாக இருந்ததால் "ஹலெ பய்க்க" (பழைய போர் வீரர்) என்றழைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்.

விஜயநகர அரசாட்சியின்போது இக்குடியினரில் ஒருவன் சேனைத் தலைவனாக இருந்து ஜாகீர் பெற்றதாகவும் சொல்லப்படுகின்றது. இந்தக் கன்னடக் குடியினர் தங்களைத் 'தெங்கின வகுப்பு' என்று சொல்லுகின்றனர். மலையாளநாட்டில் வாழும் ஈழவர்களும் இடைக் காலத்தில் மலையாள நாட்டு மன்னர்களுக்குப் போர்வீரர்களாகப் பணிபுரிந்திருக்கின்றனர். போரில் இறந்துபட்டவர்களும் உரிமைகள் பெற்றிருக்கின்றனர்.

18 ஆம் நூற்றாண்டில் அம்பலப்புழை ராஜாவின் படையில் போர் வீரர்களாக இருந்தவர்களில் சேகுவர் என்ற ஈழவரே நிறைய இருந்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். சேகுவர் என்ற பெயர் சேவகர் என்பதன் மாற்றமே. சங்ககாலப் பெயரான சான்றோர் என்பதும் பிற்காலப் பெயரான சேவகர் என்பதும் ஒரே பொருளுடையன.

பார்த்தலோமியோ (Friar Bato lomeo) என்ற வெளி நாட்டுக்காரர் ஈழவர்களைப் பற்றி எழுதியுள்ளார். அதில் ஓணம் திருவிழாவில் திருவனந்தபுரத்து ஈழவர்கள் இரண்டு பகுதியாகப் பிரிந்து கை தமுக்கு என்ற இடத்தில் போர் புரிவதைப்பற்றி எழுதியுள்ளார். இதில் கலந்து கொள்ளாத ஈழ இளைஞன் அவமானப்படுத்தப்பட்டான் என்றும் எழுதியுள்ளார். இச் சடங்கும் ஈழவர் போர் வீரராயிருந்ததைக் விளக்கும்.

ஈழவர்களில் உள்ள வகுப்புகளில் பாண்டி ஈழவர் திருவனந்தபுரத்தில் நிறைய உள்ளனர். மலையாள ஈழவரில் சோழி ஈழவர் என்ற வகுப்பு உள்ளது. இவர்கள் சோழநாட்டில் இருந்து சென்ற சாணார், நாடார் ஆகலாம். கேரளத்தில் இவர்களைப் பிற்காலத்தில் குடி பெயர்ந்து வந்தவராகக் கருதுவதே சான்றாகும்.

ஈழவர்களில் நாடி என்ற வகுப்பினர் கார்த்திகைப் பள்ளி என்ற ஊரைச்சுற்றி இருக்கின்றனர். இவர்களுடைய பெயர் தமிழ்நாட்டு நாடார் பெயரோடு ஒத்துள்ளது.

மலையாள ஈழவர்கள் அக்காலத்தில் விரும்பித் தரித்த பட்டப்பெயர் சாணான் என்பதாகும். இப்பெயர் சான்றோன் என்ற பெயரின் மாற்றம் என்று தர்ஸ்டான், கால்ட்வெல் முதலிய பலரும் எழுதியுள்ளனர்.

சான்றோன் என்பதற்குத் தலைவன் என்று தர்ஸ்டான் பொருள் கூறியுள்ளார். இந்தச் சான்றோன் என்ற பட்டம் ஈழவர்களில் சிறந்தோருக்கு அரசர்களால் வழங்கப்பட்டதாகவும் பின்னர் குடும்பப் பட்டமாகவும், பெயராகவும் மாறியதாகக் கூறுவர். ஆனால் இந்தப்பெயர் இன்று தமிழ் நாட்டில் இழிவாகக் கருதப்படுகின்றது. ஈழவர் போர்த் தொழிலில் இருந்து கள்ளிறக்கும் தொழிலில் இறங்கின

போது சான்றோன் (சாணான்) என்ற பெயரும் இழிவான பெயராகக் கருதப்பட்டது.

மலையாள நாட்டில் சான்றோன் (சாணான்) என்ற பட்டப்பெயருக்கு அடுத்தபடியாக சிறந்ததாக **பணிக்கர்** என்ற பெயர் வழங்கப்பட்டது. பணி செய்பவன் **பணிக்கன்**. சில இடங்களில்தண்டன் என்ற பெயர் பட்டப் பெயராகத் தலைவருக்கு வழங்கப்பட்டது. தண்டன் என்பது தண்டம் செய்பவன், தண்டை செலுத்துபவன் என்ற பொருளில் வழங்கியது.

**ஆசான்** என்ற பெயரும் வழங்கிற்று. களரி பயிற்று என்ற ஆயுதப் பயிற்சி சாலைகளில் சிறந்த ஈழவர்க்கு **ஆசான்** என்ற பெயரும் வழங்கிற்று. தெற்குத் திருவனந்த புரத்தில் ஈழவர் **முதலியார்** என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டனர். இது அவர்கள் போர்ப்பணியில் பெற்ற தலைமையால் கொண்டது என்பது தெளிவாகின்றது.

ஆந்திர நாட்டில் தெலுங்கு பேசும் **இடிகர்** என்ற சாதியினர், கள்ளிறக்கும் தொழிலை உடையவர். இவர் களும் தங்களை முற்காலத்தில் போர்வீரர்களாக இருந்த தாகக் கூறிக்கொள்கின்றனர். தீவர் என்றும் சாணார் என்றும் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். ஆதலின் கேரளத்திலும், கன்னட நாட்டிலும், ஆந்திர நாட்டிலும் கள்ளிறக்குவோர் ஈழத்திலிருந்து வந்ததாகவும் பழைய காலத்தில் போர் வீரர்களாக இருந்ததாகவும் கூறிக் கொள்வதால், அதற்கேற்ப மரபுகள், கதைகள், சடங்குகள் இருப்பதால், அவர்கள் தமிழ் நாட்டுச் சாணார்கள், நாடார்கள், கிராமணிகள் என்றே கருத இடமுண்டு.

இவர்களின் முன்னோர்கள் பதிற்றுப்பத்தில் கூறப் பட்ட போர்வீரர்களான சான்றோர் என்றே கருத

வேண்டும். அவர்கள் ஈழத்திலிருந்து முதலில் குடியேறிய இடம், சேரநாடாக இருக்க வேண்டும். பின்னர் பல்லவர் காலத்தில் இன்றைய தமிழ்நாட்டில் குடியேறினர் என்று கருத பல்லவர்கள் கல்வெட்டுச் சான்று உள்ளது. பல்லவர் கல்வெட்டுச் சான்றைத் தாங்கும்படி வெளிநாட்டுப் பயணி களின் செய்திகளும் உள்ளன. கி. பி முதல் இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் சான்றோர்கள் (சாணார்கள்) சேரர் படையில் போர்வீரர்களாக இருந்ததைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது. ஆனால் ஈழநாட்டிலிருந்து வந்ததாகக் குறிப்பிடவில்லை.

இருப்பினும் பிற்காலக் கல்வெட்டுச் சான்றுகள், அதற்கும் மிகப் பிற்கால சடங்குகள், கதைகள், மரபுகள் எல்லாம் அவர்கள் ஈழ நாட்டிலிருந்து (வட இலங்கை யிலிருந்து) வந்ததைக் காட்டுகின்றன.

பல்லவர் காலத்தில்தான் தென்னைமரம் நிறைய பயிரிடப்பட்டதற்குக் கல்வெட்டுச்சான்றுகள் உள்ளன.

சங்க இலக்கியத்தில் தென்னைமரம் மிக அரிதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனாலும் தென்னை மரத்திலிருந்து கள்ளிறக்குவது கூறப்படவில்லை. பனை மரத்தில் கள்ளிறக்குவது சங்க காலத்தில் பல இடங்களில் கூறப் பட்டுள்ளது.

இந்தச் செய்தி எதைக் காட்டுகின்றது?

சங்ககாலத்தில் தென்னைமரம் நிறையப் பரவவில்லை, அதிலிருந்து கள்ளிறக்கப்படவில்லை என்பதையே காட்டு கின்றது.

இந்தச் செய்திக்கு ஆதரவாக 'பெரிப்புளூஸ்' என்னும் நூலில் தமிழகத்திலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதியான

பொருள்களில் தேங்காயும் தென்னைமரப் பொருள்களும் கூறப்படாததை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

பெரிப்புளூஸ் நூலின் காலம் முதல் நூற்றாண்டு ஆகும். இந்தச் சான்றும் சங்க நூல்களில் பெரும்பாலானவற்றின் காலத்தைக் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கொண்டுபோக முடியாது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

வெளி நாட்டு ஆசிரியர்களில் முதன் முதல் தென்னையைப் பற்றிக் கூறியிருப்பவர் Comes Indico pleastes என்பவராவர். இவர் கி. பி. 522ல் இருந்து 547 வரை குறிப்பு எழுதியுள்ளார். சிரியன் கிருஸ்துவர்களுடைய பழைய செப்பேட்டுக் குறிப்புகளிலும் ஒன்பதாம் நூற்றாண்டில் தீயர்கள் தென்னைமரத் தோட்டம் வைத்திருந்த செய்தி கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்திகள் பல்லவர் கல்வெட்டு செப்பேட்டுச் செய்திகளோடு ஒத்திருப்பது தெளிவாகிறது.

சிரியன் கிருஸ்துவர்களின் பரம்பரைச் செய்திகளில் அவர்களே ஈழவர்களை ஈழ நாட்டிலிருந்து மலையாள நாட்டிற்கு அழைத்ததாகக் கூறுவதுண்டு. ஈழவர்கள் கொண்டுவந்தவைகளில் தென்னையொடு அலரிச்செடி, கமுகு, ஒருவகை எலுமிச்சை ஆகியவற்றையும் கூறுவர். ஈழத்தலரி என்ற செடி தமிழ் நாட்டிலும் உள்ளது.

கல்வெட்டுச் சான்றுகளில் பல்லவர்கள் காலத்தில் ஈழ வரைப்பற்றிய செய்திகளைக் காணலாம். ஈழவர்கள்மீது ஆள்வரியும், மரம் நடுவதற்குரிய வரியும், கள் இறக்குவதற்குரிய வரியும் பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் போடப்பட்டது. **ஈழம் பூட்சி** என்னும் வரி ஈழவர்கள் போட்ட வரியாகும். **பூட்சி** என்ற சொல் ஆளைக் குறிக்கும். காட்டுப் பூச்சி என்ற ஆற்காட்டுப் பேச்சு வழக்கில்

காட்டாள் என்ற பொருளில் பூட்சி என்ற சொல் வழங்கு கின்றது.

ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாம் நந்தி வர்மப் பல்லவனின் தண்டந்தோட்டு செப்பேட்டில்,

> ''கண்ணாலக்காணமும் ஊராட்டும் குசக் காண மும் தட்டுக்காயமும் ஈழப்பூட்சியும் மிசைப்பூட்சி யும்......தமனகந்நடப் பெறுவதாகவும் காவு தெங்கிடப் பெறுவதாகவும்''

என்று வருகிறது. இதில் ஈழப் பூட்சி என்ற 'வரி'யும், காவுதெங்கிடப் பெற உத்தரவும் ஈழவர் ஏறப் பெறாத தெங்கு மரங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.

இதே போன்று மூன்றாம் நந்திவர்மனின் வேலூர் பாளையச் செப்பேடும்,

> ''இவர்கள் மனம் இன்றி ஈழவர் ஏறப்பெறாதவ ராகவும்''

என்று கூறுகின்றது. ஈழவர்கள் கள் இறக்கக் கூடாது என்று சொல்வதால் அந்த மரங்கள் தேங்காய்க்காகவும் இளநீர் அபிஷேகத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக் கலாம் என்று கருத வேண்டும்.

கர்ப்பூரம் 'இளநீர்' அபிஷேகம் முதலிய வழிபாட்டுச் சடங்குகள் பல்லவர் காலத்தில் தோன்றியனவாகும். கர்ப் பூரமும் தென்னையும் வெளிநாட்டுப் பொருள்கள் என்பதை உணர வேண்டும்.

ஈழவர்கள், பல்லவர்கள் காலத்தில் தெங்கு நடுதலும் மரம் ஏறாமையும கள் இறக்குதலும் ஆன தொழில்களைச் செய்துவந்திருக்கின்றனர். சோழர் காலத்தில் ஈழவர்மேல்

போட்ட வரி 'சான்றான் மாட்டுமேனிப்பொன்' என்றழைக்கப்பட்டுள்ளது. ஈழவர் ஈழக்கையர் என்று சோழர் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றார்கள்.

''ஈழம் புஞ்சை (S. I. I. XVII 12;)எனிக்காணும்''

என்ற வரிகளும் ஈழவர்மேல் போடப்பட்ட வரிகளாகும்.

இது போன்றே கேரளத்தில் கி. பி. 814இல் ஈழவர்க்குக் கொடுக்கப்பட்ட உரிமை சாசனத்தில் வெற்று நிலங்களில் தென்னை நடும் உரிமையும், தென்னைமரம் ஏற தாய்க் கயிறு உரிமையும், ஏணி உரிமையும் கொடுக்கப்பட்டுள்ளது.

பிற்காலப் பல்லவர் காலத்தை ஒத்து மலையாள நாட்டிலும் ஈழவர்கள் கள்ளிறக்கும் தொழிலைச் செய்து வந்தனர் என்பது தெரிகின்றது.

தென்னை மரம் சங்ககாலமான கி. பி. முதல், இரண்டு, மூன்று நூற்றாண்டுகளில் பரவலாக—கேரளா உள்பட்ட அன்றைய தமிழகத்தில் இருந்ததில்லை என்பதற்குச் சங்க இலக்கியமே சான்று தருகிறது.

புற நானூற்றில் ஒரு பாடலில் இளநீர் என்ற சொல் வருகின்றது. பெரும்பாணாற்றுப்படையிலும் இச்சொல் வருகின்றது.

அய்ங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய முந்திய சங்க நூல்களில் தென்னைமரத்தைப்பற்றி யாதொரு குறிப்புமில்லை. தென்னைமரம் சங்க காலத்தில் அரிதாகக் காணப்பட்டது. பரவலாகவும் மிகுதியாகவும் இருந்திருந்தால் சங்க இலக்கியத்தில் அகத்திணையில் கருப்பொருளாகக் கூறப்பட்டிருக்கும். மிகப் பிற்காலத்து

இலக்கண நூல்களும் தென்னை மிகுந்திருந்தபோதுகூடப் பழைய சங்ககால மரபைப் பின்பற்றித் தென்னையை நெய்தற் திணைக்குரிய கருப்பொருளாகக் கூறவில்லை.

சங்க நூல்களில் தென்னைமரம் அரிதாகக் கூறப்பட்டிருந்தாலும் அதிலிருந்து கள் இறக்குவது கூறப்படவே இல்லை. ஆனால் பனைமரத்தில் இறக்கிய கள்ளைப்பற்றிப் பல சங்கப்பாடல்கள் கூறுகின்றன. ஈச்சமரக் கள் கூறப்பட்டுள்ளது. ஆதலின் தென்னைமரம் சங்ககாலத்தில் தமிழகத்துக்கு வந்ததாயினும் அதிலிருந்து கள் எடுக்கும் தொழில் வரவில்லை என்பது தெளிவாகின்றது.

தென்னைமரம் பசிபிக் தீவிலிருந்தும், ஈழத்திலிருந்தும் இந்தியாவுக்கும் தமிழகத்திற்கும் வந்ததாகப் பல தாவர நூல் அறிஞர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

கி. மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே தென்னை இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்திருக்கலாம் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். ஆதலின் ஈழவர் கி.மு. ஓரிரண்டு நூற்றாண்டுகளிலோ அல்லது கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளிலோ தமிழகத்திற்கு வந்திருந்திருக்கலாம். அவர்கள் தென்னை மரத்தைக் கொண்டுவந்திருக்கலாம். ஆனால் கள் இறக்கும் தொழிலை அக்காலத்திலேயே கொண்டு வந்திருக்க முடியாது.

கேரள அறிஞர்கள் பரம்பரைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு கேரளத்துக்கு ஈழவர் கி. மு. அல்லது கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தென்னையோடு தென்னங் கள் இறக்கும் தொழிலைக் கொண்டுவந்தனர் என்று கூறுவதற்குச் சங்க நூல்களில் சான்றுகள் இல்லை.

முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட பெரிப்புளூஸ் நூலில் காணும் ஏற்றுமதிப் பொருளில் தென்னை இல்லை.

அவ்வளவு பரவலாகவும் மிகுதியாகவும் தென்னை அன்றைய சேர நாட்டிலோ தமிழகத்திலோ இல்லை.

ஆனால் இறக்குமதிப் பொருள்களில் யவனர் கொண்டு வந்த மது உள்ளது. பலவகை மதுவைப்பற்றி அதாவது,

அரிசிக் கள்

தினைக் கள்

பழங்களிலிருந்து இறக்கிய கள்

பனங் கள்

ஈச்சங் கள்

யவனர் சாடிகளில் அனுப்பிய மது

ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்ட சங்கப்புலவர்கள் தென்னங் கள்ளைக் குறிப்பிடாது விட்டுவிடுவரா? ஆதலின் ஈழவர் முதலில் சங்க காலத்தில் வந்தபோது தென்னங் கள்ளை இறக்கும் தொழிலைக் கொண்டு வரவில்லை.

ஆனால் அவர்கள் சேரர் படையில் சான்றோராக, போர்வீரராக வந்து சேர்ந்ததற்குப் பதிற்றுப்பத்து ஆதாரம் தருகின்றது. இதே பதிற்றுப்பத்து தென்னைமரத்தைப் பற்றிக் கூறி யிருப்பினும் சான்றோர் கள்ளிறக்கியதைப் பற்றியோ தென்னங் கள்ளைப்பற்றியோ கூறவில்லை. ஆதலின் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் ஈழ நாட்டிலிருந்து போர் வீரராகச் சான்றோர் சேர நாட்டிற்கு வந்திருக்கலாம் என்று கருத வேண்டும்.

சங்கநூல்களில் ஈழவர், தீவகர் என்ற பெயர்கள் இல்லை. பல்லவர் காலத்திலேதான் தென்னை மரத்தி

லிருந்து கள்ளிறக்கும் தொழிலைத் தெரிந்த ஈழவர் இலங்கை யிலிருந்து சேர நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் வந்தனர். இவர்களை ஈழவர் என்று அழைத்தனர்.

ஈழ்வரே தென்னங் கள்ளை இறக்குவதை முதலில் தமிழகத்தில் கொண்டுவந்ததால் கள்ளிற்குப் பெயராக ஈழம் என்ற பெயர் பிற்காலத்தில் வழங்கலாயிற்று. ஆனால் இந்த ஈழவரும் தங்களைச் சான்றோன் என்று பழைய பெயரால் கூறிக்கொள்வதிலேயே பெருமைப் பட்டனர். ஈழவர்களின் தலைவர்களுக்குச் 'சான்றான்' என்ற பட்டம் அரசர்களால் அளிக்கப்பட்டது. ஆதலின் ஈழவர்களும் கள்ளிறக்கும் தொழிலைவிட தங்களுடைய முற்காலத் தொழிலான போர்த்தொழிலையே பெருமையாகக் கருதிச் சான்றோன் என்ற பட்டப் பெயரை வைத்துக் கொள்ள ஆசைப்பட்டனர்.

12 ஆம் நூற்றாண்டில் பெரியபுராணம் எழுதிய சேக்கிழாரும் ஈழ குலச் சான்றோர் என்று ஏனாதி நாதரைக் குறிப்பிடுகின்றார். ஏனாதி என்ற பெயர் படைத் தலைவர் பெயர் என்றும் குறிப்பிட்டுள்ளார். இச்செய்தியும் ஈழத்தில் இருந்த சான்றோர் சாதியினர் படையில் இருந் தனர், படைத்தலைவராக இருந்தவர் என்பதைக் காட்டு கின்றது.

பல்லவர் சோழர் கல்வெட்டுகளில் ஈழவர் என்ற பெயர் பரவலாக இருந்தாலும் தமிழகத்து ஈழவர்கள் சான்றோர் (சாணார்) என்றுதான் இன்றும் சொல்லிக்கொள்கின்றனர். கிராமணி என்ற பெயராலும், நாடார் என்ற பெயராலும் இன்று அழைக்கப்படுபவர் 'சான்றோர் மெய்ம்மறை' என்று பதிற்றுப்பத்தில் அழைக்கப்பட்ட 'சான்றோர்' என்பதில் ஐயமில்லை. இந்தச் சான்றோர் இன்றைய சாணார் சாதியாரின் முன்னோர் என்று கருதவேண்டும். சங்க

காலத்தில் இவர்கள் சேரநாட்டுக்கு வந்து சேரமன்னர் படையில் போர்வீரராக சான்றோர் என்ற பெயருடன் இருந்தனர்.

இவர்களுக்குப் பின்னர் பல்லவர் காலத்தில் வந்த ஈழவர், தீயர் ஆகியோர் கள்ளிறக்கும் தொழிலைப் பல்லவர் காலத்தில் கொண்டு வந்தனர்.

கள்ளிறக்கும் தொழில் காரணமாக சான்றோர் (சாணார்), ஈழவர், தீயர் ஆகிய மூன்று வகுப்பினரும் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்டனர். பல்லவர்கள் காலத்தில்தான் வைதீக இந்து மதத்தின் பாதிப்பால் சாதிகள் பெருகின. சங்கீர்ண சாதிகள் தோன்றின.

வைதீக இந்து மதத்தில் எள்ளைக் கசக்கி எண்ணெய் எடுப்போரைத் தாழ்ந்த சாதியாராகக் கருதினதுபோல தென்னம் பாளையைக் கசக்கிக் கள்ளிறக்குவோரையும் தாழ்ந்த சாதியினராகக் கருதினர்.

ஆனால் அதேசமயத்தில் போர்த்தொழிலில் சிறந்தோர் உயர்ந்த சாதி னராகக் கருதப்பட்டனர். ஆதலின் தங்கள் தங்கள் சாதியை உயர்த்துவதற்குப் பிற்காலத்தில் போர்த் தொழிலில் சேருவது வழக்கமானது.

போர்த்தொழில் செய்த கைக்கோளர் நெய்யும் தொழிலிற்குச் சென்றபோது சாதியில் தாழ்வு பெற்றனர்.

அதுபோன்றே சங்ககாலத்தில் போர்த்தொழில் செய்த சான்றோரும் கள் இறக்கும் தொழில் செய்தபோது தாழ்ந்த சாதியினராக்கப்பட்டனர்.

மேற்கோள்:


1. Castes and Tribes of South India, Edgar Thurston.

2. Seminar on Hero Stones, Edited by R. Nagasamy.

3. செந்தமிழ்ச்செல்வி, பிப்ரவரி 1974. இளந்தீர்— பி. எல். சாமி.

4. (a) De Condolle A. 1834, Origin of Cultivating plants-Kegan Paul Trench and Co., London.

   (b) Vevilov, V. I. (1926) The origin, variation, immunity and breeding of cultivated plants-Chronics Botanica 13 (16) 1949–50.

   (c) An introduction to the Botany of Tropical Crops-Leslie S. Cobley.

# 8

# ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

பதிற்றுப்பத்தில் ஆறாம்பத்தின் தலைவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் பெயர் வந்த காரணத்தைச் சிலர் ஆராய்ந்து எழுதியுள்ளனர். நான் எழுதிக் கழக வழியாக வெளிவந்த 'விலங்கின விளக்கம்' என்ற நூலிலும் இதைப் பற்றி விளக்கம் கூறியுள்ளேன்.

செந்தமிழ்ச்செல்வி 49 ஆம் சிலம்பில் பரல் ஆறில் (பிப்ரவரி 1975) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கு வந்த பெயர்க் காரணத்தை ஒரு புலவர் ஆராய்ந்துள்ளார். 'ஆடு' என்ற சொல்லிற்கு வெற்றி என்று பொருள் கொண்டு வெற்றியைக் கொள்கையாகக் கொண்ட சேரலாதன் என்று பொருள் கொள்ளுதலே பொருளுடையதும் பொருந்துவதுமாகும் என்று எழுதியுள்ளார்.

வெற்றியைக் கொள்கையாகக் கொள்வது என்பது எல்லா மன்னருக்கும் பொருந்தும். அப்படிப் பொருந்துவதென்றால் இமயம் சென்று வென்றதாகக் கூறப்படும் சேரன்

செங்குட்டுவனுக்கு அந்த அடைமொழிப் பெயர் சிறப்பாக வழங்கியிருக்க வேண்டும்.

புலவர் முனியப்பன் 'எவராலும் பிடித்தற்கரிய வருடை' எனும் மலையாட்டைப் பிடித்துக் கொணர்ந்த 'அரிதினும் அரிய செயலால் "ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்" என்று வழங்கியதாகச் 'செல்வி'யிதழில் (டிசம்பர் 74) எழுதியுள்ளார். இந்த விளக்கம் நான் அதற்கு முன்னர் எழுதிய விலங்கின விளக்கத்தில் கூறிய கருத்தை ஒட்டியதாகும். பொருத்தமான விளக்கமாகும்.

ஆடுகளைக் கவர்ந்ததோ, மீட்டதோ, ஒரு மன்னனுக்கு தனிச் சிறப்பில்லை. ஆடுகளையும், மாடுகளையும் கவருவதும், மீட்பதும் சங்க கால மன்னர்களின் போர் முறையாகும். சங்க கால மன்னர்களுடைய அரிய செயவில்லை. ஆனால் போர் முறைப்படி உரிய செயலாகும்.

பேரறிஞர் உ.வே. சாமிநாதய்யர் குறிப்புரையில் 'பகைவர்களால் கவரப்பட்ட மலையாடுகள்' என்ற விளக்கத்தைக் கவனிக்க வேண்டும். இந்தக் குறிப்புரையில் 'மலையாடுகள்' என்று கூறியது சரியானதாகும்.

ஆனால் பகைவர்கள் சேரநாட்டிலிருந்து மலையாடுகளைக் கவர்ந்ததை மீட்பித்ததாகக் கூறியது தவறான செய்தியாகும்.

அறிவியல் தெரிந்தோர் விலங்கின பழக்க வழக்கங்களைத் தெரிந்தோர் இச் செய்தியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தண்டகாரண்யத்து வருடை என்று சொல்லப்பட்டதால் இந்த வருடை என்ற மலைஆடு தண்டகாரண்யத்தில் மலைகளின் குவடுகளில் வாழ்ந்த மலையாடு என்பதில் ஐயமில்லை. தண்டகாரண்யம் எதுவென்று கண்டுபிடிக்க வடமொழி நூல்களை நான்

ஆராய்ந்தபோது அந்த நூல்கள் பலவாறு கூறுகின்றன. ஆந்திர நாட்டிற்கு அப்பால் தண்டகாரண்யம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அங்கு மலைகளும் உள்ளன.

வடமொழி நூல்களில் தண்டகாரண்யத்தைப்பற்றிக் கூறிய செய்திகள் குழப்பத்தைத் தருகின்றன. ஆனால் விந்தியமலையே தண்டகாரணியத்துக் 'காடாரம்பம்' ஆகும். புதுவையிலிருந்து திண்டிவனம் செல்லும் பழஞ்சாலையில் 'காட்ராம்பாக்கம்' என்ற ஊர் உள்ளது; 'காடு ஆரம்பிக்கும் பாக்கம்' என்ற பொருளுடையதாகும்.

பதிற்றுப்பத்தில் 'நாடு கண் நெடுவரை' என்று கூறப் பட்டுள்ளது.

நான் மாகியிலிருந்து உதக மண்டலத்திற்குக் கூடலூரின் வழியாகச் சென்றபோது 'நாடுகாணிச்சுரம்' என்ற ஊர்ப் பெயர் மலையாளத்தில் கூறப்பட்டதைக் கேட்டேன்; வியப்புற்றேன்.

சுரம் என்ற சங்கக்காலப் பெயர் கடக்க முடியாத, நடக்க முடியாத வழிகளைக் குறித்து வழங்கினதாகும். 'நாடுகாணிச்சுரம்' என்ற வழக்கு கடினமான வழியைக் கடந்து நாட்டைக் கண்டதைப் பற்றியதாகும். பதிற்றுப் பத்து 85ஆம்பாட்டின் 'நாடுகாண் நெடுவரை'க்குக் கூறிய உரையைக் கவனிக்க வேண்டும். இந்தப் பாட்டின் தலைப் பாக 'நாடுகாணெடுவரை' என்ற பெயர் கூறப்பட்டுள்ளது.

"இஞ்சுனை நிலைஇய திருமா மருங்கிற்
கோடுபல விரிந்த நாடுகா ணெடுவரைச்"

—பதிற்றுப்பத்து 85: 6-7

நீலகிரி மலையேறும்போது கேரளப் பக்கத்தில் ஓர் ஊர் இன்றும் 'நாடுகாணிச்சுரம்' என்று அழைக்கப்படுவதும்

பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட 'நாடுகாண்நெடுவரை' என்ற வழக்கை ஒட்டியிருப்பதும் அரிய செய்தியாகும்.

> "நாடுகாண் நெடுவரை யென்றது, தன்மேல் வெளி நாட்டைக் கண்டு இன்புறுவதற்கேது வாகிய ஓக்கமுடைய மலையென்றவாறு; இச்சிறப் பாலே இச் செய்யுளுக்கு நாடுகாணெடுவரை என்று பெயராயிற்று"

என்று விளக்கம் கூறியதைக் கவனிக்க வேண்டும். சிறந்த மன்னன் உயர்ந்த மலைகளின்மேல் நின்று நாடுகளைக் காணும் வழக்கத்தை,

> "நாடுகாண் நனந்தலை" (மலைபடுகடாம்—270)
> "பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை"
> —அகம். 372

என்ற வழக்குகளில் காணலாம்.

மலையைக் கடப்பதற்கு அரிதான வழிகளின் மேல் நாடு உண்டாக்கிக் காணப்படுவதால் 'நாடுகாணிச்சுரம்' என்ற தூய தமிழ்ப் பெயர் மலையாளமொழியில் காணப் படுகின்றது.

இந்த நாடுகாண் நெடுவரைக்கும் மேலேதான் இந்த வரையாடு என்ற வருடை இயற்கையாக வாழ்கின்றது. 'வரையாடு' என்ற பெயர் மலையாடு என்று இக்காலத்தில் வழங்கும் பெயருடன் ஒப்புமையுள்ளதைக் காணலாம்.

சேரலாதன் தண்டகாரண்யத்தில் கோட்படுத்தின வருடைகள் மலையாடுகள்தாம். ஆடுகோட்பாட்டுச் சேர லாதன் என்ற பெயரில் 'ஆடு' என்பது மலையாடு என்று இன்றும் கூறப்படுட செய்தி முற்றிலும் உண்மையே. பிற செய்திகள் தவறு. சங்கப் புலவர்கள் இயற்கையை உள்ளது

உள்ளவாறு ஆராய்ந்தவராவர். இப்பொழுது கூறப்படும் 'காட்டாடு' வேறு; 'மலையாடு' வேறு.

இன்றும் இந்த மலையாடுகள் ஆனைமலையில் உச்சிக் குவடுகளில் வாழ்கின்றன. இதனுடைய கால்கள் மலைக் குவட்டுப் பாறையைக் கவ்விப் பற்றிப் பிடித்துக் கொள்வதால்குவடுகளில் வாழமுடிகிறது.

இந்த மலையாட்டை நீலகிரி, ஆனைமலையில் காப்பித் தேயிலைத் தோட்டம் வைத்த வெள்ளைக்காரர்கள் வேட்டையாடினர். மிகவும் கூர்ந்து நோக்கும் விலங்கானாலும், விழிப்புடன் தன்னைப் பாதுகாக்கும் விலங்கானாலும் சில சமயங்களில் வெள்ளைக்காரர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

உச்சிக் குவட்டில் வாழ்வதால் சுட்டுக் கொன்ற மலையாடுகள் பள்ளத்தாக்கில் விழுவதுண்டு. அவற்றைப் பழங்குடி மக்கள் இறங்கி எடுத்துத் தருவர். வெள்ளைக் காரர்கள் அதன் இறைச்சியை விரும்பி உண்பர். வெள்ளைக் காரர்கள், இந்த மலையாட்டை வேட்டையாடுவது கடினமானதும், சிறப்பானதும், பெருமையானதும் ஆகும் என்று கருதினர்.

புதுக்கோட்டை அரசர்கள் வரிப் புலியை வேட்டையாடிக் கொன்றதில் பெருமை பெற்றனர். மைசூர் மாமன்னர்களும் புலிகளை வேட்டையாடிப் பெருமை தேடிக் கொண்டனர். இன்றும் உதகமண்டலத்தில் உள்ள— மைசூர் அரண்மனையில் மைசூர் மன்னர்கள் ஒவ்வொருவரும் எத்தனை எண்ணற்ற புலிகளைச் சுட்டனர் என்ற எழுதப்பட்டுள்ளது. புலிகளைச் சுட்ட மன்னன் சிறந்த செய்தி பெருமை பெற்றான்.

இதுபோன்றதான ஒரு மரபு மறவர் வழிவந்த புதுக் கோட்டை மன்னர்களிடையேயும் இருந்தது. இந்த மரபு

சங்க காலத்திலேயே இருந்தது. இந்த மரபிலேதான் மலை யாட்டைக் கவர்வது அரிய பெரிய செயலாக, வெற்றியாகச் சங்க காலத்தில் கருதப்பட்டது.

இந்த வருடையை நச்சினார்க்கினியர் 'சரபம்' என்று பொருள் கூறி, 'எண்கால் வருடை' என்றழைத்தனர்.

என்னுடைய தந்தையார் தலைமை ஆசிரியராக இருந்த திண்டிவனம் புனித அன்னாள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் சாரணர் பாடிய பாடல்களில்,

"நாம் சரப மானைப் பிடிக்கும்போது
யாதொரு சத்தமும் கூடாததால் பழகுவோம்.
நாம் மவுனத்தைக் காக்க,
வேகம் வேகம்,
நம் குருளை மந்தை விவேகம்"

என்ற பாட்டைக் கேட்டிருக்கிறேன். இது சாரணர் பாட்டாகும். நானும் அந்தப் பள்ளியில் சாரணனாக இருந்தேன். சாரண இயக்கம் சிறப்புற நடந்த பள்ளி திண்டிவனம் 'அன்னாள்' பள்ளியாகும்.

சாரண இயக்கத்தில் சேரும் இளையவர்களை முதலில் 'குருளை' என்று தூய தமிழ்ப்பெயரிட்டழைத்தனர். சாரண இயக்கத்திலே சேர்ந்து பயிற்சி பெற்றுத் தேர்வுகள் பெற்று முதிய சாரணர் ஆவது மிகவும் கடினமானதாகும்.

சாரண இயக்கத்தில் முதலில் 'குருளையாக' நான் இருந்தபோது 'சரபமான்' என்று பிற்காலத்தில் அழைக்கப் பட்டவருடையை, மலையாட்டைப் பிடிக்க 'யாதொரு சத்தமும் கூடாததால்' என்ற பாட்டுவரி பிற்காலத்தில் என்னைக் கவர்ந்தது.

மலையாட்டைச் சுடுவதற்கு வெள்ளைக்காரர்கள் எந்தச் சிறிய ஓசையையும் தவிர்த்தனர். சிறிது ஓசை கேட்டாலும் மலையாடு ஒரு குவட்டிலிருந்து இன்னொரு குவட்டிற்குத் தாவும். மஞ்சு சூழ்ந்த உச்சிக்குவட்டில் வாழ்வதால் சுடுவது எளிதானதன்று.

இந்தச் சாரணர் பாட்டில் 'வேகம், விவேகம்' என்ற சொற்கள்என்னைக் கவர்ந்தன. வேகமும், விவேகமும் இல்லாவிட்டால் மலையாட்டைப் பிடிக்கமுடியாது. அவ்வாறு தண்டகாரண்யத்திலிருந்து வேகமுடன், விவேகத்தோடும் மலையாட்டைப் பிடித்த சேர மன்னனையே பதிற்றுப்பத்தில் "ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்" என்று சிறப்பித்துள்ளனர்.

நச்சினார்க்கினியர் 'எண்கால் வருடை' என்று புராணச் செய்தியைக் கூறினார். ஆனால் எட்டுக்கால்கள் உடைய விலங்கு இயற்கையில் இல்லை. ஆனால் பிற்காலத்தில் நிறுவித்த சோழர் காலத்துச் சரபேஸ்வரர் செப்புச்சிலையில் எட்டுக்கால்கள் காட்டப்பட்டுள்ளன. இது புராணச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட செப்புச் சிலையாகும்.

எண்கால் வருடை என்பது பொருளற்றது என்பதை எனது 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளேன்.

வருடைக்கு எட்டுக் கால்கள் இருப்பதாகப் புராணச் செய்திகள் கூறியதற்குக் காரணம் இந்த வருடை மஞ்சு சூழ்ந்த மலைக்குவடுகளில் வாழ்வதால் அரிதாகத்தான் பார்க்க முடியும். நாலு கால்களைவிட எட்டுக்கால்கள் இருந்தால் உச்சி மலைக்குவடுகளில் வாழும் இந்த விலங்கு குவடுகளில் பிடிப்பாக நிற்கும் என்று நினைத்திருக்கலாம்.

பிற்காலத்தில் ஆண் ஆடு என்ற பெயரில் 'தகர்' என்று மலையாட்டை அழைத்தனர். நிகண்டுகள் இப் பெயரைக் கூறுகின்றன.

தண்டகாரண்யத்திலிருந்து உயிருடன் பிடித்துத் தொண்டியில் கொண்டுவந்த 'ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்' என்ற சிறப்புப் பெயர் சேரமன்னனின் பெயரில் அடைமொழியில் வழங்கியதைக் கவனிக்காமல், வெறும் "வெற்றி பெற்றவன்" என்று கூறுவது பொருத்தமற்றது.

இயற்கை அனுபவ அறிவு மற்றும் அறிவியல் அறியாது, சங்க நூல்களின் விலங்கினச் செய்திகளுக்கு விளக்கம் கொடுப்பது பொருத்தமில்லை.

நேரில் கண்டதைப் பட்டறிவோடும் உள்ளதை உள்ளவாறு கூறும் அறிவியல்தான் Nature Study என்றும் இப்போது Ecology என்று கூறப்படும் புதிய ஆர்வமான அறிவியல் துறையாகும். அந்த அறிவியல் துறைக்குக் கி.பி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு நேர்பட்ட சான்றுகள் சங்க நூல்களில் கிடைக்கும்போது சங்க இலக்கியம் உலக இலக்கியங்களில் ஒப்பற்ற இலக்கியம் என்பதில் ஐயமில்லை.

குடத்திலிட்ட விளக்காக உள்ள சங்க இலக்கியம் குன்றில் இட்ட விளக்காக உலகத்தோர் உணர வேண்டுமென்றால் சங்க இலக்கியச் செய்திகளைப் பிறமொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும்; விளக்க வேண்டும்.

# 9

# இளநீர்

## தென்னையின் தொன்மை

மரஞ்செடி கொடிகள் ஆதியில் தோன்றிய இடத்தையும் அவை பல நாடுகளுக்குப் பரவிய வழிகளையும் ஆராய்ந்த அறிவியல் அறிஞர்கள், தென்னை மரம் பசிபிக் தீவுகளில் தோன்றியதென்றும் கடல் வழியாக மலேயா, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்குப் பரவியதாகவும் கருதுகின்றனர்.

## திசையால் வந்த பெயரா?

இலங்கையி லிருந்து இந்தியாவிற்குத் தென்னைமரம் பரவியதாகச் சிலர் கருதுகின்றனர். தமிழில் தென்னை மரத்திற்கு வழங்கும் பெயர்களும் இந்த மரம் வெளிநாட்டி லிருந்து வந்ததைக் காட்டுகின்றன.

தென் என்ற திசையைக் குறிக்கும் சொல் லிலிருந்தே தென்னை என்ற பெயர் தோன்றியது. தென் திசையிலிருந்து வந்த, தென் கடல் வழியாகத் தமிழகத்துக்கு வந்த ஒரு மரமே தென்னை என்று பெயர் பெற்றது. தென்னவர் என்பது தென் திசையில் வாழ்ந்த

பாண்டியர்க்குப் பெயராக வந்ததுபோல் இந்த மரத்திற்கும் பெயர் தோன்றியது.

தெங்கு என்ற பெயரும் 'தென்'-'கு' என்றே பகுக்கப்பட வேண்டும்.

'கு' என்ற எழுத்து திசையைக் குறித்துத் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய சொற்களில் விகுதியாகப் பயில்வதைக் காணலாம். மயிலைநாதர் நன்னூலுரையில் 'தெங்கு' என்ற சொல்லைப் பகாப்பதம் என்று கொண்டாலும், தென் என்பதை தெங்கு என்பதன் மூலச்சொல், தென் திசையிலிருந்து வந்த மரம் என்பதாலேயே தெங்கு என்று பெயர் பெற்றது.

'புன்கு' என்ற மரப் பெயர் புங்கு, புங்கம் என்று மாறியது போல் 'தென்கு' என்ற மரப் பெயர் தெங்கு, தெங்கம் என்று மாறியது.

தெங்கு என்ற பெயர் பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, புறநானூறு ஆகிய சங்க நூல்களில் வழங்கினும் அகநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய சங்க நூல்களில் வழங்காமை குறிப்பிடத்தக்கது. சங்க நூல்களில் மிகப் பழைய பாடல்களில் தெங்கு குறிப்பிடப்படவில்லை என்றே கருதவேண்டும்.

ஆதலின், தென்னை மரமானது தமிழகத்திற்கு வந்த காலம் கி. பி. முதல், இரண்டு நூற்றாண்டிற்குச் சிறிது முன்னர் இருந்திருக்கலாம்.

இருப்பினும், தென்னைமரம் சேர நாடும் சேர்ந்த அன்றைய தமிழகத்தில் பரவலாகக் காணப்படவில்லை. அதனால்தான் சங்க காலத்தில் அகப்பாடல்களில் பாடப்

படவில்லை. திணைப் பாகுபாட்டில் கருப் பொருளாகக் கூறப்பட்ட மரங்களில் தென்னை கூறப்படவில்லை. அன்றைய சேரநாட்டுக் கடற்கரையில் இன்று காணப் படுவது போல் தென்னை மரங்கள் மிகுதியாக இருந்திருந் தால், நெய்தல்திணைக் கருப் பொருளாகக் கூறாது விடுவரா?

மிகப் பிற்காலத்து இலக்கண ஆசிரியர்கள்கூடப் பழைய இலக்கண மரபைப் பின்பற்றி நெய்தல் திணையில் தென்னையைக் கூறாது போனார்கள். இஃது எதைக் காட்டுகின்றது? தென்னைமரம் தமிழ்நாட்டிற்கு வெளி நாட்டிலிருந்து வந்ததென்பதும், அதனால், தமிழ்நாட்டின் திணைக் கருப்பொருளாகக் கருதப்படவில்லை என்பதும் தெரிவிக்கின்றன.

மிகப்பழைய இலக்கணமாகக் கருதப்படும் தொல் காப்பியம் பனைமரத்தைக் குறிப்பிடுகின்றதே யொழியத் தென்னையைக் குறிப்பிடவில்லை. பனைக்குச் சொல்லிலக் கணம் கூறிய தொல்காப்பியர் தெங்குக்கு ஏன் சொல்ல வில்லை? அவர் காலத்தில் தெங்கு தமிழகத்தில் இலக் கணத்தில் கூறுமளவு பரவலாகவில்லை என்று கருதலாம்.

இடைச் சங்க காலத்தில் குமரிக்குத் தெற்கில் ஏழ்தெங்க நாடு, ஏழ்பனை நாடு முதலிய நாடுகள் கடலில் மூழ்கிய தாகக் கூறியது தென்னை தமிழகத்தின் தெற்கிலிருந்து வந்ததைக் குறிப்பிடும் ஒரு நினைவுக் கதையாகும். சேர மன்னர்க்கு அடையாளப் பூவைப் பனையென்று சங்க நூல்கள் கூறும். தென்னை மரம் இன்று காணப்படுவது போல அன்று சேரநாட்டில் மிகுதியாக இருந்திருந்தால் பனந்தார் சேரமன்னரின் அடையாளப் பூவாக இருந்திருக்க முடியாது. இன்று பனை மரத்தை விடத் தென்னை மரங்கள்தாம் கேரளத்தில் மிகுதியாக உள்ளன.

கேரளம் என்ற பெயரைத் தென்னையைக் குறிக்கும் வட சொல்லிலிருந்து வந்ததாகக் கூறுவது அறிவியலுக்கு ஒவ்வாத ஆராய்ச்சி ஆகும்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய அசோக மன்னர் கல்வெட்டிலேயே 'கேரளம்' என்று சேர நாட்டின் பெயர் வருகின்றது. இதற்கு முன்னரே சேரநாட்டில் தென்னைமரம் காணப்பட்டதற்கோ, பரவலாக இருந்த தற்கோ சங்க நூல்களில் சிறிதும் சான்று இல்லை. ஆதலின், கேரள அறிஞர்கள் இன்றும் இந்த ஆராய்ச்சியை அடிப் படையாகக் கொண்டு எழுதி வருவது வருந்தத்தக்கது.

தென்னைமரம் தமிழகத்தில் மிகுதியாகப் பரவியது பல்லவர்கள் காலத்தில் என்று கருத இடமுண்டு. இலங்கைத் தீவிலிருந்து வந்த ஈழவர்களால் தென்னை பரவலாகப் பயிரிடப் பட்டது. முக்கியமாகக் கள்ளெடுப்பதற்காகவே பயிரிடப்பட்டது.

சங்க நூல்களில் பனங்கள்ளைப் பற்றியும் ஈச்சங் கள்ளைப் பற்றியும் செய்திகள் கூறப்பட்டிருப்பினும், தென்னை மரத்தில் கள்ளிறக்கப்பட்டதாக ஒரு குறிப்பும் இல்லை. இதுவும் சங்க காலத்தில் தென்னை பரவலாகத் தமிழகத்தில் இருந்ததில்லை என்பதைக் காட்டுகின்றது.

சங்க காலத்தில் இயற்கையாகத் தமிழகத்திற்கு வந்த தென்னைமரம் பல்லவர்கள் காலத்தில் ஈழவர்களால் தோட் டங்களில் கள்ளிறக்குவதற்காகப் பயிராக்கப் பட்டது. ஈழவர்களுக்குக் கள்ளிறக்கும் உரிமை கொடுக்கப்பட்டு வரி இடப்பட்டது. தென்னையைப் பயிரிடவும், கள்ளிறக்கவும் தனித்தனி வரி இருந்தது. 'ஈழம்பூச்சி' என்ற வரி ஈழவர்கள் மேல் ஆள் வரியாகப் போடப்பட்டது.

இன்றும் கேரளத்தில் ஈழவர்கள் கள்ளிறக்கும் தொழிலாளர்களாக உள்ளனர். தென்னையில் கள்ளிறக்கும் தொழிலைத் தமிழகத்துக்குக் கொணர்ந்தவர்கள், இலங்கையிலிருந்து வந்த ஈழவர்கள் என்று கருத வேண்டும். இதனாலேயே, பிற்காலத்தில் 'ஈழம்' என்ற சொற்குக் 'கள்' என்ற பொருளும் வந்தது.

தென்னை என்ற பெயர் சங்க நூல்களிலும் சங்கம் மருவிய நூல்களிலும் வழங்கவில்லை. பல்லவர்கள் காலத்திற்குப் பிறகுதான் இப்பெயர் வழங்கியதாகத் தெரிகின்றது.

## இளநீர் — பெயர்

இளநீர் என்ற பெயர் சங்க நூல்களில் புறநானூற்றில் ஒரே பாடலில் (23) மட்டும் வருவது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாபாணற்றுப்படையில் 'வீழில் தாழைக் குழவித் தீநீர்' (357) என்றொரு வரி வருகின்றது. குழவித் தீ நீர் என்பதற்கு இளநீர் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இளநீர் என்ற பெயரையே 'குழவித் தீநீர்' என்று சுவையோடு கூறியதாகத் தெரிகின்றது. "குழவும் மழவும் இளமைப் பொருள்" என்று தொல்காப்பிய மரபியல் கூறுகிறது.

ஆனால், இளநீர் என்ற பெயரில் வரும் 'நீர்' என்ற சொல் 'நியர்' என்ற ஆசிய — ஆஸ்திரேலிய மொழிக் குடும்பச் சொல்லிலிருந்து வந்தது என்று கருத இடமுண்டு.

பிரிஸ்லஸ்கி என்ற மொழி நூலறிஞர் ஆரியத்திற்கும் திராவிடத்திற்கும் முற்பட்ட மொழிகளை ஆராயுங்கால், தென்னைக்கு வழங்கும் நாரி கேயா என்ற வடமொழிப் பெயர் 'நியர் கொலை' என்ற ஆஸ்டிரிக் மொழிச் சொற்களி

லிருந்து வந்ததாக எழுதியுள்ளார். 'நியரி'என்பது தென்னை யையும் 'கோலை' என்பது பழத்தையும் குறிக்கும் என்று கூறினார்.

இன்று நியுகினித்தீவு என்ற பசிபிக் தீவின் பெயரில், நியூ என்பது தென்னை மரத்தையும் கினி என்பது திற்பதை யும் குறிக்கின்றது. நியூ கினித் தீவில் வழங்கும் ஆஸ்டிரிக் மொழிகளில் இப்பெயர் தென்னையைக் குறிக்கப் பரவலாக வழங்குகின்றது. இப்பெயரே வடமொழியில் 'நாரிகேலா' என்ற பெயரிலும் தமிழில் இளநீர் என்ற பெயரிலும் காணப்படுகிறது.

'பப்பவன்', 'பப்புவன்' என்னும் சொற்கள் பசிபிக் தீவு தமிழர்க்குத் தெரிந்ததேயாகும் என்பதற்கு மயிலைநாதர் உரையில் சான்று உள்ளது.

யானையின் சாதிகளைக் குறிப்பிடுவதாக 'அருமணவன்', 'பப்புவன்' என்ற பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. 'பப்பரவன்' என்ற பாடம் இருப்பினும் 'பப்புவன்' என்பது தான் பொருத்தமானது.

யானைகளில் பர்மா யானை, நியூகினித் தீவு யானை ஆகியவை தனித்த சாதிகள் என விலங்கியலார் கூறுவர். 'வாவிலாவ்' (Vavilov) என்ற உருசிய அறிஞரும், 'கண்டோல்' (Candolle) என்ற அறிஞரும் தாங்கள் எழுதிய நூல்களில் தென்னையின் தொன்மைப் பிறப்பிடம் பசிபிக் தீவுகள் என்று கூறியுள்ளனர்.

ஆதலின், பசிபிக் தீவிலிருந்து தோன்றிப் பரவிய ஒரு மரத்திற்கு அத்தீவுகளில் தொன்மை காலத்தில் வழங்கிய பெயரான—'நியு', 'நீ' என்ற ஆஸ்டிரிக் மொழிப் பெயரே முண்டா மொழிகளின் வாயிலாகப் பரவி வடமொழியில் 'நியர்' ஆகவும், தமிழில் 'நீர்' ஆகவும் வழங்கியதென்று கருதலாம்.

## பிறமொழிப் பெயரே!

இளநீர் என்ற பெயர் பசிபிக் தீவிலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறி இங்கு மூத்த குடிகளாயிருந்த முண்டர்கள் போன்ற ஆஸ்டிரிக் இனத்தாரின் மொழியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். 'நியர்' என்ற முண்டா மொழிப் பெயருடன் 'இளம்' என்ற தமிழ்ச் சொல் சேர்ந்து 'இளநீர்' என்று மக்கள் வாயில் பயின்றதாகக் கருதவேண்டும்.

ஆனால் இளநீரில் வரும் 'நீர்' என்ற சொல்லைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டு தேங்காயில் இருந்த நீரைக் குறிப்பதாகச் சங்க காலத்திலேயே கருதினர். வேறு எந்த மரங்களின் காய்களையோ, பழங்களையோ 'இளநீர்' என்று குறிப்பிடாதபோது, தென்னையின் காயை மட்டும் குறிப்பிட்டது தொன்று தொட்ட மரபின் வழியன்று. இதுவும் இப்பெயர் வெளியிலிருந்து வந்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

## தாழை - தென்னை

தென்னையை 'வீழில் தாழை' என்று பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. கடற்கரையில் கண்ட வீழ் இருக்கும் தாழையைப் போல், கடற்கரையில் தாழ்ந்து இருக்கும் தென்னையை 'வீழ் அற்ற தாழை' என்று அழைத்தனர்.

வெளிநாட்டிலிருந்து வரும் செடிகளுக்கு உள்நாட்டுச் செடிகளோடு ஒப்பிட்டுப் பெயர் படைத்தல் மொழி மரபாகும்.

வளைந்து கொடுக்கும் 'வஞ்சி' மரக் கொம்புபோல் வளைந்து கொடுக்கும் கொம்பையுடைய வெளிநாட்டு மரமான சவுக்கு மரத்தைத் தஞ்சைப் பகுதியில் 'வஞ்சி' என்று இன்று அழைப்பதைக் காணலாம். உள்நாட்டுத்

தாழையொடு தென்னையை ஒப்பிட்டுக் கூறியதால் தென்னை வெளிநாட்டிலிருந்து வந்தது தெரிகின்றது.

துளு மொழியில் தென்னையை இன்றும் 'தாறே' (தாழை) என்றழைப்பதைக் காணலாம்.

தெங்கு, தென்னை என்பன காரணப் பெயர்களாகத் தோன்றின. இளநீர் பிறமொழியிலிருந்து வந்தது. தாழை என்ற பெயர் ஒப்புமை காரணமாகத் தோன்றியது. இக்காரணப் பெயர்கள் பண்டைத் தமிழகத்தில் தென்னை வெளிநாட்டிலிருந்து வந்ததைக் காட்டுகின்றன.

மேற்கோள்:

1. Pre-Aryan and Pre-Dravidian in India Prysluski.

2. An introduction to the botany of Tropical crops– Leslie S. Cobley.

3. De condolle-A, 1884, Origin of Cultivated plants- Kegan Paul Trach & Co., London.

4. Vavilov V. I (1926) The origin, Variation, immunity and breeding of cultivated plants– Chronica Botanica 13 (16) 1949-50.

# 10

# உந்தூழா? முந்தூழா?

பத்துப்பாட்டில் காணப்படும் குறிஞ்சிப் பாட்டில் 'உந்தூழ்' என்ற பெயர் பெருமூங் கிலைக் குறித்து வழங்கியுள்ளது.

''செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
யுரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிளம்
மெரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்'

—குறிஞ்சிப்பாட்டு 64—66

65ஆம் வரியில் வரும் 'உந்தூழ்' என்ற பெயர் 'முந்தூழ்' என்றே இருக்க வேண்டு மென்று தோன்றுகின்றது. பெருமூங்கிலைக் குறித்து வழங்கும் பெயர் முந்தூழாகப் பிற சங்க நூல்களில் இருக்கும்போது குறிஞ்சிப் பாட்டில் மட்டும் உந்தூழ் என்று வழங்குவதற் குக் காரணம் இல்லை.

''பாம்புமிழ் மணியிற் றோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே''

—குறுந்தொகை 239

''கடுஞ்சூன் மடப்பிடி நடுங்குஞ் சாரல்
தேம்பிழி நறவின் குறவர் முன்றில்
முந்தூ ழாய்மலர் உதிரக் காந்தள்''

—அகம் 78

"துறுகல் சுற்றிய சோலை வாழை
யிறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக்
கூழுற் றலமரு முந்தூ ழகலறைக்"

— மலைபடுகடாம், 131 - 133

மேலே காட்டிய குறுந்தொகை, அகநானூறு, மலைபடுகடாம் ஆகிய நூற்பாடல்களில் 'முந்தூழ்' என்பதே பெருமூங்கிற்குப் பெயராக வழங்கியதைக் காணலாம். திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டுகளும் முந்தூழ் என்ற சொல்லையே மூங்கிற்குப் பெயராகக் கூறியுள்ளமையைக் காணலாம்.

உந்தூழ் என்ற பெயர் நிகண்டுகளில் காணப்படவில்லை. பிற சங்க நூல்களிலும் நிகண்டுகளிலும் முந்தூழ் என்ற பெயரே காணப்படுவதால் குறிஞ்சிப்பாட்டில் வழங்கிய 'உந்தூழ்' என்ற பெயர் தவறேயென்று தெரிகின்றது. அது முந்தூழ் என்றே இருக்க வேண்டும்.

உ.வே. சாமிநாதையர் அவர்களும் 'தேமா என்பது முதல் பெருமூங்கிற்பூ என்பது இறுதியாக வுள்ளவைகள் தருமபுர ஆதீனமடத்திலிருந்து கிடைத்த ஒரு பழைய ஏட்டுப் புத்தகத்தில் மட்டுமே இருந்தன' என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

பெருமூங்கிலின் பெயரைத் தவறுதலாக இந்த ஒரே ஏட்டுப் புத்தகத்தில் வரும் வரிகள் மட்டும் கூறுவதால் இப் புத்தகத்தில் காணப்பட்ட இவ்வரிகள் இடைச்செருகல் என்று கருதலாம்.

பெருமூங்கில் என்பது சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் 'இருவெதிர்' என்று வழங்கப்பட்டுள்ளது. இரும்புலி என்ற சங்கநூல் வழக்குப் பெரும்புலி என்று பொருள் தரு

வதுபோல் இருவெதிரும் 'பெருமூங்கில்' என்ற பொருள் தருகின்றது.

இந்த மூங்கில், செடி நூற்படி Bambusa Arundinacea என்பதாகும். இதுதான் தென்னிந்தியாவில் மிகப் பெரிதாக வளரும் மூங்கில். இந்த மூங்கில் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கொரு முறை எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் பூக்கின்றன. பூத்துக் காய்த்து மடிந்து திரும்பவும் மழைக் காலத்தில் முளைக்கின்றன. இம்முறையாகப் பல ஆண்டுக் கொருமுறை பூத்துச் செத்து மடிந்து முளைக்கும் மற்றொரு செடி தமிழ்நாட்டில் குறிஞ்சி யென்பதை இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

முந்தூழ் என்ற பெயர்ச்சொல் 'முந்தியே ஊழ்த்தது' அஃதாவது முந்தியே பூத்து மடிந்தது என்ற பொருளில் வழங்கியிருக்கலாம். பல ஆண்டுகளுக்கொருமுறை பூக்கும் தன்மையைக் குறித்தே இப்பெயர் வழங்கியிருக்கலாம். உந்தூழ் என்ற சொல் அத்தகைய பொருள் தராமையைக் காணலாம்.

மலைபடுகடாத்தில் "ஊழுற் றலமரு 'முந்தூழகலறை' என்ற வரிக்குப் பெருமூங்கில் நெல்லு முற்றுதலுற்றுப் பயன் படுந் தன்மையிலே அசையா நிற்கும்" என்று பொருள் கூறினார்.

ஆனால் நச்சினார்க்கினியர் குறிஞ்சிப் பாட்டில் உந்தூழ்' என்று கொண்டதால் மலைபடுகடாத்திலும் முந்தூழ் என்று கொள்ளாமல் உந்தூழ் என்ற பாடத்தைக் கொண்டு பொருள் கூறினார்.

பெருமூங்கில் நெல் முற்றுதலுற்று 30 ஆண்டுகளுக் கொருமுறை பயன்படும் தன்மையை மலைபடுகடாம் 'ஊழுற்று அலமரும் முந்தூழ்' என்று கூறியதாகக் கொள்ள

வேண்டும். மலைபடுகடாத்தில் மலையில் வாழும் செடி கொடிகள் மனிதருக்குப் பயன்படுவதை உண்மையாகவே கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

முந்தூழை 'முண்டலவெதுரு' என்று தெலுங்கில் அழைப்பது 'முந்தூழ் வெதிர்' என்றதன் மறு உருவோ என்று கருத இடமிருக்கிறது.

## குறுகிலையா, குருகிலையா?

குறிஞ்சிப் பாட்டில் 73ஆம் வரி 'குறுகிலை மருதம் விரிபூங் கோங்கம்' என்று வருகின்றது. வல்லின 'றுகரம்' குறுகிலை என்ற பெயரில் வழங்கியிருக்கவும், நச்சினார்க் கினியர் 'குருகிலை' என்று கொண்டு — இடையின 'ருகரமாகக்' கொண்டு முருக்கிலை என்று பொருள் கொண்டார். இவர் இம் முறையாகக் கொண்டதற்கு அடிப்படையில்லை. நச்சினார்க்கினியர் கொண்டது தவறு என்பதற்குக் காரணங்கள் உள்ளன.

முருக்க மரத்தைக் குறிஞ்சிப்பாட்டு 88ஆம் வரியில் 'பலாசம்' என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளது. பலாசம் முருக்க மரத்தைக் குறிக்கு மென்பது நூல் வழக்கினி ருந்தும், நிகண்டுகள் வழக்கிலிருந்தும் தெளிவாகின்றது. ஆதலின் குறிஞ்சிப்பாடலாசிரியர் முருக்க மரத்தை ஓரிடத்தில் குருகிலை யென்றும் அதையே மற்றோரிடத்தில் பலாசம் என்றும் கூறியிருப்பார் என்று கருத இடமில்லை. மற்றும் குருகிலை என்று கொண்டு முருக்கிலை என்று நச்சர் கொண்டது சங்க நூல் வழக்குப்படியே தவறுதவாகும்.

சங்க நூல்களில் குருகிலை என்ற பெயர் குருக்கத்தியைக் குறித்தே வழங்கியுள்ளது.

"அருவி பதிரக் குருகிலை பூப்பத்"

— திணைமொழி ஐம்பது. 30

"அஞ்சனக் காயா மலரக் குருகிலை
யொண்டொடி நல்லார் முறுவல் கவின்கொள"

—திணைமொழி ஐம்பது-21

நச்சினார்க்கினியர் கொண்ட குருகிலை என்ற பாடம் சிறந்ததானால் அது குருக்கத்திக் கொடியையே குறித்திருக்க வேண்டும். முருக்கிலையைக் குறிக்காது. ஆனால் குருக்கத்திச் செடியைப் 'பைங்குருக்கத்தி' என்று 92 ஆம் வரியில் குறிஞ்சிப்பாட்டுக் கூறுவதால் குருக்கத்தியாகவும் இருக்க முடியாது. ஆதலின் குருகிலை என்று கொண்டது தவறு. மற்றும் முருக்கிலை அழகற்றது; மென்மையற்றது.

குருக்கத்தியிலை (மாதவி) மிக அழகாக, நுனி வால் போல் நீண்டு, மென்மையும் ஒண்மையுமுடையது. இதன் இலை அழகை நோக்கியே 'குருகு' என்ற இதன் பெயருடன் இலை என்ற சொல்லைச் சேர்த்துக் குருகிலை என்ற பெயரில் வழங்கினர்.

குருகிலை என்ற பாடம் எம்முறையிலும் பொருந்தாததால் குறுகிலை என்ற பாடத்தையே உண்மையான பாடமாகக் கொள்ள வேண்டும். 'குறு நறுங்கண்ணி குறுகிலை மருதம்' என்று வரும் வரியில் குறுநறுங்கண்ணி குன்றி மணியைக் குறிப்பதாகவும், குறுகிலை முருக்கிலையைக் குறிப்பதாகவும், மருதம் மருத மரத்தைக் குறிப்பதாகவும் கொண்டார். ஆனால் குறுகிலையை மருத மரத்தின் நடு பெருத்து நுனி குறுகிச் செல்லும் இலையைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

மருத மரத்தின் இலை வெற்றிலையைப் போல சமணர்கள் பயன் படுத்தியதாகத் தேவாரத்தில் சம்பந்தர் கூறுகின்றார்.

குறிய நறிய கண்ணியாகப் பூக்கும் குறுகிய இலையை யுடைய மருதம் என்று கொள்வதே சிறப்பாகத் தோன்று கின்றது. மருத மரத்தின் பூ மிக அழகியது. சங்க இலக் கியத்தில் கூறப்பட்ட பூக்களில் மருதம் மிகச் சிறந்த தொன் றாகும்.

## எறுழுமா, தெறுழுமா?

குறிஞ்சிப்பாட்டில் உந்தூழ் என்ற பெயர் வழங்கும் வரிக்கு அடுத்த வரியில் (66) 'எரிபுரை எறுழம்' என்றொரு செடி கூறப்பட்டுள்ளது. 'எறுழம்' என்ற பெயரைப் போல் 'தெறுழ்' என்ற செடிப் பெயர் புறநானூற்றிலும் நற்றிணை யிலும் கார் நாற்பதிலும் வழங்குகின்றது.

"களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்" —புறம் 119

"நரைநிறம் படுத்த நல்லிணர்த் தெறுழ்வீ"
—நற்றிணை 302

"......................அரும்பவிழ்ந்
தீர்ந்தண் புறவிற் றெறுழ்வீ மலர்ந்தன"
—கார் நாற்பது 25

'நற்றிணைப்பாடற்கு உரை யெழுதிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் 'நல்லிணர்த்து எறுழ்வீ' என்று கொண்டார். ஆனால் 'தெறுழ்வீ' என்பதே உண்மையான பாடமாகும்.

ஐங்குறு நூற்றில் 308ஆம் பாட்டில்,

'விரியிணர்க், காலெறு ழொள்வீ தாஅய'

என்று வரும்வரியில் 'எறுழ்' என்றே பாடங்கொண்டார்கள்.

ஆனால் அதற்குக் 'காலுறழொள்வீ' என்ற பாட வேறுபாடு உள்ளமையால் 'எறுழம்' என்ற குறிஞ்சிப் பாடற்பெயர்க்கு இதைச் சான்றாகக் கூறமுடியாது. ஆதலின் பிற பாடல்களில் வரும் வழக்கு அடிப்படையில் எறுழம் என்ற பெயர் குறிஞ்சிப் பாட்டில் 'தெறுழம்' என்றே வந்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. இதுவும் ஏடெழுதுவோரால் 'எறுழம்' என்று தவறாகக் கொள்ளப்பட்டதாகக் கருதலாம்.

குறிப்பு:

குறிப்பு:

# 11

# அகநானூற்றில் 'பவத்திரி'

சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு பாட்டில் 'பவத்திரி' என்ற ஊர்ப் பெயர் வருகின்றது. அகநானூற்றில் 340ஆம் பாட்டில் 'பவத்திரி' என்ற பெயர் வருகின்றது.

அதுபோன்று மருங்கூர்பட்டினம், கோடிக் கரை போன்ற துறைமுகப் பட்டினங்களும் சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு பாடலில் கூறப் பட்டுள்ளன.

'தொன்முதுகோடி' என்று அழைக்கப் படும் கோடிக்கரையில் இராமன் தங்கி, இலங் கைக்குச் செல்வதற்கு மந்திர ஆலோசனை செய்தான் என்று அகநானூற்றின் பழைய உரை கூறியுள்ளது. கோடிக் கரையைப் பற்றி அகநானூற்றில் (70) காணப்பட்ட செய்தியை முன்னரே 'செல்வி'யிதழில் விளக்கியுள்ளேன்.

கோடிக்கரையிலிருந்து இராமன் கடலைக் கடந்து இலங்கைக்குச் சென்றான் என்றதே பண்டைத்தமிழ்மரபுச்செய்தியாகும். ஆனால், கம்பன் காலத்தில் சேதுக் கரையிலிருந்து கடலைக் கடந்ததாகக் கூறியது பிற்காலத்திய புராணச் செய்தியாகும்.

வால்மீகி எழுதின இராமாயண நிகழ்ச்சி தமிழ் நாட்டிலோ, இன்றைய இலங்கை நாட்டிலோ நிகழவே இல்லை என்பதற்குப் போதிய, அண்மையில் கண்டுபிடித்த புதிய வரலாற்றுச் சான்றுகள் ஆதரவாக உள்ளன. அதைப் பற்றிப் பின்னர் ஒரு கட்டுரையில் விளக்குவேன்.

ஆயினும் அகநானூற்றில் கூறப்பட்ட மரபு வழிச் செய்தியை—செவிவழிச் செய்தியைத் தமிழ் நாட்டிலிருந்து கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டில் தமிழருடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பால், கிரேக்கரும், உரோமரும் கூறியிருப்பதைக் காணும்போது சங்கப் புலவர்கள் கூறிய செய்திகள் எந்த அளவு உண்மைகளின் அடிப்படையானவை (Authentic) என்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

கோடிக்கரையை 'நிகம' (Nigma) என்று பெரிப்புளுஸ் என்ற கிரேக்க நூலாசிரியன் கி. பி. முதல் நூற்றாண்டில் குறிப்பிட்டுள்ளான்.

'நிகமம்' என்பது வேதத்தைப் பின்பற்றிய மரபாகும். 'ஆகமம்' என்பது வேதத்திற்கு வேறுபட்டதாகும் என்று பிற்காலத்தில் கருதினர். ஆதலின் சங்க காலத்தில் வேத வழக்கு புகுந்த ஊர் கோடிக்கரை என்பது தெரிகின்றது.

அதற்கு அடுத்து, 'டாலமி' (Ptolemy) எழுதிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய நிலவமைப்பு (Geography) நூலிலும் இந்தப் பெயர் கூறப்பட்டுள்ளது.

'நிகம' என்று கிரேக்க நூலாசிரியன் கூறும் 'ஊர்ப் பெயர் சங்க நூல்களில் 'நியமம்' என்று வரும் பெயராகும். 'நொச்சி நியமங்கிழார்' என்ற புலவர் பெயர் சங்க இலக்கியத்தில் வழங்கியுள்ளது. 'நொச்சி நியமம்' என்ற கடற்கரைப்பட்டினம் எதுவென்று இன்று கண்டுகொள்ள முடியவில்லை.

## வேதங்களுக்குப் புகலிடம்

ஆனால் சங்க காலத்தில் கோடிக்கரைக்குத் தமிழ்ப் பெயரும், பிராகிருத மொழிப் பெயரும், வடமொழிப் பெயரும் ஒருங்கே வழங்கி யிருக்கவேண்டும். கோடிக்கரை யைப்பற்றி வழங்கும் பிற்காலத்திய செவிவழிச் செய்திகளில் ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

இங்கு 'நிகமவனம்' என்று ஒன்று இருந்ததாகவும், வேதங்கள் சீர் குலைந்ததால் அவை கோடிக்கரைக்கு வந்த தாகவும், கோடிக்கரைக்காட்டில் வேதங்கள் தவமிருந்ததாக வும், அதனால் கோடிக்கரையில் வேதங்கள் தழைத்ததாக வும் சித்தவைத்தியப் பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன. இதன் காரணமாகவே பிற்காலத்தில் 'மறைக்காடு' என்றும் வேதாரண்யம் என்றும் இந்த ஊருக்குப் பெயர் வந்ததாகக் கூறுவர்.

பிற்காலத்தில் இப்போதைய வேதாரண்யமும் கோடிக் கரையும் தனி ஊர்களாகக் காணப்படினும் சங்க காலத்தில் கோடிக்கரைக் காடே 'நிகம' என்று கிரேக்க நூலாசிரியர் களால் குறிக்கப்பட்டது. அந்தக் காடு இன்றுள்ள வேதா ரண்யம்வரை பரவி யிருந்திருக்க வேண்டும்.

கோடிக்கரையைக் 'கோடிவனம்' என்று கூறும் வழக்க மும் உண்டு. கிராமப் பெண்களைக் 'கோடிவனம்' என்று கூறும் வழக்கமும் உண்டு. கிராமத்துப் பெண்கள் கோடி வனம் என்ற பெயரை இன்றும் சூடிக் கொள்கிறார்கள்.

இங்கு நவகோடி சித்தர்கள் வாழ்ந்ததாகவும் கடற் கரையில் நவ கோடி சித்தர் ஆசிரமம் இருந்ததாகவும் பிற்காலச் சித்தர்வழி பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன. இந்த நவகோடி சித்தர்கள் 'கடவுள் நம்பிக்கை அற்றவர் களின் கண்களில் கடவுள் புலப்படமாட்டார்' என்பர்.

சித்த வைத்தியத்தில் சுத்தமார்க்கத்தின் தலைவர் அகத்தியரே என்று கூறுவர். இந்த அகத்தியர் நவகோடி சித்த ஆசிரமத்தின் அருகில் இருந்து நிகம வனத்தில் நிகழ்ந்த வேதச் செய்திகளையும் நவகோடி சித்த ஆசிரமத்தையும் கவனித்து வந்தார் என்று கூறுவர்.

கோடிக்கரையைப் பற்றி, சங்ககால மரபுச் செய்திகள் இன்றுவரை கூறப்படுவது வியப்பானதாகும். கிரேக்கர்கள் கோடிக்கரையைப் பற்றிக் கூறிய சங்ககாலச் செய்திக்குச் சான்று புகன்றுள்ளனர். நவகோடி சித்தர்கள் வாழ்ந்த ஆசிரமம் வெள்ளை நிற ஆலமரத்தின் அடியில் இருந்ததாகக் கூறப்படும் பரம்பரைச் செய்தி, சங்கநூலான அகநானூற்றுச் செய்தியையே மாற்றிக் கூறினதாகும்.

## திறல்மிகு வீரன்

''கானலம் பெருந்துறைக் கழனி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வென்வேற் 'கவுரியர்' தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீ ழாலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்க லூரே'' — அகம் 70

திறல்மிகு வீரனான இராமன் ஆலமரத்தின் அடியில் மந்திர ஆலோசனை செய்தான். அப்போது இரைச்சலிட்ட பறவைகளைத் தன் 'திறலால்' அடக்கினான். வீரனைத் திறலுடையவனாகக் கூறுவது பண்டைய வழக்காகும்.

புதுவைக்கருகில் உள்ள கிளியனூரில் உள்ள கோயில் கல்வெட்டில் 'நகைத்திறலார்' என்ற வீரனின் பெயர் கூறப் பட்டுள்ளது. போர்க் களத்தில் நகைப்பை யூட்டும்

திறனுடைய ஒருவனைப் பற்றி இந்தக் கல்வெட்டு கூறியுள்ளது.

சங்க இலக்கியமும் இராமனைத் 'திறலான்' என்று கூறியதே தவிர இராமனைக் கடவுளாகக் கூறவில்லை. சங்க காலத்தில் இராமன் பெரும் திறல்மிக்க மானுடனே என்று கருதப்பட்டான் என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆலமரத்தின் அடியில் மந்திர ஆலோசனை செய்த இராமனைப்பற்றி அகநானூறு கூறும் செய்தியைப் பின் பற்றியே பிற்காலத்தில் 'நவகோடி சித்தர்கள் வெள்ளை நிற ஆலமரத்தின்கண் ஆசிரமத்தை அமைத்து நடத்தினார்கள்' என்று செவிவழிச் செய்தி வந்தது.

ஆதலின் சங்க இலக்கியச் செய்தி கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க ஆசிரியர்களிடம் பரவினதோடு மிகப் பிற்காலத்திய தமிழனுடைய பரம்பரைக் கதைகளிலும் வழங்கியுள்ளதைக் கவனிக்க வேண்டும். ஆதலின் செவிவழிச் செய்திகளையும் பரம்பரைச் செய்திகளையும் பகுத்தறிவோடு ஆராய்ந்தால் உண்மைகள் பல புலப்படும் என்பதை அறியவேண்டும். அகநானூற்றில் கூறப்பட்ட ஆலமரத்தைப் பிற்காலச் சித்தர்கள் தங்களுடைய ஆசிரமத்தின்கண் இருந்த ஆலமரமாக மாற்றினர்.

## எயில் பட்டினம்

சங்க நூல்களில் ஒரே ஒரு பாட்டில் கூறப்பட்டுள்ள 'பவத்திரி' போன்ற ஊர்ப்பெயர்கள் உள்ளன. சங்க நூல்களில் 'காண்ட வாயில்' என்ற பட்டினம் (நற்றிணை—38) கூறப்பட்டுள்ளது. அதுவே இன்று 'மாண்டவாயில்' என்று மரக்காணத்துக்கு அருகில் உள்ள பட்டினமாக வழங்குகின்றது.

மரக்காணமே சிறுபாணாற்றுப்படையில் எயில் பட்டினமாகக் கூறப்பட்டதையும், இதையே கிரேக்கர்கள்

'சோபாட்மா' என்று கூறியதையும், சிலப்பதிகாரத்தில் மதிள்சூழ்ந்த பட்டினத்தைச் சோபட்டிணம் என்று கூறியதையும் மிகவும் கவனிக்க வேண்டும்.

'வாயில்' என்ற பெயர் சங்க காலத்தில் வணிகத்துறையில் சிறந்த கடற்கரைப்பட்டிணத்திற்கு இடப்பட்டதாகும். இந்த வாயில்வழியாக ஏற்றுமதி, இறக்குமதி நடந்தது. வாயில் என்பது கதவு என்ற பொருளைக் கொண்டது. ஆதலின் 'அலைவாய்' என்ற பாண்டியனின் கடற்கரைத் தலைநகரை மொழிபெயர்த்துப் 'பாண்டியகவாட' என்று வால்மீகி வடமொழியில் கூறினார். 'அட்டவாயில்' என்ற ஊர் அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது. அவ்வூர் எதுவென்று தெரியவில்லை.

## அரிக்கமேடு விடப்பட்டதேன்?

ஆனால், சோபட்டினமான, எயில்பட்டினமான மரக்காணம் கிரேக்கர்களால் கூறப்பட்டிருப்பினும் புதுவைக்கருகில் இருந்த அரிக்கமேடு சங்க நூல்களில் கூறப்படாதது புதிராக உள்ளது. ஆயினும் சங்கப் பாடல்கள் வரலாற்றைக் கூறும் நோக்கின அல்ல என்பதைக் காணும்போது வரலாற்றுச் செய்திகளைக் கூறாததைப் புரிந்து கொள்ள முடியும்.

வரலாற்றுச் செய்திகளையும் பட்டினங்களையும் ஊர்களையும் சங்க நூல்களில் கூறியிருப்பது; பாட்டின் தொடர்பான செய்திகளாகவே காணப்படுகின்றன. பாட்டின் அடிப்படைச் செய்திகளாகக் கூறப்படவில்லை. ஆதலின் சில வரலாற்றுச் சிறப்புடைய நகரங்களையும் பட்டினங்களையும் சங்க நூல்களில் புலவர்கள் கூறவில்லை என்று தெரிகின்றது. அதனால் தான் சங்க காலத்திலேயே சிறப்புமிக்க உரோமர் வாழ்ந்த பட்டினமான அரிக்கமேடு சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் கோடிக்-

கரை, காண்டவாயில், பவத்திரி போன்ற பட்டினங்கள் ஒரே ஒரு பாட்டில் குறிப்பிடப்பட்டதையும் நாம் காண்கிறோம். 'பவத்திரி' என்ற பட்டினம் சங்க காலத்தில் சிறப்புடன் இருந்ததை அகநானூறு (340) கூறியுள்ளது.

"செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
**பல்பூங் கானற் 'பவத்திரி' யனைவிவன்**
நல்லெழில் இளநலந் தொலைய வொல்லெனக்
கழியே யோதம் மல்கின்று வழியே — அகம் 340 (6-9)

சாலியூர் — நெல்லூர்

அறிஞர் சீனி வேங்கடசாமி அவர்கள் சங்ககாலத்தில் தமிழ்நாடு தற்போதுள்ள ஆந்திர நாட்டில் உள்ள நெல்லூர் வரை இருந்திருக்கவேண்டும் என்று கூறினார். சங்க இலக்கியத்தில் கூறப்படும் 'சாலியூர்' நெல்லூராகவே இருக்கலாம் என்று அவர் கருதுகின்றார்.

சீனாவில் இருந்து வந்த சிறந்த பயணியான 'யுவான் சாங்' சிறப்பு மிக்க சாலி அரிசியைப் பௌத்தப்பள்ளியில் அடியார்கள் உண்டதைக் கூறியுள்ளார். சிறந்த வகை நெல்லை விளைத்த ஊரே நெல்லூர் என்று கருதவேண்டியுள்ளது. இன்றும் 'மொலகுலுகுலு' என்ற நெல்லூர் அரிசி சிறப்பு மிக்கதாகும். ஆதலின் நெல்லூரே சாலியூர் என்பதில் ஐயமில்லை.

சால்பு மிக்க அரிசியை, நெல்லைச் 'சாலி' என்று பண்டைத் தமிழன் கூறினான். தெலுங்கு மொழியில் இன்றும் 'சாலு' 'என்றால்' போதுமானது என்ற பொருள் உள்ளது. ஆதலின் 'யுவான்சாங்' என்ற பயணி சிறந்த வகை அரிசியைச் 'சாலி' என்று குறிப்பிட்டுள்ளார் என்பதைக் காணும்போது அது திராவிட மொழிப் பெயர் என்பதில் ஐயமில்லை.

சங்க இலக்கியத்தில் 'சால்' என்ற சொல், 'சிறப்பு மிக்கது, பொருத்தமானது' என்ற பொருள்களில் வழங்கி ருப்பதைக் காணலாம். ஆதலின் சங்க இலக்கியத்தில் கூறப் பட்ட 'சாலியூர்' நெல்லூராகவே இருக்கவேண்டும்.

நெல்லூர்வரை தொண்டைமண்டலம் — பண்டைத் தமிழகம், சங்க காலத்திலேயே சிறப்புற்றிருக்கவேண்டும் என்று கருத இடமுள்ளது. பல்லவர் காலத்திலேயே காஞ்சி யைத் தலைநகராகக் கொண்டு ஆந்திரம் தழுவிய பல்வை நாடு பிற்காலத்தில் குறைந்ததாகத் தெரிகின்றது. ஆந்திர நாட்டின் கடற்கரை ஓரப் பகுதிகளை ஆண்ட தொண் டையர் நாட்டையே சாதவாகனர்களுக்கு அடியில் இருந்த குறுநில அரசர்களான பல்லவர்கள் கைப்பற்றினர் என்று தெரிகின்றது.

வரலாற்றுச் சான்றுகளைக்கொண்டு ஆராய்ந்தால் பல்லவர்கள் சாதவாகனப் பேரரசின் தலைவர்களாக இருந்து, தொண்டை நாட்டை ஆண்ட தமிழ் மன்னர் களுடன் தொடர்புகொண்டு பல்லவப் பேரரசை நிறுவினார் கள் என்று கருதவேண்டியுள்ளது.

தொண்டையர்கள் சங்ககாலத்தில் ஆண்ட காஞ்சியுடன் தொடர்பு கொண்டு, அவர்கள் வழியில் நாகநாடான ஈழ நாட்டுடன் உறவுகொண்டு, 'பீலிவளை' என்ற நாகநாட்டர சியை மணந்து, பல்லவ அரசை நிறுவினதை மணிமேகலை யிலிருந்தும் கல்வெட்டுச் சான்றுகளிலிருந்தும் உய்த் துணர்ந்து அறியலாம்.

சாதவாகனருடன் தமிழ் மன்னர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததைச் சிலப்பதிகாரச் செய்திகள் காட்டு கின்றன. அதை எண்பித்துக் காட்டுவதுபோலக் கடலூர் வரை சாதவாகனர் வெளியிட்ட சங்க காலத்தை யொட்டிய பிராகிருதம், தமிழ் ஆகிய இரு மொழிக் காசுகளும் கிடைத் திருப்பதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

## சோழர் மரபு

ஆந்திர நாட்டினோடு இருந்த தொடர்பு பிற்காலத்திலும் இருந்ததற்கு ஆந்திரச் சோடர்கள் (சோழர்கள்) சான்று தருகின்றார்கள். பிற்காலத்திலே இந்தச் சோட வம்சம் தோன்றினும் தங்களைப் பெருமையாகக் கரிகாலன் மரபினராகக் கூறுவதைக் காணலாம்.

சங்க காலத்தில் ஆந்திர நாட்டில் இருந்த பவத்திரியைத் தொண்டைமான் 'பொலம்பூண்திரையன்' ஆண்டிருந்தான் என்று கருத இடமுண்டு.

ஆந்திர நாட்டுக் கடற் பகுதியைத் தொண்டையர்களான திரையர்கள் ஆண்டதாகத் தெரிகின்றது.

நெல்லூர் மாவட்டத்தில் கூடூர் தாலுக்காவில் ரெட்டிபாளையம் என்ற ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் 'பவத்திரி' நாட்டின் 'காகந்தி' என்ற கடற்கரைப் பட்டினம் கடல் கோளால் மறைந்ததாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

காகந்தி என்ற பெயர் சோழரின் மிகச் சிறந்த கடற்கரைப் பட்டினமான புகாரைக் குறித்து வழங்கினதை மணிமேகலை கூறியுள்ளது.

சோழருடன் நெருங்கிய தொடர்புடைய தொண்டை நாட்டுத் திரையரும் தாங்கள் ஆண்ட பவத்திரி நாட்டின் சிறந்த கடற்கரைப் பட்டினமாகிய, பவத்திரிக்குக் 'காகந்தி' என்ற பெயரைப் புகாருடன் ஒப்பிட்டுச் சூட்டியிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

இந்தப் பவத்திரியையே தொண்டைமான் 'பொலம் பூண் திரையன்' சங்க காலத்தில் ஆண்டான். 25. 2. 1976 ஆம் தேதிய தினமணிச் சுடரில் வந்த 'ப்ரளய காவேரி' என்ற கட்டுரையில் பழவேற்காடே 'பவத்திரி' என்றும் காகந்தி என்றும் அழைக்கப்பட்டதாகக் கூறிய செவிவழிச் செய்திகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இந்தச் செய்திகள், வரலாறு' இலக்கிய அடிப்படையற்ற புராணச் செய்திகளாகும்.

ஆந்திர நாட்டில் இருந்த 'பவத்திரி' பட்டினம் கடல் கோளால் அழிந்ததன் பின்னர் அதன் நினைவாகப் பழவேற் காட்டைப் பவத்திரி என்றும் காகந்தி என்றும் மிகப் பிற் காலத்தில் அழைத்திருக்கலாம். இந்த வழக்கு செவிவழிச் செய்தியாக வந்ததையே அக் கட்டுரை கூறுகின்றது.

'சிரிபர்வதநாடு' பெருங்கற்கால நாகரிக காலத்திலேயே (Megalithic) — கி. மு. இரண்டாவது நூற்றாண்டில் இருந்ததை ஆந்திர நாட்டுத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் டாக்டர் ரமேசன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் 'இந்து' (3-2-1979) நாளிதழில் குறிப்பிட்டுள்ளார். ஆதலின், சிரிபர்வதநாடு கி. மு இரண்டாவது நூற்றாண்டி லிருந்தே இருந்தது தெரிகின்றது.

இந்தச் சிரிபர்வத நாட்டின் கடற்கரைப் பகுதிகளை ஆண்ட தொண்டையரான திரையர், தமிழ்மொழியின் மரபிற்கேற்பவே பெயரைப் 'பவத்திரி' என்று மாற்றி அழைத்ததாகத் தெரிகின்றது இப் பெயரையே பின்னர் வந்த ஆந்திர நாட்டு ரெட்டிபாளையக் கல்வெட்டுச் செய்தியும் குறிப்பிட்டுள்ளது.

## சாதவாகனர்

தொண்டையர்க்கு முற்காலத்தில் சாதவாகனர்கள் அமராவதியைத் தலைநகராகக் கொண்டும், பவத்திரியைக்

கடற்கரைப் பட்டினமாகக் கொண்டும் ஆண்டிருந்தனர் என்று கருத இடமுண்டு.

சாதவாகனர்களுக்குப் பின்னர் வந்த மூன்றாம் நூற்றாண்டு இக்குவாகு வம்ச அரசர்களின் அமராவதிக் கல்வெட்டில் 'பவத்திரி' என்பது 'சிறிபவத்தே' என்று பிராகிருத மொழியின் மரபில் அழைக்கப்பட்டதைக் காணலாம்.

அகநானூறு 'பவத்திரி' என்று அழைப்பது கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட மரபாகும். சிறிபர்வத' என்ற வடமொழிப் பெயர் 'சிறிபவ' என்று பிராகிருத மொழியில் மாறிற்று. இந்த மரபைப் பின் பற்றியே அகநானூற்றில் 'பர்வத' என்ற வடமொழிப் பெயர் 'பவ' என்று மாறியது என்று கொள்ளலாம். அல்லது பிராகிருதப் பெயரை அப்படியே அகநானூறு எடுத்துக் கூறியது என்று கருதுவதும் பொருத்தமானதாகும்.

'பர்வதசிறி'யின் ஒட்டுச் சொல்லான 'சிறி' தமிழில் திரிந்து 'திரி'யாக மாறி, 'பவத்திரி' என்ற பெயர் தோலறியது.

மூன்றாம் நூற்றாண்டில் இக்குவாகு வம்சத்தினரின் அமராவதிக் கல்வெட்டில் 'சிறிபவத்தே', 'விஜயபுரிய புவதெசா' என்று சொல்லப்பட்டிருப்பதால் 'சிறிபவத்தே' என்ற பெயரே 'பவத்திரி' என்று அகநானூற்றில் வழங்கியது தெளிவாகத் தெரிகின்றது.

சங்க நூல்களில் பிராகிருத மொழி மரபைப் பின் பற்றிய சில வழக்குகளைக் காணலாம்.

பௌத்தர்களின் செல்வாக்கு சங்ககாலத்திலும் அதற்கு முன்னரும் ஆந்திர நாட்டில் புகுந்ததால் பிராகிருத

மொழிப் பெயர்கள் பரவலாயின. சாதவாகனப் பேரரசில் அரசிகள் பௌத்த மதத்தைப் பின்பற்றியதைக் கவனிக்க வேண்டும்.

## மதக்கலப்பு

அரசன் பிராமணனாகவும் அரசி பௌத்த மதத்தின ளாகவும் இருந்ததைக் காணலாம். நாக அரசிகளை மணந்து பிராமணர்கள் அரசுப் பதவி பெற்றதைத் தெளி வாகக் காணலாம். இவ்வாறு 'பிரம்ம சத்திரியர்கள்' என்ற புதுக்குலத்தை உண்டுபண்ணி, பிராமணர்கள் பழங்குடி அரசுகளைத் தங்களின் ஆதிக்கத்தில் கொண்டுவந்ததே சங்க காலத்திற்குப் பிற்பட்ட தென்னிந்திய அரசுகளின் வரலாறாகும் என்பதை மிகவும் கவனிக்க வேண்டும்.

## பிராகிருத வழக்கு

பவத்திரி என்ற கடற்கரைப் பட்டினத்தின் பெயர் பிராகிருத மொழியிலிருந்து வந்ததாகும். பவத்திரி என்பது சிரிபர்வதம் என்று வடமொழியில் வழங்கிற்று சிரி என்ற சொல் திரீ என்று பண்டைக் காலத்தில் தமிழில் வழங்கிய தாகத் தெரிகின்றது.

அரிக்கமேட்டு மட்பாண்ட ஓடுகளில் சிரி என்பது திரீ, என்று வழங்கப்பட்டதாக அறிஞர் ஐ.மகாதேவன், ஐ. ஏ. எஸ். அவர்கள் எழுதியுள்ளார்.

அறிஞர் சிலர் இந்தத் 'திரி' என்ற சொல்லே திரு என்று ஆகியதாகவும் கூறுவர். சங்க காலத்திலேயோ அதற்கு முன்னரோ 'பவத்திரி' என்ற ஊர் 'சிரிபர்வதம்' என்று வட மொழியில் வழங்கப்பட்டது. இந்தப் பெயர் சாதவாகனர் காலத்தில் 'பர்வதசிரி' என்று வழங்கப்பட்டதாகத் தெரி கின்றது. 'பர்வதஸ்ரீ' என்ற வட மொழிப் பெயரே 'பவத்திரி' என்று சங்க காலத்தில் பிராகிருத மொழியின் பெயரை ஒட்டி வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இன்று 'ஸ்ரீ' என்ற ஒட்டுச் சொல், ஓரெழுத்துச் சொல் ஆந்திர நடிகையர் பெயர்களின் முன்னர் வருகின்றது. ஆனால் சங்க காலத்தில், ஆந்திர சாதவாகனர் காலத்தில் இந்த ஒட்டுச்சொல் சாதவாகன அரசியரின் பெயரின்பின்னர் வழங்கப்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

அமராவதித் தூணில் காணப்பட்ட ஒரு கல்வெட்டில் (Epigraphica Indica Vol. XXIV) பிராகிருத மொழியில் 'பூர்வசைலியான' என்ற வடமொழிப் பெயர் 'புவசைலி யான' என்று வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். 'பூர்வ' என்பது 'புவ' என்று மாறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். 'பருவதஸ்ரீ' என்ற பெயரே பவத்திரி என்று பிராகிருத மொழியின் மரபிற்கேற்பச் சங்ககாலத்தில் வழங்கப்பட்டது.

'பூர்வ' என்பது 'புவ' என்று பிராகிருதத்தில் மாறினது போல 'பர்வத' என்பது பிராகிருதத்தில் 'பவ' என்று மாறித் தமிழில் வந்தது. 'பவ' என்ற சொல்லுடன் 'திரி' என்ற ஒட்டுச்சொல் சேர்ந்து 'பவத்திரி' என்ற பட்டினப் பெயர் வழங்கியது.

பரிபாடலில் 'பதிவிரதம்' என்ற பெயர் 'பதிவதம்' என்று வழங்கிற்று.

சங்க காலத்தில் பிராகிருத மொழியின் செல்வாக்கால் 'பர்வதஸ்ரீ' என்ற வடமொழிப் பெயர் பிராகிருதமொழியில் 'பவசிரி' என்றும், அதுவே தமிழில் 'பவத்திரி' என்றும் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

## புல்லி-புள்ளி-புலி

இது சார்பாக இன்னொரு செய்தியும் ஆராயத்தக்கது. இன்று தமிழகத்தின் தொல்லை எல்லையாக இருக்கும் வேங்கடம் ஆந்திர நாட்டில் உள்ளது. சங்க காலத்தில்

'புல்லி' என்ற மன்னன் வேங்கடத்தை ஆண்டான். அவன் கள்வர் மரபினன் என்பது சங்க நூல்களிலிருந்து தெரிகின்றது.

இந்தப் 'புல்லி' என்ற பெயர் பிற்காலத்திய சாளுக்கியப் பேரரசனின் பெயரான 'புலிமாய்' என்பதுடன் தொடர்புடையது என்பதைக் கவனிக்க வேண்டும். 'புலிமெய்' என்பதே 'புலிமாய்' என்று மாறிவிட்டது. புலியுடன் தொடர்புடைய பெயரானதால் புலியைக் கொன்று புலியின் தோலை அணிந்தவன் என்ற பெயரைக் கொண்டான் என்றும் புலியை மாய்த்துப் 'புலிமாய்' என்ற பெயரைக் கொண்டான் என்றும் கருதலாம்.

புல்லி என்ற சொல்லும் புள்ளி என்ற சொல்லும் மக்கள் வழக்கில் மாறி வருபவை. புள்ளியுடைய புள்ளிப்புறாவைப் புலிப் புறா' என்று நாட்டு மக்கள் அழைக்கின்றனர். புள்ளியை உடைய விலங்கைப் 'புள்ளி' என்று பண்டு கூறிய முந்தைய திராவிடன், அதையே பின்னர்ப் 'புல்லி' என்றும் புலி என்றும் சுருக்கிச் சங்க காலத்தில் அழைத்தான்.

புலிமாய் என்ற சாளுக்கிய அரசனின் பெயர் தூய திராவிடப் பெயர் என்பதைக் கண்டு கொள்ள வேண்டும். 'மை' என்ற கன்னடச்சொல் மெய்யைக் குறிக்கும். புலியை மாய்த்தவன் 'புலிமாய், புலிமாயி' அல்லது புலிமெய்யை உடையவன் என்று பொருள் கூறலாம். புலியைக் கொன்று அதன் தோலை அணிந்தான் என்றும் பொருள் கூறலாம்.

ஒய்சளர், போசளர் என்ற கன்னட நாட்டு மலைவாழ் மன்னன் ஒரு முனிவனின் ஆணையால் புலியைக் கொன்ற மன்னர்களின் மரபில் வந்தவனாவன் என்று வரலாற்று அறிஞர் கூறுவர்.

புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர்களைக் கள்வர் மரபினராகக் கூறுவர். இந்த அரச பரம்பரையில்

எத்தனை புலியைக் கொல்கின்றார்களோ அத்தனையும் அரசனுக்குப் பெருமை தருவதாகக் கருதும் நம்பிக்கை அண்மைக் காலம்வரை இருந்தது.

கள்ளர் இனத்தில் இன்றும் உள்ள உட்பிரிவுகளில் சிங்கத்தான், செம்புலியான் என்ற பெயர்கள் வழங்கு வதைக் காணலாம். ஆதலின் கள்ளர் மரபினரின் பரம்பரைச் செய்திகளில் புலி மிகவும் முக்கியமானது.

வேளிர் வரலாற்றை ஆராய்ந்த அறிஞர் மு. இராக வையங்காரும், பின்னால் இதை ஆராய்ந்த அறிஞர் ஐ. மகா தேவனும் ஒய்சள மன்னர் வேளிர் வழியினர் என்று கூறி னார்கள். அதில் ஐயமேயில்லை.

ஈராசு அடிகள் (Rev. Heras) எப்படி சுமேரியர், பாபி லோனியர், சிந்துப் பள்ளத்தாக்கு நாகரிகத்தினர் எல்லாம் 'புலிகடிமாலைப்' போற்றினார்கள் என்பதை விளக்கி யுள்ளார்.

## திப்புசுல்தான்

அந்த மிகப் பண்டைய மரபைப் பின்பற்றி ஒய்சள வம்சத்திற்கு மிகப் பிற்பட்டவனான, ஒய்சள நாட்டை ஆண்டவனான திப்பு சுல்தான்கூடப் புலித்தோலை அணிந்து, 'புலிமாயி' பரம்பரையில் வந்தவனாகக் கன்னட நாட்டு மக்களுக்குத் தன் இராச பரம்பரையைக் காட் டினான். அதுவே 'இரம்சான்' என்ற இஸ்லாமியப் பண்டிகைக் காலத்தில் 'புலி வேடம்' என்ற ஆட்டம் நடக்கக் காரணமாகலாம்.

புலிவேடம் போடுகிறவன் புலியின் தன்மையை, வீரத்தை அடைகின்றான் என்ற நம்பிக்கையில் இந்த ஆட்டம் ஆடப்படுகின்றது.

புல்லி என்ற சங்ககாலத் தலைவன், கள்வர் - கள்ளர் மரபினன் என்பதும் அவன் வேளிர் இனத்தினன் என்பதும் வேளிர் வரலாற்றிலிருந்து தெளிவாகின்றது.

புல்லியும் தொண்டைமானும் ஆண்டபோது பவத்திரி சிறந்த நகரமாகத் தொண்டையர் நாட்டில் இருந்திருக்க வேண்டும்.

புல்லி ஆண்ட நாடே தொண்டை நாடு என்று சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. இளந்திரையனும் ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் எப்பொழுது ஆண்டார்கள் என்பதைத் தெளிவாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சாதவாகனர் களுக்கும் தமிழ் மன்னர்களுக்கும் தொடர்பு இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறியுள்ளது தெரிந்ததே. ஈழத்தில் கஜபாகு, தமிழ்நாட்டில் சேரன் செங்குட்டுவன், ஆந்திர நாட்டில் சாதவாகன அரசன் ஆகியவர்கள் ஒரே காலத்தில் ஆண்டனர்— என்பதைப்பற்றிப் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் காட்டிய சான்றுகளை ஒப்புக்கொண்டாக வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் சாதவாகனரின் பேருரான 'அமராவதியில்' இருந்து கொண்டுவரப்பட்ட ஒரு பூதம் புகாரில் நிறுவப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளதையும், அகநானூற்றில் (3ɦ5) 'காமூர்ப்பூதம்' கூறப்பட்டதையும் கவனிக்க வேண்டும்.

பிற்காலத்தில்-சாளுக்கியர் காலத்தில் வாதாபியிலிருந்து கணபதியைச் சிறுத் தொண்டர் கொண்டு வந்ததையும் கவனிக்க வேண்டும்.

பிற்காலத்தில் இராசராச சோழன், இராசேந்திர சோழன் ஆகிய பேரரசர்களின் காலத்தில் கல்யாணி நகரத்

திலிருந்து சில சாளுக்கிய சிற்பங்கள் தஞ்சைக்குக் கொண்டு வரப்பட்டதையும் கவனிக்கவேண்டும். ஆதலின் தமிழ் நாட்டுடன் ஆந்திர நாட்டுக்கும், பின்னர்ச் சாளுக்கிய நாட்டுக்கும் இருந்த தொடர்பை மறந்து, சங்க இலக்கியத்தையும் தமிழ் இலக்கியத்தையும் ஆராய்வது தவறு.

**கல்வெட்டு சான்றுகள்**

சங்கத் தமிழரோடு தொடர்புடைய சாதவாகன அரசர்களுடைய பட்டத்தரசிகளின் பெயர்கள் 'சிரி' (ஸ்ரீ) என்ற கடைச் சொல்லுடன் முடிவடைவதைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

இக்குவாகு வம்சத்தின் மூன்றாம் நூற்றாண்டுக்குரிய அமராவதிக் கல்வெட்டில் 'சிரிபவத்தே விஜயபுரிய புவதெசா' (Sripavate Vijaya Puriya puva desa)

என்று கூறப்பட்டுள்ளது. அமராவதிக் கல்வெட்டில் விஜயபுரியும் சிரிபர்வதமும் ஒன்று என்று கூறப்பட்டுள்ளது. அமராவதியைப்பற்றிச் சிலப்பதிகாரமும் கூறியுள்ளது.

'அமாரவதி உந்தனுக்கு
அழகான கலியாணமாம்'

என்று தொடங்கும் கொங்கு நாட்டுப் பாடலை நான் கேட்டிருக்கிறேன். இஃது அமாரவதியின் சிறப்பை இன்றும் நாட்டுப் பாடல் கூறுவதைக் காட்டுகின்றது.

சிரிபர்வத அரசர்களின் கல்வெட்டுக்களில் தமிழ்ப் பெயர்கள் தாங்கிய தலைவர்களின் பெயர்களைக் காணும் போது நாம் வியப்புறாமல் இருக்க முடியாது. சிரிபர்வத அரசர்களின் கல்வெட்டுக்களில்,

| | |
|---|---|
| Ehuvale | (எஃகு) |
| Adavi Camtasiri | (அடவி) |
| Damila Kanha | (தமிழக்கண்ணன்) |

என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இந்தப் பெயர்கள் ஆந்திர நாட்டில் பண்டைத் தமிழனுக்கு இருந்த செல்வாக்கைக் காட்டுகின்றன.

ஆந்திர நாட்டு வரலாற்றை எழுதிய டாக்டர் கோபாலாச்சாரி என்னும் அறிஞர் இப் பெயர்களைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டித் தமது நூலில் எழுதியுள்ளார்.

தமிழக்கண்ணன் என்ற பெயர் 'நூற்றுவர் கன்னர்' என்ற சிலப்பதிகாரப் பெயருடன் ஒத்திருப்பதும் கவனிக்கத் தக்கது.

ஆந்திராவில் 'அள்ளூர' (Allura) என்ற இடத்தில் காணப்பட்ட கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் கல்வெட்டில் 'மகா தலைவரையும்' (Mahatala-vare) மற்றும் ஓர் அரசரையும் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னரே யிருந்து, பின்னர்க் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலும் தமிழரின் பண்பாடு, மரபு ஆந்திரத்திலும் பரவியிருந்தமையை இக் கல்வெட்டு காட்டுகின்றது.

இது போன்றே ஈழ நாட்டிலும் குதிரை வணிகர்களின் தமிழ்ப்பெயர் அதே காலத்தில் காணப்படுவதும் மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் எழுதியதிலிருந்து தெரிகின்றது.

சாதவாகன அரசர்கள் கலப்பினக்குடியினர் என்று வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர். இந்தக் குடியில் அரசன் பிராமணனாகவும் பட்டத்தரசி சத்திரிய சாதியாகவும் இருந்ததைக் குறிப்பிட்டுள்ளனர்.

பிராமணர் அரசுப் பதவிக்கு ஆசைப்பட்ட போது சத்திரியப் பெண்ணை மணந்தனர். சங்க காலத்துக்கு

அடுத்து இந்த வகையாகத் தென்னிந்தியப் பழங்குடி அரசு களைப் பிராமணர்கள் தங்களின் மேலாண்மைக்குக் கொண்டு வந்ததற்குச் சான்று சில அரசுப் பரம்பரை வரலாறுகளிலிருந்து தெரிகின்றது.

கடம்பர் என்ற பழங்குடியினரின் அரசை 'மயூரசர்மன்' என்ற பிராமணன் மணத் தொடர்பால் 'பிரம்மசத்திரிய' அரசாக மாற்றினான்.

பல்லவர்களைப்பற்றிய வரலாற்றுக் கதைகளும், பாண ராட்டிர அரசு வரலாற்றுக் கதைகளும் இவ்வகைப் 'பிரம்ம சத்திரிய' அரசு மரபுகளைக் காட்டுகின்றன.

சாதவாகன அரசனான 'சிரிசாந்த மூலன்' என்பவனின் மனைவியின் பெயர் 'சாந்தசிரி' என்று கல்வெட்டுக்களில் வருகின்றது. இந்தப் பெயர் மாற்றம் சங்க காலத்தில் ஆந்திர நாட்டுக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது.

ஆதலின், 'பவத்திரி' என்று வரும் அகநானூற்று ஊர்ப் பெயர் ஸ்ரீபர்வதம், பர்வதஸ்ரீ என்ற பெயரே என்பதில் ஐயமில்லை.

சாதவாகனருக்குப் பின் வந்த 'இக்குவாகு' மரபின ருக்கும் தமிழகத்திற்கும் தொடர்பு இருந்ததைப் புற நானூறு 392ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.

"விருந்திறை நல்கி யோனே யந்தரத்
தரும்பெற லமிழ்த மன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்பிறங் கடையே."

இந்தப் பாடல் (392) 'அதியமான் நெடுமானஞ்சி' மகன் 'பொகுட்டெழினியை' ஔவையார் பாடியதாகும்.

## இக்குவாகு — கரும்பு

ஓர் உயரிய, சிறந்த வகைக் கரும்பை அதியமான் ஆந்திர நாட்டில் இருந்து தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

இக்குவாகு மரபு கரும்பின் பெயர் அடிப்படையாகத் தோன்றியது.

அதியமான் மரபினர்—சேர அரசர் பரம்பரையில் உதியன் மரபில் வந்தவர்களாவர். உதியன் என்ற பெயரே அதியன் என்று மாறியிருக்கலாம்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அதியன் என்ற பெயர் வடமொழியிலிருந்து, அதிகாரி என்ற பெயரிலிருந்து வந்ததாகக் கூறியது ஐயத்திற்குரியது.

உதிய மரம் பிற்காலத்தில் ஒதிய மரம் ஆயிற்று. ஆதலின் சேர மரபைச் சேர்ந்த அதியமான் காலத்தில் ஆந்திர நாட்டில் இருந்து ஒரு சிறந்த இனக் கரும்பு, அமிழ்து போன்ற இனிய கரும்பு தகடூருக்குக் கொண்டு வரப்பட்டுப் பயிரிடப்பட்டது. இந்த அதியமான் அரசன் இக்குவாகு மன்னன் காலத்தினனாவான் என்று கருதலாம். இக்காலம் ஏறக்குறைய கி.பி. மூன்றாவது நூற்றாண்டாகலாம்.

இந்த மன்னன் அதியமான் நெடுமானஞ்சி என்பதைப் புறநானூறு 99ஆம் பாடல் காட்டுகின்றது:

> ''அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
> அரும்பெறன் மரபிற் கரும்பிவண் டந்தும்
> நீரக விருக்கை யாழி சூட்டிய
> தொன்னிலை மரபினின் முன்னோர் போல''

இக்குவாகு மரபினர் ஆண்ட நாட்டிலிருந்து கொண்டு வந்த சர்க்கரை நிறைந்த கரும்பை, அதியமான் நெடுமானஞ்சியின் முன்னோர்கள் விண்ணகத்திலிருந்து இவ் வுலகத்திற்குக் கொண்டு வந்ததாகக் கூறப்பட்டதிலிருந்து அதியமான் நெடுமானஞ்சியின் காலம் இக்குவாகு வழியினர் ஆண்ட காலம் என்று கருதலாம்.

கரும்பின் பெயர் அடிப்படையாக இந்த இக்குவாகு மரபின் பெயர் இருப்பதால் அதியமான் மரபினர் ஆட்சி செய்த காலமும் மூன் றாம் நூற்றாண்டாகவே இருக்கலாம்.

கரும்பு ஆலையும் சர்க்கரையும் சங்க காலத்திலேயே சொல்லப்பட்டுள்ளன. 'கரும் புல்' என்ற பெயரே கரும்பு என்று திரிந்தது என்பதையும் கவனிக்க வேண்டும். 'கணம்புல்' என்ற சொல் பிற்காலத்தில் 'கண்புல்', 'கம்புல்' என்றும், அதையொட்டிய புல்லான 'கம்பு'க்கும் வழங்கி யதையும் காணவேண்டும். கண்புல், கம்புல் என்பதே பிற்காலத்தில் கம்பு ஆனதைக் கவனிக்கவேண்டும்.

ஆதலின் சங்க காலத்திலும் அதற்குப் பிற்பட்டும் தொடர்ந்து ஆந்திர நாட்டுக் கடற்கரைப் பகுதியை ஆண்ட தொண்டையர்கள், சாதவாகனர்கள், இக்குவாகு அரசினர் ஆகியோருடன் தமிழ் மன்னர்கள் தொடர்பு கொண்டு இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை.

சங்க காலத்தில் ஆந்திரநாட்டில் இருந்த பவத்திரியைத் தொண்டைமான் பொலம் பூண் திரையன் ஆண்டிருந்தான் என்று கருத இடமுண்டு.

ஆந்திர நாட்டுக் கடற்கரைப் பகுதியைத் தொண்டை யர்களான திரையர்கள் ஆண்டதாகத் தெரிகின்றது.

ஆனால், பௌத்தர்களின் செல்வாக்கு சங்க காலத் காலத்திலும் அதற்கு முன்னரும் ஆந்திர நாட்டில் புகுந்த

தால் பாலி மொழிப் பெயர்கள் பரவலாயின. பவத்திரி என்ற கடற்கரைப் பட்டினத்தின் பெயர், பாலி மொழி யிலிருந்து வந்ததாகும். பவத்திரி என்பது சிரிபர்வதம் என்று வடமொழியில் வழங்கிற்று.

சங்க காலத்திலேயோ அதற்கு முன்னரோ 'பவத்திரி' என்ற ஊர் 'சிரிபர்வதம்' என்று வடமொழியில் வழங்கப் பட்டது. இந்தப் பெயர் சாதவாகனர் காலத்தில் 'பர்வத சிரி' என்று வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. 'பர்வதஸ்ரீ' என்ற வடமொழிப் பெயரே 'பவத்திரி' என்று சங்க காலத்தில் பாலி மொழியின் பெயரை ஒட்டி வழங்கப்பட்ட தாகத் தெரிகின்றது.

நெல்லூர் மாவட்டத்தில் கூடூர் வட்டத்தில் இரெட்டி பாளையம் என்ற ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல் வெட்டில் 'பவத்திரி' நாட்டின் 'காகந்தி' என்ற கடற்கரைப் பட்டினம் கடல் கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டிருப் பதைக் காணலாம்.

சங்க காலத்தில் தொண்டையர் ஆண்டபோது சிரிபர்வத நாட்டின் தலைநகர் அமராவதியாகவும் பவத்திரி என்ற ஊர் கடற்கரைப் பட்டினமாகவும் இருந்திருக் கின்றது. இந்தப் பவத்திரியையே தொண்டைமான் பொலம்பூண்திரையன் ஆண்டான் என்று கருத இடமுண்டு.

இந்தப் பவத்திரி சங்க காலத்தில் சிறப்புடன் இருந்தது. ஆனால் பின்னர்க் கடல் கோளால் இந்தப் பவத்திரி அழிந் ததையே கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது.

காவிரிப் பூம்பட்டினத்தைக் குறித்து மணிமேகலை அழைத்த பெயரையே பவத்திரிக்கும் தொண்டையர்கள் சூட்டியிருப்பதால் இந்த மரபு தமிழக வழக்கிலிருந்து பின் பற்றியதாகத் தெரிகின்றது. காகந்தி என்ற பெயரிலிருந்து

சோழர் பெயரிட்ட மரபை ஒட்டித் தொண்டையர் பவத்தி ரியைத் தமிழ்மொழிப் பெயரையே பின்பற்றிக் காகந்தி என்று பெயரிட்டதாகத் தெரிகின்றது.

அகநானூற்றில் குறிப்பிடப்பட்ட 'பவத்திரி' என்ற சிறந்த கடற்கரைப்பட்டினத்தைச் சங்க காலத்தில் ஆண்டவர் தமிழ் மன்னரான தொண்டையர் மரபினரே என்பதில் ஐயமில்லை.

# 12

## அகநானூற்றில் கோடிக்கரை

சங்க நூல்களில் பல ஊர்களைப் பற்றிய செய்திகளைப் புலவர்கள் கூறியுள்ளனர். சில ஊர்களைப்பற்றி ஓரிரு குறிப்புகளைத் தவிர வேறு காண முடிவதில்லை.

கோடிக்கரையைப் பற்றிச் சங்கநூல்களில் அகநானூற்றில் ஒரே ஒரு செய்தி வருகின்றது. அகநானூறு 70 ஆம் பாடலில் 'தொன்முது கோடி' என்று கோடிக்கரை அழைக்கப்படுகின்றது. இது பாண்டியர்க்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளது.

இங்கு இராமன் ஓசையிட்டுக் கொண்டிருந்த பறவைகளின் ஒலியை நிறுத்தினான் என்று கூறப்பட்டுள்ளது.

"கொடுந்திமிற் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலாக் கமழுஞ் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்கண் அவ்வலைப் பயம்பா ராட்டிக்
கொழுங்கண் அயிலை பகுக்குந் துறைவன்
நம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்றப்
பலருமாங் கறிந்தனர் மன்னே இனியே
வதுவை கூடின் பின்றைப் புதுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்

கானலம் பெருந்துறைக் கழனி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும், முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றுஇவ் வழுங்கல் ஊரே.''

— அகம். 70

இந்தப் பாட்டில் முதலில் பரதவருடைய தொழில்பற்றி ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. பரதவருடைய 'சிறுகுடிப் பாக்கம்' கூறப்பட்டுள்ளது.

குறவர் முதலிய பழங்குடி மக்கள் வாழ்ந்த சிறிய ஊர்களைச் 'சிறுகுடி' என்றழைப்பது வழக்கமென்று தெரிகின்றது. வேட்டுவரைச் 'சிறு குடியினரே' என்று சிலப்பதிகாரத்தில் அழைத்திருப்பதைக் காணலாம்.

## பறவைகள் கூடுமிடம்

கோடிக்கரையில் பறவைகள் நிறைய இருந்தனவாக அகநானூறு கூறும்செய்தி மிகவும் சிறப்பானதாகும். கோடிக் கரையில் பறவைகள் நிறைய இருந்து கத்தினமையால் இராமன் பறவைகளைக் கத்தாமல் அவித்தான் என்று அகநானூறு கூறுகின்றது.

பறவைகள் மிகுதியாகக் கூடிச் செய்யும் ஒலியைத் 'துழனி' என்று சங்க நூல்கள் கூறும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் கோடிக்கரையில் பறவைகள் மிகுதியாக இருந்தமைபற்றி அகநானூறு கூறிய செய்தி இன்றும் உண்மையாகவே இருப்பது மிகவும் வியப் பானதாகும்.

இன்றும் தமிழ்நாட்டில் பறவைகளை மிகுதியாகக் காணவேண்டுமாயின் வேடந்தாங்கல் போக வேண்டும். அல்லது கோடிக்கரையில் பலவகைப் பறவை இனங்களைக் காணலாம். இதன் காரணமாகவே கோடிக்கரையைப் பறவைகள் புகலிடமாகத் (Bird Sanctuary) தமிழக அரசு நிறுவி உள்ளது.

இங்கு வரும் வெளிநாட்டுப் பறவைகளைப் பற்றி, பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகத்தார் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இருநூறுக்கும் மேற்பட்ட பறவை இனங்களை இந்தக் கழகத்தார் கோடிக் கரையில் கண்டுள்ளனர். இந்தக் கழக ஆராய்ச்சியாளருடன் சில நாட்கள் நான் பறவைகளை ஆராய்ந்ததுண்டு.

இங்கு வரும் சில பறவைகள் சைபீரியா முதலிய மிகமிகத் தொலைவான நாடுகளிலிருந்தும் வருகின்றன.

பறவைகளின் காலில் காணப்பட்ட எழுத்துப் பொறித்த வளையங்கள் கோடிக்கரையில் மீட்கப்பட்டுள்ளன. கோடிக்கரையில் போடப்பட்ட வளையங்கள் ஐரோப்பாவிலும் சைபீரியாவிலும் அகப்பட்டுள்ளன.

அகநானூறு கூறும் செய்தியிலிருந்து சங்ககாலத்திலும் கோடிக்கரையில் பல இனப் பறவைகள் இருந்தன என்பது தெளிவாகின்றது. வேடந்தாங்கலில் இருக்கும் பறவைகள் புகலிடம் இருநூறு ஆண்டுகள் வரலாற்றை உடையது. ஆனால், கோடிக்கரையில் உள்ள பறவைகள் புகலிடம் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புடையது என்பதை அகநானூற்றில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

இந்த அகநானூற்றுப் பாடலில் கூறிய இன்னொரு செய்தி இராமனைப்பற்றியதாகும். சங்க இலக்கியத்தில் முற்பட்ட நூல்களில் இராமனைப்பற்றியோ கண்ணனைப் பற்றியோ வரும் செய்திகள் மிகவும் குறைவு.

ஒரே ஓர் அகநானூற்றுப் பாடலில் 'மால்' என்று கண்ணன் அழைக்கப்படுகின்றான். கண்ணன் கோபிகைகளுடன் நடத்தியவிளையாட்டு இந்தப்பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## வீரன் இராமன்

இராமனைப்பற்றி அகநானூறு 70ஆம் பாடலே குறிப்பிட்டுள்ளது. இராமனும் அவனுடைய பரிவாரமும் கோடிக் கரையில் மந்திரம் சொல்லுதல் காரணமாக ஆலமரத்தில் புட்கள் கத்தாமல் அவன் அவித்தான் என்று அகநானூறு கூறியுள்ளது.

இராமனையும் கோடிக்கரையையும் தொடர்பு படுத்தும் பரம்பரைச் செய்தி இன்றும் கோடிக்கரையில் வழங்குகின்றது. இராமன் கோடிக்கரையில் ஒரு பாறையில் ஏறி இலங்கையைப் பார்த்ததாகவும், இராமனின் பாதம் ஒரு பாறையில் படிந்ததாகவும் கோடிக்கரைக் காட்டில் காட்டுவர். இராமபாதம் என்று இந்த இடம் இன்று அழைக்கப்படுகின்றது.

பாறையில் பாதச் சுவடு தெரிகின்றது. ஆனால், அது மனிதனின் பாதச்சுவட்டைவிட மிகப் பெரிதாக உள்ளது.

'வெல்போர் இராமன்' என்று அகநானூறு கூறுவதால் இராமனுடைய தெய்வத்தன்மைபற்றிய கருத்து சங்க காலத்தில் வழங்கவில்லை என்று தெரிகின்றது. இராமன் தெய்வமானது சங்ககாலத்துக்குப் பிற்பட்டதே.

இராமனைச் சத்திரியனாகவே அகநானூறு கூறியுள்ளது. இராமன் பறவைகளின் ஒலியை அவித்தது ஒரு பெரும் சத்திரியனின் தன்மை யென்பதை வடநூல் மரபு வழி அறியலாம்.

இலலித விஸ்தாரம், மகாவஸ்து முதலிய பௌத்த நூல்களில், புத்தர் மரத்தடியில் தங்கினதும் மரத்தின் நிழல் மறையாமல் நிலைத்து நின்றதாகவும் கூறப்பட்டுள்ளது. வடமொழியில் உள்ள பழைய நூல்களில் 'இத்தகைய செயல் மகாபுருஷனின் இலக்கணமாகும்' என்று கூறப்பட்டுள்ளது.

இராமன் காட்டில் சென்று கொண்டிருந்த போது இராமனின் சிறப்பால் மரங்களின் நிழல்கள் அசையாது நின்றன என்று காளிதாசன் கூறியுள்ளான். காளிதாசனுக்கு முந்தியதொரு செவிவழிச் செய்தியையே அகநானூறு கூறுவதாகக் கருதவேண்டும்.

ஆலமரத்திலிருந்த பறவைகளின் ஓசையை இராமன் அவித்ததாகக் கூறியதும் காளிதாசன் கூறியதுபோன்ற தொரு செய்தியாகும். இதுவும் இராமன் ஏழுமராமரங்களை ஒரே அம்பால் துளைத்தது போன்றதொரு வீரச்செயலேயாகும். இத்தகைய வீரச் செயல்களையே பிற்காலத்தில் தமிழிலக்கியத்தில் 'விளையாட்டு' என்றழைத்தனர்.

பௌத்தர்களின் நூல்களில் கால் கட்டைவிரலால் பெரும் பாரத்தைத் தூக்கி எறிவது போன்ற வீரச் செயல்கள் மகாபுருஷனின் செயல்களாகக் கூறப்பட்டுள்ளன.

'விளையாட்டு ஐங்கலம் நெல் சுமப்பது
சாத்தற் கெளிதென் றாற் போலக் கொள்க'

என்று சிவஞான முனிவர் எழுதியதை இங்குக் கவனிக்க வேண்டும். சிவபெருமான் நிகழ்த்திய அருஞ்செயல்களையே 'திருவிளையாடல்' என்று புராணங்கள் கூறும். இத்தகையதோர் அருஞ் செயலே இராமன் பறவைகளின் ஒலியை அவித்ததாகும்.

இராமன் கோடிக்கரையில் மந்திராலோசனை செய்ததாகவும் கூறுவர். தொன்முது கோடியைத் திருவணைக்கரை என்றும் கூறுவர். இராமன் கோடிக்கரையில் இருந்ததால் இலங்கையை அடைய, கடலைக் கடக்க மந்திராலோசனை செய்தான் என்று கொள்ள வேண்டும்.

## இலங்கை பற்றிய ஆய்வு

அண்மையில் வால்மீகி இராமாயணத்தை வரலாற்றுக் கண் கொண்டு ஆராய்ந்த சங்காலியா (Sankalia) என்ற வரலாற்றுப் பேராசிரியர் இராமாயணம் தென்னாட்டில் நிகழவேயில்லை என்பதற்குப் பல ஆணித்தரமான சான்றுகள் கூறி நிறுவியுள்ளார். இலங்கை என்பது மத்திய இந்தியாவில் வழங்கும் 'லங்கா' என்ற பெருநீர்ப் பரப்பின் பெயராகும் என்று காட்டியுள்ளார். ஜபல்பூர் அருகே இலங்கை இருந்திருக்க வேண்டுமென்று காட்டியுள்ளார். இராவணன் மத்திய இந்தியப் பழங்குடி மக்களின் தலைவனாக இருக்க வேண்டும் என்பதாயும் கூறியுள்ளார்.

வரலாற்றுத் துறையில் பெரும் அறிஞராகக் கருதப்படும் பேராசிரியர் சங்காலியாவின் கருத்து மிகவும் பொருத்தமானதேயாகும்.

இராவணன் இலங்கையைச் சேர்ந்தவன், தென்னாட்டுத் தமிழன் என்ற கருத்து பிற்காலத்ததாகும். மகாபாரதம் போன்று இராமாயணம் வரலாற்றுத்தன்மை வாய்ந்ததன்று என்பதை இன்று அறிஞர்கள் பலரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆதலின் இராமாயணத்தில் உண்மை வரலாறு காண முயல்வது வீணாகும்.

## மறுக்கத் தக்கது

பேராசிரியர் சங்காலியா அவர்கள், வால்மீகி இராமாயணம் காளிதாசனுக்குப் பிறகு கி. பி. நான்காம் நூற்

றாண்டுக்குப் பின்னால் எழுத்து வடிவாக்கப்பட்டதாகக் கருதலாம் என்று கூறியுள்ளார். கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முன் இராமனையும் இலங்கைத் தீவையும் தொடர்புபடுத்திய கதை வழங்கவில்லை என்று வடமொழித் தொடர்பான நூல்களை ஆராய்ந்து அவர் நிறுவியுள்ளார். ஆனால், இந்தக் கருத்து சரியானதன்று என்பதற்குத் தமிழிலக்கியத்தில் சான்று உள்ளது.

கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முன்னரே கி.பி. முதல், இரண்டு நூற்றாண்டுகளில் தோன்றிய அகநானூறு இராமன் கோடிக்கரையில் இருந்ததாகக் கூறுகின்றது. இராமன் கோடிக்கரையில் இருந்ததாகக் கூறினதால் இராமன் இலங்கைத்தீவு செல்ல ஆயத்தம் செய்தான் என்பது தெரிந்ததாகும். ஆதலின் இராமனை இலங்கைத் தீவுடன் தொடர்பு படுத்திய செய்தி சங்க காலத்திலே வழங்கினதாகும் என்பது தெளிவு.

பேராசிரியர் சங்காலியா அவர்கள் கூறுவது போலன்றிக் கி. பி. முதல் நூற்றாண்டிலேயே இராமனை இலங்கைத் தீவுடன் தொடர்புபடுத்தும் கதை தென்னாட்டில் பரவியிருந்தது என்பது தெளிவாகும். பேராசிரியர் சங்காலியா அவர்களுக்குச் சங்கநூல் செய்தி தெரியாமையால் இவ்வாறு எழுதினார்.

புறநானூற்றிலும் (378) இராமனைப் பற்றிய செய்தி ஒன்று வருகின்றது. ஆனால், அதில் இராமனை இலங்கைத் தீவுடன் தொடர்பு படுத்திய செய்தியைக் காணோம். இராமனை இலங்கையோடு தொடர்பு படுத்திய கதை கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழகத்தில் வழங்கியிருப்பினும் இராமனைத் தெய்வமாகக் கருதவில்லை என்பது தெரிகின்றது.

## தெய்வநிலை இல்லை

இராமனைப் பெரிய வீரனாகவே கருதினர். சிலப்பதிகாரத்தில் 'அருந்திறல்' என்றே இராமன் பெயர் கூறப்பட்டுள்ளது.

சேனாவரையர் 'விறல்' என்ற சொல்லிற்கு எடுத்துக்காட்டாக இந்த 'அருந்திறல்' என்ற பெயரைக் காட்டியுள்ளார். 'பெருவிறல், அருந்திறல் என்னும் தொடக்கத்தன' என்று கூறியுள்ளார். ஆதலின் இராமனை அருந்திறலையுடைய வீரன் என்றே சங்ககாலத்தில் கருதினர் என்பது தெளிவாகும்.

இராமனை விஷ்ணுவுடன் ஒன்றுபடுத்தித் தெய்வமாகவே கருதினது கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இராமாயண கதை கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுந்தது என்றும் முடிவாக எழுதப்பட்டது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் தான் என்றும் அறிஞர்கள் பலர் கருதுகின்றனர்.

ஆதலின் கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளுக்குள் தோன்றின அகநானூற்றில் கூறப்பட்ட இராமன், தெய்வமாகக் கூறப்படவில்லை; வீரனாகவே கூறப்பட்டுள்ளான்.

கோடிக்கரையைக் கிரேக்க நூலாசிரியரான 'தாலமி' 'நிகம' என்று குறிப்பிட்டுள்ளார் என்று கூறுவர். நிகமம் என்ற சொல் வேதத்தையும் குறிக்கும். தாலமியின் காலம், முதல் நூற்றாண்டு ஆனதால் 'நிகம' என்று குறிக்கப்படும் வேதாரண்யத்தை முதல் நூற்றாண்டிலேயே கிரேக்கர்கள் தெரிந்திருந்தனர் என்பது தெளிவாகும்.

வேதாரண்யத்தைத் திருமறைக்காடு என்று தேவாரம் அழைக்கின்றது. திருமறைக்காடு என்ற பெயர் அக நானூற்றில் 'அருமறைக்கு' புட்களை ஒலியவித்த செய்தியால் வழங்கிய பின்னர் வேதாரண்யம் என்று வட மொழியில் அழைக்கப்பட்டிருக்கலாம்.

'நிகமம்' என்ற சொல் வணிகத்தில் சிறந்த ஊரையும் குறிக்கும். சங்க காலத்திலேயே நிகமம் என்ற ஊர்ப் பெயர்கள் வழங்கி வந்துள்ளன.

நொச்சிநியமங்கிழார் என்ற புலவர் நொச்சி நியமம் என்ற ஊரில் வாழ்ந்தவர். நியமமூதூர் என்பது அகநானூற்றில் (83) கூறப்பட்டுள்ளது. நியமம் என்பதற்கு 'அங்காடி' என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது. ஆதலின் சங்ககாலத்திலேயே கோடிக்கரையும் அதன் அருகிலிருந்த வேதாரண்யமும் கிரேக்கர் வணிகம் செய்த அங்காடி நிறைந்த ஊராக இருந்திருக்க வேண்டும். தொன்முது கோடி சங்ககாலத்திலேயே கிரேக்க வணிகர்கள் அறிந்த ஊராய் இருந்ததென்பது உறுதியாகும்.

# 13

# யானை உண்ட அதிரல்

அதிரல் என்பது ஒரு கொடியாகும் என்று அகநானூறு, புறநானூறு முல்லைப் பாட்டு, சிலப்பதிகாரம் முதலான நூல்கள் கூறு கின்றன. குறிஞ்சிப் பாட்டு என்ற நூலும் இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

"எல்லி மலர்ந்த பைங்கொடி அதிரல்
பெரும்புலர் வைகல் அரும்பொடு வாங்கிக்
கான யானை கவளம் கொள்ளும்"

— அகம். 157

யானை தனது துதிக்கையைக் கொண்டு வளைத்து மரம், செடி, கொடிகளை உண் பதால் 'கவளம்' என்று அகநானூறு கூறி யுள்ளது. 'கவழம்' என்றும் பிற்காலத்திய நூல் களும் நிகண்டுகளும் வழங்கும்.

அதிரல் என்ற கொடியை யானை கவள மாக விழுங்குவதை நான் எனது நூலான 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' என்ற நூலில் எழுதியுள்ளேன். பெண் யானைஉண்ட

---

Dillenia Indica

மூங்கில் முளை எப்படிக் கருவை அழித்தது என்று கூறிய செய்தி அறிவியலின்படி உண்மையானது என்பதைச் 'செல்வி'யில் முன்பு நான் எழுதினேன்.

சித்த வைத்தியத்தில் மூங்கில் இலை வேறு சில சரக்குகளோடு கலந்து பெண்களின் கருப்பச் சிதைவுக்குக் கொடுப்பதைப் பற்றி நான் கேள்விப்பட்டுள்ளேன்.

அதிரல் என்பது Dillenia என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்த செடியாகும். இது கொடியாகவும், சிறு தூறாகவும், மரமாகவும் காணப்படும். யானை இந்தச் செடி மரத்தின் கனியை விரும்பி உண்பதனால், அதன் எச்சத்துடன் விதை விழுந்து பரப்பப்படும் என்று சொல்லியிருப்பது முக்கியமானது. (Dillenia Indica with an orange-red papery scaly bark and very large showy white flowers and a fruit is much sought after by elephant and the seeds are distributed by this way. The fruit is distinctly tart but with plenty of sugar and the seeds are distributed in this way.)

காட்டு யானை அதிரல் கொடியின் காய் பழுக்கும் வரை காத்திராது. அரும்பொடு தின்பதை அகநானூறு கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும். சங்கப் புலவர்கள் அறிவியல் சார்ந்த புலவர்கள் என்பதற்கு இச் செய்தி ஒரு சான்றாகும்.

## ஒரு கருத்து

கழக வழியாக நான் எழுதிய 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' என்ற நூலைக் குறித்து Sunday Express என்ற ஞாயிறு இதழில் எழுதிய ஓர் ஆய்வாளர் அதை Bible of the forester என்று வர்ணித்துள்ளார். அதில்

காட்டு யானையின் சாதியை, நகத்தை வைத்தும் வேறு சில குறிகளை வைத்தும் நான் விளக்காததைப்பற்றி எழுதியிருந்தார்.

அவை பிற்காலத்திய புராணச் செய்திகள் என்று நான் மறுத்து எழுதினேன். சங்கப் புலவர்கள் யானையைப் பாடிய செய்திகள் அறிவியல், விலங்கியல் இரண்டிற்கும் முற்றிலும் ஒத்து வருவதாகும் என்றும் விளக்கினேன். அதற்கு அவர் மறுப்புக் கூறவில்லை.

## அகர முதலி - உரைகள்

அதிரல் என்பதற்குச் சென்னைப் பல்கலைக் கழக அகராதி (Madras Lexicon) காட்டு மல்லிகை என்று சிலப்பதிகார அரும்பத உரையைப் (சிலம்பு. 13—156)பின் பற்றிக் கூறியுள்ளது.

முல்லைப் பாட்டு உரையில் 'புனலி' என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார்.

'மரத்தில் பரவிய அடித்தூறு' என்று வின்சுலோ அகராதியில் கூறப்பட்டுள்ளது.

அகநானூற்றில் கோங்க மரத்தில் பற்றுக்கோடு கொண்டு ஏறும் கொடியாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அகநானூறு கூறிய மேலே காட்டிய ஒரே செய்தியிலிருந்து தான் அதிரல் எதுவென்று கண்டு கொள்ள முடிகின்றது.

அகநானூாற்றில் அதிரலைப்பற்றிச் சில பாடல்கள் உள்ளன.

"முகைபிணி அவிழ்ந்த கோங்கமொ டசைஇ நனை
அதிரல் பரந்த அந்தண் பாதிரி,

உதிர்வீ அஞ்சினை தாஅய் எதிர்வீ
மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்''

— அகம் 99

''வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்க்
கொய்குழை யதரல் வைகுபுலர் அலரி
சுரியிரும் பித்தை சுரும்புபடச் சூடி
இகல்முனைத் தழீஇய ஏறுடைப் பெருநிரை
நனைமுதிர் நறவி னாட்பலி கொடுக்கும்
வாலிணப் புகலின் வடுகர் தேஎத்து''

— அகம் 213

''நன்முகை அதிரல் போதொடு குவளைத்
தண்நறுங் கமழ் தொடை வேய்ந்தநின்
மண்ணார் கூந்தல் மரீஇய துயிலே

— அகம் 223

''புன்காற் பாதிரி அரிநிறத் திரள்வீ
நுண்கொடி அதிரலொடு நுணங்கறல் வரிப்ப
அரவெயிற்று அன்ன அரும்புமுதிர் குரவின்
தேனிமிர் நறுஞ்சினைத் தென்றல் போழக்''

— அகம் 237

''கானப் பாதிரிக் கருந்தகட் டொள்வீ
வேனில் அதிரலொடு விரைஇக் காண்வரச்
சில்லைங் கூந்த லழுத்தி மெல்லிணர்த்
தேம்பாய் மராஅம் அடைச்சி வான்கோல்''

— அகம் 261

"சிலையே றட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக் கிவர்ந்த தகர்கொடி அதிரல்
நெடுநிலை நடுக லாட்பலிக் கூட்டுஞ்
சுரனிடை விலங்கிய மரனோங் கியவின்"

— அகம் 289

"பார்வல் வெருகின் கூரெயிற் றன்ன
வரிமென் முகைய நுண்கொடி அதிரல்
மல்ககல் வட்டியர் கொளவிடம் பெறாஅர்
விலைஞ ரொழித்த தலைவேய் கான்மலர்"

— அகம் 291

"உருகெழு மஞ்ஞை ஒலிசீர் ஏய்ப்பத்
தகரம் மண்ணிய தண்நறு முச்சி,
புகர்இல் குவளைப் போதொடு தெரிஇதழ்
வேனில் அதிரல் வேய்ந்தநின்
ஏமுறு புணர்ச்சி இன்துயில் மறந்தே"

— அகம் 393

"நெடுநா வொண்மணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்"

—(பத்துப். முல்லைப்பாட்டு 50-54)

"செருந்தி அதிரல் பெருந்தண் சண்பகங்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை

குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்த"

(பத்துப்.—குறிஞ்சிப்பாட்டு 75-79)

"குயில்வா யன்ன கூர்முகை அதிரல்
பயிலா தல்கிய பல்காழ் மாலை
மையிரும் பித்தை பொலியச் சூட்டிப்
புத்தகற் கொண்ட புலிக்கண் வெப்பர்"

—ஔவையார், புறம். 269

"அவரோ வாரார் தான்வந் தன்றே
புதுப்பூ அதிரல் தாஅய்க்
கதுப்பற லணியுங் காமர் பொழுதே"

—ஐங்குறுநூறு 345

"மாக்கொடி அதிரல் பூவொடு பாதிரித்
தூத்தகட்டு எதிர்மலர் வேய்ந்த கூந்தல்
மணங்கமழ் நாற்றம் மரீஇ யாமிவள்
சுணங்கணி ஆகம் அடைய முயங்கி"

—நற்றிணை 52

"முகைவீ அதிரல் மோட்டுமணல் எக்கர்
நௌவி நோன்குளம்பு அழுந்தென எள்ளி
உருக்குறு கொள்கலங் கடுப்ப விருப்புறத்
தெண்ணீர்க் குமிழி இழிதருந்
தண்ணீர் தகைஇ நின்ற பொழுதே"

—நற்றிணை 124

"உலகம் படைத்த காலைத் தலைவ
மறந்தனர் கொல்லோ சிறந்திசி னோரே
முதிரா வேனில் எதிரிய அதிரல்
பராரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர்"

—நற்றிணை 337

(முற்றாத இளவேனிற் காலத்தை எதிர்
நோக்கிய காட்டு மல்லிகை மலர்.)

## விளக்கங்க்ள்

இந்த அதிரல் கொடியின் பூ குயில்வாய் போல விடியற் காலையில் பூப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் கூரிய மொட்டு, காட்டுப் பூனையின் கூரிய பல்லைப்போல் இருந்த தாகக் கூறியதையும் காண்லாம். கோங்கு மாலையில் பூப்பதாகவும், அதிரல் காலையில் பூப்பதாகவும் கூறப் பட்டிருப்பதால் செடிகள் எக்காலத்தில் பூக்கின்றன என் பதையும் சங்கப் புலவர்கள் நுணுக்கமாகத் தெரிந்து கூறினர் என்பது தெளிவாகின்றது.

அதிரலின் பூவ்வ
வைகுபுலர் அலரி
வைகறை அரும்பு

என்று அகநானூறு கூறுவதையும் காணலாம்.

இது வெண்மையும் நறுமணமும் உடையதாதலால் மகளிரும், ஆடவரும் தலையில் மல்லிகையைப் போலச் சூட்டிக்கொண்டனர். அதனால் சிலப்பதிகார உரையில் 'மோசி மல்லிகை'யைக் காட்டு மல்லிகை என்றழைத் தனர்.

சிலப்பதிகாரப் புறஞ்சேரி யிறுத்த காதையில் பல அழகிய மரஞ் செடிகள் கூறப்பட்டுள்ளன.

''குரவமும் வகுளமுங் கோங்கமும் வேங்கையும்
அரவமும் நாகமுந் திலகமு மருதமும்
சேடலுஞ் செருந்தியுஞ் செண்பக வோங்கலும்
பாடலந் தன்னொடு பன்மலர் விரிந்து
குருகும் தளவமுங் கொழுங்கொடி முசுண்டையும்
விரிமலர் அதிரலும் வெண்கூ தாளமும்
குடசமும் வெதிரமும் கொழுங்கொடிப் பகன்றையும்
பிடவமு மயிலையும் பிணங்கரின் மணந்த''

—சிலம்பு 13. 151-158

என்று கூறியுள்ள வரிகளில் 'விரிமலர் அதிரல்' என்ற விளக்கம் பொருத்தமானது.

பெரிய வெள்ளை மலரை உடையது என்று செடி நூலாரீ கூறியுள்ளனர் (very large showy white flower).

நறுமணமுடைய பூவானதால் காட்டு மல்லிகை என்றனர் அடியார்க்கு நல்லார்.

'புனலி பூத்து அசைகின்ற கொடியினையுடைய
சிறு தூறுகள்'

என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். புனலிக் கொடி என்பதிலும் பொருத்தம் உள்ளது. (Dillenia Indica is very common in the banks of streams and indicate moist places).

அதிரல், புனல் இருக்கும் இடத்தையே காட்டியதாலும் புனலிக்கொடி என்றழைக்கப்பட்டது. இதில் ஒருவகை மர மாகவும் வளரும் அதன் காய்களைக் காட்டில் வாழும் யானைகள் மிகவும் விரும்பி உண்ணும். பழங்குடி மக்கள் இதன் கனிகளைப் புளியாகப் பயன்படுத்துவர்.

இம்மரம் அடர்த்தியாக வளரும். இம் மரத்தைக் களை யெடுப்பது மிகவும் கடினமாகும். இம்மரத்தை வெட்டினால் பல தூறுகள் விடும். அதனால்தான் வின்சுலோ அகராதியில் 'அடித்தூறு' என்று அழைத்தார்.

அடியார்க்கு நல்லார் உரையில் 'சிறு தூறுகள்' என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. (It is useless to gi:dle it and if cut down sends out numerous coppice shoots of great strength) அதனால்தான் சிறுதூறுகள் என்று அழைக்கப்பட்டது.

அதிரலை (Dillenia Indica) என்று அறிவியலார் அழைப்பர்.

# 14

## சூல் யானை உண்ட
# பெரு மூங்கில் முளை

யானை காடுகளில் விரும்பித் தின்பது மூங்கிலாகும். இதைப் பற்றிச் சங்க நூல்கள் கூறியுள்ளன.

"...........................சோலை
முளைமேய் பெருங்களிறு வழங்கு மலை"

—அகம் 148

"முளைவளர் முதல மூங்கில் முருக்கிக்
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை"

—அகம் 218

"குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே"

—குறுந்தொகை 179

மேற்காட்டிய பாடல்களில் யானை மூங்கிலை யும் அதன் முளையையும் தின்பதைக் கூறியுள்ளதைக் காணலாம்.

ஆனால் நற்றிணையில் மட்டும் ஒரு பாடலில் ஒரு புதிய செய்தி கூறப்பட்டுள்ளது.

"வழுவப் பிண்டம் நாப்பண் ஏமுற்று
இருவெதிர் ஈன்ற ஏற்றிலைக் கொழுமுளை
சூன்முதிர் மடப்பிடி நாண்மேயல் ஆரும்
மலைகெழு நாடன் கேண்மை பலவின்"

— நற்றிணை 116

பெரிய மூங்கில் ஈன்ற கொழுமுளையைத் தின்றதால் பெண் யானையின் கருப்பம் அழிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. கருப்பம் வழுவியதாகக் கூறிய செய்தி ஆராய்தற்குரியது என்று கழகம் வெளியிட்ட எனது 'சங்க நூல்களில் விலங்கின விளக்கம்' என்ற நூலில் எழுதியிருந்தேன். ஆனால் இப்பொழுதுதான் நற்றிணை கூறும் செய்தி அரிய அறிவியற் செய்தியென்று தெரிந்து கொண்டேன்.

இயற்கையைப்பற்றி (Nature Study) இந்தியா முழுவதும் நன்கு ஆராய்ந்து சிறந்த நாளேடுகளில் கட்டுரைகள் எழுதி வரும் பேரறிஞர் எம். கிருஷ்ணன் Sunday Statesman (மே 10, 1981)என்ற நாளேட்டில் இந்தச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்:

> The herbivorous do not seem to revel in this verdant vegetative resurgence waiting a while before they graze or browse it, til l the blades of the up-and-coming grasses are unfurled and the leaves are mature and have lost their tender translucency. Perhaps some irritant or poisonous principle in the new sprouts inhibits the animals- it is known that in bamboos and some grasses, the fresh growth is poisonous)

என்று ஒரு சிறந்த இயற்கைநூற் பேரறிஞர் கண்டுபிடித்துக் கூறிய ஒரு செய்தியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்

ஒரு சங்கப்புலவன் கண்டு கூறியது அறிவியல் இல்லையா? வியப்பைத் தரவில்லையா!

மூங்கிலின் புதிய முளை, வறட்சிக் காலத்திற்குப்பின் மழைபெய்தவுடன் தோன்றும் முளை நஞ்சுடையது என்று அறிஞர் கிருஷ்ணன் கண்டறிந்து கூறியுள்ளார். இது மிக அரிய அறிவியல் செய்தி, இன்று கூறிய அந்தச் செய்தியையும் அன்று சங்கப்புலவன் ஒருவன் பாடிக் கூறிவிட்டானே!

அறிஞர் கிருஷ்ணன் கூறிய செய்தியைத்தான் — வறட்சிக் காலத்திற்குப் பிறகு மழைக் காலத்தில் தோன்றிய முளையை 'ஏற்றிலைக் கொழு முளை' (Spikes of grass) என்று சங்கப்புலவன் கூறினான்.

அறிஞர் கிருஷ்ணன் அவர்கள் 'இந்து' (Hindu) நாளிதழில் செங்கால் நாரையைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன"

என்று சத்தி முத்தப்புலவர் பிற்காலத்தில் பாடிய பாட்டின் வரிகளில் கூறப்பட்ட இயற்கை அறிவியல் பொருத்தத்தையும், செங்கால் நாரையின் அலகு பிளந்த படத்தையும் பழம்படுபனையின் கிழங்கு பிளந்த தோற்றத்தையும் நிழற்படம் பிடித்து ஒப்பிட்டு அஃது ஓர் ஒப்பற்ற உவமை என்று கூறியுள்ளார். இந்த உவமையின் உண்மையையும் பொருத்தத்தையும் சிறப்பையும் முன்னரே நான் நேரில் உணர்ந்தேன். ஆனால் படங்கள் கிடைக்கவில்லை.

இவ்வளவு சிறந்த தமிழ் அறிஞன் காடுகளிலெல்லாம் சென்று இயற்கையில் விலங்குகள், பறவைகள், ஊர்வன

மற்றும் பல உயிரிகளை ஆராய்ந்து, உள்ளதை உள்ளவாறே அறிவியல் கண்ணோட்டத்துடன் எழுதிய செய்திகள் சங்க நூல் செய்திகளுடன் ஒத்து இருப்பது மிக அரியதாகும்.

'இருவெதிர்' என்பது பெருமூங்கிலாகும். இதை Bambusa Arunoinanceae) என்று அறிவியலில் அழைப்பர். 'வெதிர்' என்ற சொல் சங்க நூல்களில் பெருமூங்கிலையும் பெரிய துளையுடைய மூங்கிலையும் குறித்ததாகும். பெண் யானை மூங்கிலின் இள முளையைத் தின்று கருப்பம் விழுவிய செய்தி அரிய அறிவியல் இயற்கைச் செய்தியாகும்.

இவ்வாறாகச் சங்க நூல்களில் காணும் அறிவியல் இயற்கைச் செய்திகளை (Scientific Nature study) ஆராய்ந்து வெளிப்படுத்துவது தமிழர்களின் கடமையாகும். தமிழையும், அறிவியலையும் இணைத்துத்தான் தமிழ்மொழியை வளர்க்கவேண்டும். இல்லாவிட்டால் பாரதியின் பாட்டுப்படி 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்.' ஆதலின் அறிவியல் தமிழைக் காப்பாற்றுவோம், போற்றுவோம்.

# 15

# நாவலும் நாகமும்

சங்க இலக்கியத்தில் நாவல் மரம் ஒருசில பாடல்களிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எளிதில் காணப்பட்ட மரமானதால் நாவல் மரத்தைப்பற்றிய செய்திகள் குறைவாகக் காணப்படுகின்றன. நாவல் மரத்தைத் தற்காலத்தில் நாக மரமென்றும் தவறுதலாக அழைக்கின்றனர். சங்க காலத்தில் வழங்கிய நாக மரம் இதுவன்று.

"அகலிலை நாவல் உண்டுறை உதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
தாழை வேரளை வீழ்துணைக் கிடூஉம்"

— அகம். 380

"பொங்குதிரை பொருக வார்மண லடைகரைப்
புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி"

— நற்றிணை 35

"மட்டறல் நல்யாற்று எக்க ரேறிக்
கருங்கனி நாவ லிருந்துகொய் துண்ணும்"

—புறம். 177

"காலி னுதிர்ந்தன கருங்கனி நாவல்"

— மலைபடுகடாம் 135 வரி

"தீங்கனி நாவ லோங்குமிடத் தீவிடை"

— மணிமேகலை 11—17

நாவல் மரம் நெய்தல் திணையில் காணப்பட்ட மரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. நாவல் மரம் ஆற்றங் கரையோரத்திலும் கடற்கரை அருகிலும் காணப்பட்ட தாகச் சங்க நூல்கள் கூறுவது பெரிதும் உண்மையே.

நாவலின் இலை அகன்றதென்று கூறியிருக்கின்றனர். நாவலின் கனி இனிமையான கனி, ''பொதிப்புற்ற கனி'' என்றும் கூறப்பட்டுள்ளது. காற்றடித்து இதன் கனிகள் எளிதில் விழும் தன்மையுடையன என்பதை மலைபடுகடாம் உணர்த்தும் குறிப்பாகிறது.

நாவலின் வடமொழிப் பெயரால் ஒரு தீவும், ஒருவகைப் பொன்னும் அழைக்கப்பட்டதைச் சிலப்பதிகாரமும் மணி மேகலையும் கூறுகின்றன. பத்துத் துவரில் ஒன்றாக நாவலைக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

'நாகம்' என்றொரு மரத்தைப்பற்றியும் சங்க நூல்களில் செய்திகள் அருகிக் காணப்படுகின்றன. நாக மரம் தென் னிந்தியக் குன்றுகளிலும் மேற்குத் தொடர்ச்சி மலையில் பசுங்காடுகளிலும் காணப்படுவதாகச் செடிநூலார் கூறுவர்.

''போகிய நாகப் போக்கருங் கவலை''
— நற்றிணை 82

''நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்''
— சிறுபாணாற்றுப்படை 88 வரி

''நாக நறுமல ருதிர யூகமொடு''
— திருமுருகாற்றுப்படை 302

''... ... மேன்மலை முற்றித்
தனிபொழி சாரற் றதர்மலர் தாஅய்
ஒளிதிக ழுத்தி யுருகெழு நாகம்''
— பரிபாடல் 12—4

"நாகநீண் மணிவரை நறுமலர் பலவிரைஇக்
காமரு வையை கடுகின்றே கூடல்"

—பரிபாடல் திரட்டு 203

"கொழுங்காந்தண் மலர் நாகத்துத்"

—பொருநராற்றுப்படை 2?9

நற்றிணையிலும், சிறுபாணாற்றுப்படையிலும், திருமுருகாற்றுப் படையிலும், பரிபாடலிலும் நாகமரம் மலைப் பகுதியிலும் மலைச் சாரலிலும் காணப்பட்டதாகவும்—அடர்ந்து காணப்பட்டதாகவும் கூறியிருப்பது செடி நூற்படி பொருத்தமான செய்தியே.

"போகிய நாகப் போக்கருங் கவலை" என்ற நற்றிணைப் பாடல் வரியில் உயர்ந்த நாக மரங்கள் அடர்ந்து, உள்ளே போக முடியாதபடி இருந்ததாகக் கவர்த்த வழியானது விளக்கப்படுகின்றது. சிறுபாணாற்றுப்படையும் 'நாக நெடு வழி' என்று நாக மரங்கள் நெடிய வழியாகக் காணும்படி நிறைந்து காணப்பட்டதைக் குறிக்கின்றது.

காடுகளிலே இயற்கையில் நாக மரங்கள் ஒரே இனமாக, சூழலாக நிறைந்து காணப்படுவதைச் செடிநூலார் கண்டு கூறியிருக்கின்றனர்.

"In the evergreen forests of Madras State, Messua Ferrea often forms consociations which may cover a considerable area"

—Manual of Forest Indian Botany - N. L. Bor.

இதையே நற்றிணைப் பாடல் கூறுவது வியப்பை அளிக்கின்றது.

"............................நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த"
—சிறுபாணாற்றுப்படை 107—9

'நாக மரத்தின் செறிந்த கொம்புகளிடையே நறிய பூக்கள் தோன்றும் மலைநாடு' என்று சிறுபாணாற்றுப் படை கூறுவதைக் கவனிக்க வேண்டும். நாகமரத்தின் ஒள்ளிய இலைகளூடே நறுமண மிக்க வெள்ளிய பூக்கள் தோன்றவது மிக அழகான காட்சி என்று செடிநூலார் கூறுவர்.

நாக மரம் மிக அழகான மரம் என்ற கருத்தைப் பழந் தமிழர் கொண்டிருந்தனரெனத் தெரிகின்றது. "நாகுமுதிர் நாகம்" என்று-இளமை மிகுந்த நாகம் என்று விளக்கப்பட்டிருப்பதைக் கவனித்தால் 'நாகம்' என்ற பெயரே 'நாகு' என்ற இளமையைக் குறிக்கும் சொல்லிலிருந்து தோன்றிய தாகத் தெரிகின்றது.

நாகத்தின் பூவை 'நறுவீ', நறும் போது' என்று அழைப் பதிலிருந்து நாகத்தின் நறுமண மிக்க பூவைப்பற்றி நன்கு உணர்ந்திருந்தனரென்பது தெளிவாகின்றது.

சிலப்பதிகார உரையில் கூறப்பட்ட வாசமூட்டும் பொருட்களில் 'நாகப்பூ' ஒன்றாகும். மாதவி பயன்படுத்திய ஐந்து விரைகளில் ஒன்று 'நாகனம்' என்று குறிக்கப் பட்டுள்ளது. இது நாகப் பூவேயாகும்.

"நனை சினையன நகுவிரையன நலனுடைய நாகம்" என்று நீலகேசிப் பாடலில் நாக மரம் நகு விரையை உடையது என்பது உணர்த்தப்படுகின்றது. நாகத்தின் பூவைப் பிற நறுமண மிக்க செடிகளோடு சேர்த்துக் கூறு வதுண்டு.

"நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்"

"நாக நாறு நரந்தை நிரைந்தன"

—சிலம்பு. வேட்டுவ வரி 2

"நல்லிணர் நாக நறவஞ் சுரபுன்னை
எல்லாங் கமழு மிருசார் கரைகவிழத்"

—பரிபாடல் 12

நாகம் நறுமண மிக்கதால் பிற நறுமண மரங்களோடு சேர்த்துக் கூறினர். "நீணாக நறுந்தண்டார் தயங்கப் பாய்ந் தருளினாற்" என்று கலித்தொகைப் பாடல் (3) வரியில் நாக மலரால் கட்டின மாலையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

"......... ......... ......... சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழி"

—சிறுபாண். 87-88

நாகத்தின் நறுமலரில் தேனைத்தேடிச் சுரும்பு உண்ண வந்ததாகக் கூறியிருப்பது உண்மையான செய்தியே. நாக மரம் பூக்கும் காலத்தில் ஏராளமான தேனீக்கள் நாகப் பூக்களை மொய்க்கும் என்று செடி நூலார் கூறுவர்.

நாக மரத்தைப் புத்தர்கள் தங்கள் பள்ளிகளில் அழகுக் காகப் போற்றி வளர்த்தனர்.

வடமொழி இலக்கியத்தில் 'நாக கேசரம்' என்று அழைக்கப்படுகின்றது.

கன்னடத்தில் 'நாக சம்பங்கி' என்றழைக்கின்றனர்.

செடி நூலார் நாக மரத்தை "Messua Ferrea" என்றழைப்பர்.

## சுரபுன்னை நாகமரமன்று

நாகத்திற்குத் தமிழிலக்கியத்தில் உரையாசிரியர்கள் 'சுரபுன்னை' என்று பொருளெழுதினர். இது தவறு என்று தெரிகின்றது. 'வழை' என்றொரு மரத்திற்கும் சுரபுன்னை என்று சில உரையாசிரியர்கள் பொருளெழுதினர். நிகண்டு களிலும் குழப்பத்தைக் காண்கிறோம்.

நாகம் வேறு, சுரபுன்னை வேறு என்பதைப் பரிபாடலே "நல்லிணர் நாக நறவஞ் சுரபுன்னை" என்று கூறுமிடத்தில் தெளிவாகப் பிரித்துக் காட்டியிருக்கின்றது. ஆதலால் சுர புன்னை வேறு, நாகம் வேறு.

நாகத்தைச் சுரபுன்னை என்று மயங்கிக் கூறக் காரணம் உண்டு. நாக மரத்தின் இலை புன்னையின் இலையைப் போலவே பளபளப்பான பச்சையாகவும் இலையில் நரம்புகள் ஒரே முறையிலும் அமைந்திருக்கும். இதைச் செடி நூலாரும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றனர். இத் தகைய இலையைக் கண்டால் அது நாக மரத்தின் இலை அல்லது புன்னையின் இலை எனக் கூறலாமென்பர்.

புன்னையின் பூவைப்போலவே நாக மரத்தின் பூ வெண் மையரனது. பூவின் நடுவில் மஞ்சளாக மகரந்தத் தூள்கள் நிறைந்து காணப்படும். இந்த ஒப்புமைகளால் நாக மரத்தைப் புன்னை மரத்தோடு இணைத்துச் 'சுரபுன்னை' என்று மயங்கிப் பொருள் கூறினரெனத் தெளிவாகின்றது. செடி நூலில் நாகமும் புன்னையும் ஒரே இனத்தைச் (Guttiferae) சேர்ந்தனவாகக் கருதப்படுதல் இத்தகைய ஒப்புமைகள் காரணமாகவே என்பதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

சுர புன்னை என்பது எந்த மரம் என்ற கேள்வி எழலாம். சுரபுன்னை மரம் புன்னை மரத்தின் சாதியைச் சேர்ந்த மற்றொரு மரம். புன்னைமரம் கடற்கரைப் பகுதி களில் காணப்படுவது. ஆனால் சுரபுன்னை இலைப் பசுங்காடுகளில் (EverGreen Climax) காணப்படுவது.

புன்னை மரம், சுரபுன்னையைப் போன்று நீண்டு வளராது.

அராபிய வணிகர் சுரபுன்னையின் நீண்ட அடி மரத்தைக் கப்பல்களுக்கு நடுமரமாகப் (Mast) பயன்படுத்தினர்.

வணிகவழக்கில் சுரபுன்னை மரம் 'பூண் மரம்' (The poon tree ot the western Coast) என்றழைக்கப்பட்டது. இம்மரம், சில சமயங்களில் 150 அடி உயரமாகவும், 15அடி அகலமாகவும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வளருமாம்.

சுரத்தில் அஃதாவது காடுகளில் காணப்பட்ட புன்னை மரத்திலிருந்து பிரித்துணரச் சுரபுன்னை என்று பெயரிட்டழைத்த பழந்தமிழருடைய நுண்மாணுழை புலத்தைப் போற்ற வேண்டும்.

செடி நூலார் புன்னையை Colophyllum Inophyllum என்பர். சுரபுன்னையை அதே பெயரில் சிறிது மாற்றி Colophyllum elatum என்பர். இரண்டும் நெருங்கிய ஒரே இனமாகும்.

புன்னைக்குப் பொருளாகப் புன்னாகம் என்று தேவாரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. புன்னைக்கும் நாகத்துக்கும் உள்ள ஒப்புமை காரணமாகவே புன்னையைப் புல்லியநாகம் என்ற பொருள் படும்படி "புன்னாகம்" என்று கூறினர். அல்லது புன்னையும் நாகமும் சேர்ந்து இணைந்த பெயரைச் சூட்டினரென்றும் கொள்ளலாம்.

# சிறு பாணாற்றுப்படை ஓர் ஆய்வு

## காலம்

சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக்கோடன் ஒய்மா நாட்டை ஆண்டபோது 'சேரனின் தலைநகரமான வஞ்சியும் வறிதே, தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மதுரையும் வறிதே' சோழரின் தலைநகரமான உறையூரும் வறிதே யென்று நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ள தைக் கவனிக்க வேண்டும். இவ்வாறு தமிழ் கூறிய நல்லுலகத்தில் மூன்று முடியுடை மன்னரும் ஒரே காலத்தில் சீரிழந்த நிலைமை யைச் சிறுபாணாற்றுப்படை கூறுவதைக் காணலாம்.

இந்த நிலைமை கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கிடையே இருந்த களப்பிரர் ஆட்சிக் காலமாகலாம். ஆதலின் நல்லியக் கோடன் என்ற குறுநில மன்னன் ஆண்ட காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டுவரை இடைப்பட்ட காலமாகலாம்.

## நாடு

"தொன்மா விலங்கை கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்னருள்ளும்"

ஓவியர் பெருமகனாக, பல்லியக்கோடியர் புரவலனாக நல்லியக்கோடனைப் புலவர் நத்தத்தனார் புகழ்ந்திருப் பதைக் கவனிக்க வேண்டும்.

பழையதாகிய பெருமையினையுடைய இலங்கையின் பெயரைப் பெற்ற 'மாவிலங்கை' என்ற நாட்டை நல்லியக் கோடன் ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

நல்லியக்கோடன் இலங்கையிலிருந்து வந்து இடைக்கழி நாட்டை ஆண்ட நாகர் பரம்பரையினன் என்பது தெரிய வருகிறது. இலங்கையில் இருந்த நாகப்பரம்பரை குடிகளில் 'ஓவியர் என்ற குடி இருந்துள்ளது. பல்லியக் கோடியர் புரவலனாக இருந்த நல்லியக்கோடனும், பல்லியக் கோடிய ராக இலங்கை யிலிருந்த குடியின் வழியாகத் தோன்றிய வனாவான்.

## ஈழநாடு

யாழ்ப்பாணம் என்ற பெயர் பண்டைக் காலத்தில் யாழ் இசைக்கும் பாணர் சிறந்து வாழ்ந்த இடமாக விளங்கியதால் வந்த பெயராகும். அகநானூறு போன்ற சங்க நூல்களில் இலங்கை என்ற பெயர் காணப்படவில்லை. ஈழம் என்ற பெயரே இலங்கைக்கு வழங்கினது 'ஈழத்து பூதந்தேவனார்' என்ற பெயரிலிருந்து தெரிகின்றது.

இலங்கை என்ற பெயர் சங்க நூல்களில் சிறு பாணாற்றுப்படையில்தான் முதலில் வருகின்றது. அக நானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்கள் இயற்றிய பின்னர்தான் சிறுபாணாற்றுப்படை இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. மூவேந்தர்களைப்பற்றிக் குறிப்பிடாததாலும், மூவேந்தர்களின் தலை நகரங்களும் வறிதே என்று கூறிய தாலும் சிறுபாணாற்றுப்படை சங்க காலத்தின் பிந்திய பகுதியில் தோன்றியதாகத் தெரிகின்றது.

இலங்கை என்ற பெயர் சங்க காலத்திற்குப் பிந்திக் களப்பிரர் காலத்தில் இலங்கைத் தீவிற்குத் தமிழில் வழங்கினதாகத் தெரிகின்றது.

## இயற்கை

மரவிடை ஒய்மா நாட்டுப் பாலை நிலத்தையும், மருத நிலத்தையும், அதைவிட முக்கியமாக நெய்தல் நிலத்தையும் நல்லூர் நத்தத்தனார் வர்ணித்துள்ளார்.

சேரநாட்டைப்பற்றிக் கூறும்போது 'பைங்கறி நிவந்த பலவின் நிழல்' என்று கூறியுள்ளார். இன்றும் பலா மரத்தில் மிளகுக் கொடியை ஏற்றுவதை வீட்டுத் தோட்டங்களில் —கேரளத்தில் காணலாம்.

இடைக்கழி நாட்டில் இயற்கைத் தோற்றம், கேரள நாட்டின் கழிகளின் இயற்கைத் தோற்றத்தை நினைவுறுத்துகிறது.

## நீர்க் கடம்பு

''நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணையார் கோதை
ஓவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்''

என்ற வர்ணனை இயற்கை ஓவியமாகும். நீர்க்கடம்பின் பூங்கொத்து நீண்டு தொங்கும் நீர்க்கடம்பின் பூவிதழ்கள் நன்கு புலப்படாதபடி மிகவும் சிறியவையாகும். ஆனால் பூவில் உள்ள மகரந்தத் தூள்கள் கடும் சிவப்பாகத் தோன்றும். பூக்கள் வாடும்போது சிவந்த மகரந்தத் தூள்கள் நீரில் விழுந்து இருந்ததை, ஓவியம் போன்று இருந்ததாகக் கூறியது அரியதோர் உவமையாகும்.

இவ்வாறு நீர்க் கடம்பின் சிவந்த மகரந்தத் தூள்கள் நீரில் வீழ்ந்து ஓவியம் போல் இருப்பதை நானே நேரில் கண்டிருக்கிறேன். புதுவையில் இருந்து விழுப்புரம் செல்லும் சாலை ஓரத்தில் நெல்லித் தோப்புக்கு அடுத்துள்ள கால் வாயில் இந்தக் காட்சியைக் கண்டிருக்கின்றேன்.

## இயற்கைக் காட்சி

"அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவுந்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழா அலவு
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்"

என்று எயில் பட்டினத்துக் கானலை வர்ணித்தது இயற்கையில் சிறப்பானதாகும். 'தாழை, அன்னம் போல் பூத்தது' என்று கூறியது உருவிலும் நிறத்திலும் சிறந்த உவமையாகும்.

செருந்தியின் பூ பொன்னிறமாகப் பூப்பதையும், முண்டகம் நீலமணி போலப் பூப்பதையும், புன்னை வெண் முத்துப்போலப் பூப்பதையும் கூறிய திறம் போற்றத்தக்கது.

## நீலச் சேவல்

"முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச்செஞ் சேவல்
மதிசேர் அரவின் மானத் தோன்றும்"

என்று மருத நிலத்தை நத்தத்தனார் வர்ணித்துள்ளார். 'நீலச் சேவல் என்ற பறவையைச் சிறுபாணாற்றுப்படைக்கு முந்திய நூலான ஐங்குறுநூறு கூறியுள்ளது. 'நீருறைக் கோழி நீலச் சேவல்' என்று ஐங்குறுநூறு கூறியுள்ளது.

இந்த நீலச்சேவலை நான் கேரளத்தில் 1968 ஆம் ஆண்டு கண்டேன். கண்டு களிப்புற்றேன். சிறுபாணாற்றுப் படையில் நீலச்செஞ் சேவலைக் கண்டு இனங்கண்டதைப் பற்றி மகிழ்ந்தேன்.

இங்குக் கூறப்பட்ட அரிதான நீர்ப்பறவை மிக அழகிய தாகும். உடல் முழுவதும் கருநீல நிறமாகும். கண்கள் சிவப் பாகவும் இருப்பதைக் கண்டேன். இந்தப் பறவைக்கு மிக நீண்ட விரல்கள் உண்டு. ஆனால், மெல்லிய விரல்கள் தாமரை, அல்லி இலைகளில் மெல்லிய கால்களை வைத்து ஆட்டாது அமுங்காது நடந்து செல்லும் பறவையாகும் இது.

இந்த அரிய பறவையைத்தான் இடைக்கழி நாட்டில் கண்டு நத்தத்தனார் பாடினார். ஆனால், இக்காலத்தில் நான் இடைக்கழி நாட்டில் இந்தப் பறவையைத் தேடியும் காண முடியவில்லை.

இடைக்கழி நாடு மக்கள் குடியேற்றத்தால் மாறி விட்டது; நாடுகள் அழிக்கப்பட்டன. கானகங்கள் மாற்றப் பட்டன. நீலச்சேவலை ஆங்கிலத்தில் Blue moor hen என்று அழைப்பர்.

## இந்திரகோபப் பூச்சி

கார்காலமான மழைக்காலத்தில் இந்திர கோபப் பூச்சி ஈரமான — மேட்டுப்பாங்கான புல் வெளியில் ஊர்வதை நானே பார்த்திருக்கிறேன். இந்திர கோபப்பூச்சிகளைப் பிடித்து விளையாடியிருக்கிறேன்.

அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலிய முந்திய சங்ககால நூல்களில் இந்திரகோபப் பூச்சியை 'மூதாய்'* என்ற தூய தமிழ்ச் சொல்லால் புலவர்கள் அழைத்துள்ளனர்.

* 'சங்க நூல்களில் விந்தைப் பூச்சி' எனும் தனி நூல் எழுதியுள்ளேன். (சேகர் பதிப்பகம்)

அவற்றுக்குப் பிந்திய நூலான சிறுபாணாற்றுப் படையில்தான் 'கோபம்' என்ற வடமொழிப் பெயர் வழங்கி யுள்ளது.

கொல்லை என்ற சொல்லுடன் சேர்ந்து ஒலி நயம் பெறு வதற்காகக் 'கோபம்' என்ற வட சொல்லைப் பயன்படுத்தி, 'மூதாய்' என்ற சங்ககாலப் பெயரை நத்தத்தனார் விடுத்தார் என்று கருதலாம்.

சங்ககால நூல்களுக்குப் பிறகு இந்திரகோபம் என்ற வடமொழிப் பெயரே கம்பராமாயணம் வரை வழங்க காண்கிறோம். இந்தப் பூச்சியைப்பற்றி நாலாயிர திவ்வியப் பிரபந்த ஈடுகளில் 'பட்டுப் பூச்சி' என்ற பேச்சு வழக்கு வருகின்றது. நான் சிறுவனாயிருந்தபோது 'பட்டுப்பூச்சி' என்றுதான் இந்தப் பூச்சியை அழைப்போம்.

## தாவரங்கள்

காந்தள் கைவிரல் போல் பூப்பது பற்றி எனது 'சங்க இலக்கியத்தில் செடி, கொடி விளக்கம்' என்ற நூலிலேயே அட்டைப்படத்தில் சிறப்பான பொருத்தத்தைக் காட்டி யுள்ளேன்.

"பைந்நனை அவரை பவழங் கோப்பவுங்
கருநனைக் காயா கணமயில விழவுங்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங்
கொள்ளவுஞ்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவுங்
கொல்லை நெடுவழி கோபம் ஊரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவின்"

என்ற முல்லை நில வர்ணனை இயற்கைக்கும் அறிவியலுக்கும் முற்றிலும் ஒத்ததாகும். அவரை, இக்காலத்தில் வீடுகளில், ஏறும் கொடியாக வளர்க்கப்படும் அவரைக் கொடியன்று. சங்ககாலத்தில் அவரை என்பது மொச்சைச் செடியாகும். இதற்குச் சிவந்த பூக்கள் உண்டு.

## காயா மலர்

காயா என்பது ஒரு குறுமரம். முதலில் செடி போல் வளரும். இதற்கு அழகிய நீல மலர் உண்டு. கண்ணனுடைய நிறத்தை இதன் பூவிற்கு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. இன்று சென்னை யடுத்துள்ள மறைமலை நகர் என்று அமைந்துவரும் நகருக்கருகில் முன்பு இருந்த குறுங்காடுகளில் இதை நான் பார்த்திருக்கின்றேன்.

'காசா' என்று பேச்சு வழக்கில் இதை அழைப்பர். காசாம்பூ என்று நாட்டு மக்கள் பெண்களுக்குப் பெயர் சூட்டுவதைக் காணலாம்.

நீல காயா மலரை நீல மயிலின் நிறத்தைக் குறிப்பிட்டு ஒப்பிட்டது இயற்கையில் பொருத்தமே. முசுண்டை என்பது ஒரு கொடியாகும். இப்பொழுது இந்தக் கொடியைப் பூங்காக்களிலும், வீடுகளிலும் இதன் அழகிய பூவிற்காக வளர்க்கின்றனர்.

இது பூத்துப் பூவிதழ்கள் விழுந்த பின் பெரியதாக, உறுதியான புறவிதழ்கள் ஒரு குவிந்த கூடைப் போலச் சிறிய கொட்டாங்கச்சியைப் போல இருக்கின்றன. காய்ந்து காணப்படும் இதன் புறவிதழுடைய பூக்களைச் சாயம் பூசி வீடுகளில் அழகுக்காகச் சுவரில் வைக்கும் பழக்கமும் உண்டு

**மரவிடை** (Fauna)

இடைக்கழி நாட்டில் 'ஆமான்' என்னும் காட்டெருமை இன்று இல்லாவிட்டாலும் சங்ககாலத்தில் இடைக்கழி நாட்டுக் காடுகளில் வாழ்ந்ததைக் கவனிக்க வேண்டும்.

சங்ககாலப் புலவர்கள் விலங்கையும், பறவையையும், மீனையும், செடி கொடி மரத்தையும் எந்தெந்த ஊரில் கண்டார்கள் என்று பாடல் பாடியுள்ளார்கள்.

இன்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இயற்கை அமைப்பு முற்றிலும் மாறிச் செயற்கை மலிந்து இருப்பதால் சங்ககாலப் புலவர்கள் கூறிய சிலபல இயற்கை உண்மைகள் இன்று இல்லாதிருக்காலம்.

ஆனால், சங்ககாலப் புலவர்கள் உண்மையான இயற்கை நிலைகளை, செய்திகளை உண்மையாகக் கூறியதை வைத்துக் கொண்டு சங்ககாலத்தில் இருந்த நில அமைப்பு, தட்பவெப்பநிலை, சுற்றுச்சார்பு நிலை (Ecology) என்று வாழ்ந்த மரவிடை, மாவிடைச் செய்திகள் (Flora & Fauna) மக்கள் வாழ்ந்த நிலை (Sociological life) போன்ற செய்திகளையும் ஆராய்ந்து உறுதியான முடிவுகளைக் காணமுடியும்.

ஆனால் அதற்குப் பல துறை அறிவு, முக்கியமாக இலக்கியத்துறை, அறிவியல் துறை அறிவு வேண்டும். சங்ககாலத்தில் தமிழகம் எது என்பதை நான் அறிமுகப் படுத்துவேன்.

**காடு ஆரம்பப் பாக்கம்**

நல்லியக்கோடனின் இடைக்கழி நாட்டில் அடர்ந்த காடுகள் இருந்ததற்குச் சான்று, 'காட்டுப்பக்கம்' என்னும்

ஊர், புதுவையிலிருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் இன்று உள்ளது.

காட்டுப்பாக்கம் என்ற ஊர் 'காடு ஆரம்பப் பாக்கம்' என்ற ஊரைக் குறித்த பெயராகும். ஊரையடுத்து காடுகள் இருந்தன.

சூழ்ந்து ஆராய்ந்தால் புதுச்சேரி மாநிலப் பகுதியும், கடலூர் நெய்வேலிப் பகுதிகளும் இடைக்கழிநாட்டில் இருந்தனவாகத் தெரிகிறது.

புதுவைப் பகுதியில் 1958 ஆம் ஆண்டுகூட இடைக்கழி நாட்டில் குழாய்க் கிணறுகளில் நீர் பீச்சி அடித்து மேலே வரும் நீரூற்றுக் கிணறுகளை நேரிலேயே கண்டுள்ளேன். இத்தகைய நீரூற்று நிலைகள் நெய்வேலிவரை இருப்பதை நிலவியலார் (Geologists) கூறியுள்ளனர்.

## ஆமான்

எயினர் வாழும் இருக்கையைக் கூறும்போது அவர்கள் ஆமானின் சுட்ட இறைச்சியைக் கொடுப்பார் என்று கூறப் பட்டுள்ளது. ஆமான் என்ற விலங்கு காட்டெருமை என்று இக்காலத்தில் அழைக்கப்படுகிறது. ஆனால் அஃது எருமை இனத்தைச் சேர்ந்ததன்று, பசுவினத்தைச் சேர்ந்தது என்பதை விலங்கு நூலார் விளக்கியுள்ளனர்.

சங்கப் புலவர்கள் ஆமான் என்று கூறியதும் அறிவிய லுக்கு முற்றிலும் பொருத்தமே. இக்காலத்தில் நீலகிரிக் காடுகளிலும், ஆனைமலைக் காடுகளிலும் காணப்படும் இந்தப் பெரிய மாடு போன்ற விலங்கைப் பிற்கால உரையா சிரியர்களும் 'ஆ போலும் ஆமா' என்று கூறியுள்ளனர்.

இந்த ஆமானை Indian Bison என்று விலங்கு நூலார் அழைப்பர். ஆனால், அது Bison என்பதும் அன்று.

Bison என்பது அமெரிக்காவில் மட்டும் காணப்படும் மாடு போன்ற விலங்காகும். எப்படிக் காட்டெருமையென்று தவறாகப் பெயர் வழங்கி விடுகிறார்களோ அதுபோலவே Indian Bison என்று விலங்கியலார் அழைத்ததும் வழக்கியல் தவறு.

ஆனால், சங்க நூல்களில் 'ஆமான்' என்று அழைத்தது இயற்கைக்கும் அறிவியலுக்கும் பொருத்தமான பெயராகும். ஏனென்றால் 'ஆமான்' ஆ போன்றது.

ஆமான் என்னும் சொல் சங்ககாலத்தில் வழங்கும் பெயரான மானைக் குறிப்பிடவில்லை. பொதுவாகக் காட்டு விலங்குகளில் புல்லை உண்டு வாழும் விலங்குகளைக் குறித்ததாகும்.

கேழமான் என்ற பேச்சு வழக்கு இக்காலத்தில் காட்டுப் பன்றியைப் போல எகிர்ப்பல்லுடைய மானைக் குறிக்கின்றது. சங்க காலத்தில் மா, மான் என்ற பெயர்கள் பொதுவாக விலங்குகளையே குறித்ததாகும்.

ஆமான் என்று சங்ககாலத்தில் அழைக்கப்பட்ட காட்டெருமை இடைக்கழி நாட்டில் காணப்பட்டதாகவும் அதன் இறைச்சியை உண்டதாகவும் நல்லூர் நத்தத்தனார் கூறியதால் சங்ககாலத்தில் இடைக்கழி நாட்டில் அடர்ந்த காடுகள் இருந்தன என்பதில் ஐயமில்லை.

மரக்காணத்துக்கு அருகில் அடர்ந்த காடுகள் இருந்தன. அதனால்தான் 'மரக்காணம்' என்ற பெயர் வந்தது. இந்த மரக்காணத்துக் காட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு முள்ளம்பன்றிகளையும் காட்டுப் பன்றிகளையும் சுட்டுக் கொன்றதை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவை இப்போது முற்றிலும் அழிந்துவிட்டன.

## பழைய நிலை

சங்க நூல்களுள் ஒவ்வொரு நூலையும் ஆராய்ந்தால்—அறிவியல், இயற்கைச் செய்திகளுடன் ஆராய்ந்தால் சங்க காலத் தமிழகத்தில் ஒய்மா நாடு மட்டும் இயற்கையாக எப்படியிருந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியும் என்று காட்டியுள்ளேன்.

ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த இயற்கையான தமிழகம் எப்படி இருந்தது என்பதற்குச் சங்க நூற் சான்றுகள் சங்கநூல்களில் உள்ளன. அதைக் கண்டுபிடித்துத் தெளிவுபடுத்துதற்குப் பல்துறை ஆய்வுகள் முக்கியமானவை.

தமிழாகிய அறிவு மட்டும் பயன் பெறாது. அறிவியல் அறிவும் இயற்கை இயல் அறிவும் (Nature Study) இன்றியமையாதனவாக வேண்டப்படும்.

# 17

# கொந்துகோலும் வேதினமும்

நான் களப்பணி ஆராய்ச்சி செய்வதற் காகப் புதுவை மாநிலத்தில் உள்ள மங்கலம் என்ற சிற்றூருக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு சிறிய ஐயனார் கோயிலைக் கண்டேன். கோயிற் பூசாரியைக் கேட்டபோது ஐயனார் பெயர் 'மிளகப்பன்' என்று கூறினார். பெயர் வந்த வரலாற்றையும் அவர் கூறினார்;

## மிளகய்யனார்

மங்கலம் என்ற ஊரிலே சுங்கச் சாவடி இருந்ததாம். ஒரு தடவை ஒரு வணிகன் மிளகுப்பொதிகளைப் புதுச்சேரியில் விற்பதற் காக எடுத்துச் சென்றபோது பிரெஞ்சு எல்லை யைக் கடப்பதற்கு முன் மங்கலம் என்ற ஊரி லிருந்த சுங்கச் சாவடியில் பொதிகளைக் காட்ட வேண்டுமாம்; மிளகுப்பொதி என்று கண்டால் சுங்கவரி மிகுதியாகக் கட்ட வேண்டுமாம்.

அதனால் மங்கலத்தில் இருந்த ஐயனாரை வேண்டிக் கொண்டதனால் சுங்கச்சாவடியில் மிளகுப் பொதிகள் உளுத்தம் பயற்றுப்

பொதிகளாக மாறித் தெரிந்ததாம். புதுவை சென்றதும் அவை மிளகாகிவிட்டதால் அதைப் பெரும் பணத்திற்கு விற்று ஐயனாருக்கு நன்றிக்கடனாக வணிகன் கோயில் கட்டினானாம். அதிலிருந்து மங்கலம் ஐயனாருக்கு 'மிளகப்பன்' என்ற பெயர் வந்ததாம்.

இத்தகைய சுங்கந் தவிர்த்த ஐயனாரைக் காரைக்கால் பகுதியில் திருமலை ராயன் பட்டினத்தில் பார்த்திருக்கிறேன். மங்கலத்தில் கூறிய மிளகுக் கதையே அங்கும் கூறப்படுகின்றது.

திண்டிவனம் புதுவை நெடுஞ்சாலையில் இருக்கும் கிளியனூரிலும் பழைய ஐயனார் கோயில் உள்ளது. அந்த ஐயனாரை மிளகய்யனார் என்றழைக்கின்றனர்.

பிரெஞ்சுக்காரர் காலத்தில் மிளகு வணிகத்திற்கு மிகுந்த சுங்கவரி கட்டவேண்டியிருந்தது. சங்க காலத்திலும் மிளகிற்கு மிகுந்த சுங்கவரி கட்டவேண்டியிருந்ததால் வணிகர்கள் கவர்த்த—கள்ள வழிகளில் எடுத்துச் சென்று சுங்க வரியைத் தவிர்த்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

## கொந்துகோல்

மங்கலத்தில் ஐயனார் உருவம் கருங்கல்லால் ஆனது. கோயில் சிறியது. அதனால் குனிந்து உள்ளே சென்று மங்கிய மாலைக்காலத்தில் பார்த்தபோது ஐயனார் கையில் உள்ள கருவி தெளிவாகத் தெரியவில்லை. பூசாரியைக் கேட்ட போது,

''ஐயனார் கையில் இருப்பது கொந்துகோலுங்க''

என்று அவர் சொன்னதும் நான் வியப்படைந்தேன்.

கொந்துகோல் என்ற வழக்கு செந்தமிழ் வழக்காகும். இன்றும் நாட்டு மக்கள் வாயில் வழங்குகின்றது. ஆனால்

படித்தவர்கள் வாயில் 'அங்குசம்' என்ற வடமொழிப்பெயர் தான் வழங்குகின்றது.

'தோட்டி' என்ற பெயர் இலக்கியத்தில் அங்குசத்திற்கு வழங்கும் தமிழ்ப் பெயராகும். ஆனால் கொந்துகோல் என்ற செந்தமிழ்ப் பேச்சு வழக்கை நிகண்டுகளிலோ, அகராதி களிலோ, இலக்கியத்திலோ காண முடியவில்லை.

ஐயனாருக்கு முன், கல்வில் ஆன யானை இருந்தது; ஆதலின் ஐயனார் கையில் கொந்துகோல் இருந்தது பொருத் தமானதே.

கோல் என்ற பெயர், விலங்குகளை அடக்கும் கருவி என்ற பொருளில், பேச்சுவழக்கில் கொந்துகோல் என்ற பெயரில் பயின்றுள்ளது.

**பழைய உரை**

புதுச்சேரி மாநிலத்தில் வழங்கும் இந்தப் பேச்சு வழக்கின் மரபைச் சங்ககாலத்தில் இருந்ததாகக் காண்பது வியப்பாக உள்ளது.

"சிறுகோல் உளையும் புரவி..............."

— புறம் 352

"சிறுகோற் சென்னி ஆரேற்று அன்ன"

— நற்றிணை 265

இந்த இரு பாடல்களிலும் 'சிறுகோல்' என்ற கோல் குதிரையைச் செலுத்த உதவும் முட்கோலைக் குறித்த தாகும்.

பழைய உரையாசிரியர்கள் கூறிய உரைப்படி பார்க்குங் கால் சிறுகோல் என்ற பெயர் குதிரைச் சாட்டையைக் குறிக்கும்.

> "நாயகரும், மணியக்காரரும், குதிரை மேலிருந்து கோல் தா என்றால் மத்தி கைக் கோலம், சுள்ளற் கோலாம்"

என்று இளம்பூரணர் கூறிய உரையைக் கவனிக்க வேண்டும். உரையாசிரியர் இளம்பூரணர் வாழ்ந்த காலத்தில் நாட்டுப்புற ஊர்களின் ஆட்சிப் பொறுப்பை நடத்தியவர்கள், நாயகர், மணியக்காரர் என்ற பட்டப் பெயர்களைத் தாங்கினர். பின்னர்ச் சில சாதியினர் அந்தப் பெயர்களைத் தங்களுடைய சாதிப் பெயர்களாக மாற்றினர். அப்படித்தான் கிராமணி என்ற சாதிப்பெயரும் நாயக்கர் என்ற சாதிப் பெயரும் வந்துள்ளன.

•

**பழைய மரபு**

கோல் என்ற சொல் கருவி, ஆயுதம் என்ற பொருளில் சங்க காலத்திலிருந்து இன்று மங்கலத்தில் வழங்கும் பேச்சு வழக்கு வரையில் பயின்றிருப்பதைப் பார்க்கின்றோம். இன்றும் செந்தமிழ்ப் புலமை பெறாத பொது மக்கள் வாயில் பழைய சொற்கள் வழங்குவதைக் காண்கிறோம்.

> அந்த வழக்குகள் நாளிதழ் வழக்குகளால் அழிந்து வருகின்றன. அவற்றைப் பாதுகாத்தால் தான் செந்தமிழ் தழைத்திடும். இல்லையென்றால் நலிந்து, நச்சுத் தன்மையுடைய நாளிதழ்த் தமிழ் தான் வளரும்.

> "குறுங்கோல் எறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல்"
>
> —புறம் 339

நெடுஞ் செவிக்குறுமுயலைக் கொல்ல வளைதடியைப் பயன் படுத்தியதாகப் புறநானூறு கூறுவதைக் கவனிக்க வேண்டும். இந்தக்கோல் ஆத்திரேலியாவில் மக்கள் விலங்கு

களைக் கொல்லப் பயன்படுத்திய Boomerang என்றழைக்கப்பட்ட, சென்று திரும்பிவரும் கோலை ஒத்தது என்பதையும் கவனிக்க வேண்டும்.

வேட்டையிலும் போரிலும் பயன்படுத்திய கருவிகளை, ஆயுதங்களைக் 'கோல்' எனறழைப்பது பண்டைத் தமிழிலக்கிய மரபாகும். மிகப் பண்டைக் காலத்தில் விலங்குகளை அடக்க மரத்தினால் ஆன கோலைத்தான் பயன்படுத்தியிருக்க முடியும்.

ஆதலின் கோல் என்ற பெயர் நீண்ட நெடுங்காலத்திய வரலாற்று மரபு உடையது என்பதை அறிய வேண்டும்.

## யானையைக் கொத்தும் கோல்

கொந்துகோல் என்ற வழக்கில் கொந்து என்ற சொல் கொந்துவது, கொத்துவது என்ற பொருளில் வழங்கினதாகும். வளைந்த கூரிய கருவியான அங்குசம், யானைக் காதைக் கொத்துவதற்காகவே அமைந்துள்ளது. ஆதலின் கொந்துகோல் என்று அங்குசத்தை அழைத்தது அரிய செந்தமிழ் வழக்காகும்.

சம்பந்தர் பாடிய திருவாரூர்ப் பதிகத்தில்,

"தந்தையர் போயினார் தாயாரும் போயினார்
தாரமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார்
கொண்டு போவார்"

என்று வரும் பாடல் வரிகளில் கொந்தவேல் என்ற பெயர்ச் சொல், கொந்துகோல் என்று நாட்டார்மக்களுடைய பெயர் வழக்கோடு ஒத்திருப்பதைக் காண்கிறோம்.

'கொந்து' என்ற சொல் தமிழிலக்கியத்தில் முதலில் சிறுபஞ்சமூலத்தில் 'தண்டித்தல்' என்ற பொருளில் வழங்கி யுள்ளது.

ஆதலின் யானையைத் தண்டிக்கும் கருவி கொந்து கோல் என்று நாட்டார் வாயில் வழங்கப்பட்டது, அருமை யான செந்தமிழ் வழக்காகும்.

## வேதினம்

'வேதினம்' என்ற பெயர் கருக்கரிவாளைக் குறித்த தாகும். இந்தப் பெயர் சங்க நூல்களில் ஒரே ஒரு நூலில் மட்டும் பயில்கின்றது.

"வேதின வெரிநின் ஓதி முது போத்து"

—குறுந்தொகை 140

சங்க இலக்கியத்திலும் பிற்கால இலக்கியத்திலும் ஒரே ஒரு பாட்டில் காணப்படும் இந்த அரிய இலக்கியப் பெயர் இன்று தமிழில் காணப்படவில்லை. ஆனால் மலையாள மொழியில் வழங்கும் "தெற்கம் பாட்டு"களில் இந்தச் சங்கப் பெயர் வழங்குவது வியப்பானதாகும்.

## மலையாள நாட்டுப் பாடல்

மலையாள மொழியில் 'வடக்கன் பாட்டுகள்' என்ற நாட்டுப்பாடல்கள் சிறப்பானவையாகும். ஆனால் அண்மையில் 'தெற்கன் பாட்டுகள்' என்ற மலையாள மொழி நாட்டுப் பாடல்கள் நூலாக வந்துள்ளது. இந்தத் தெற்கன் பாடல்கள் முக்காற் பங்கு தமிழாகவே உள்ளதைக் கவனிக்க வேண்டும்.

மலையாளம் மட்டும் தெரிந்தோர் இந்த நாட்டுப் பாடல்களைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாது. தமிழும்

மலையாளமும் தெரிந்தோர்தாம் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

சங்க இலக்கியம், பழந்தமிழ் இலக்கியம் ஆகிய வற்றில் காணப்படும் பெயர் வழக்குகளை ஆராய, மலையாளத்தில் வழங்கும் பேச்சு மொழிச் சொற்கள் நன்கு உதவும்.

விடக்கு என்ற சொல் தமிழில் பேச்சுவழக்கில் வழங்க வில்லை. ஆனால் விடக்கு என்ற சங்ககால வழக்கு மலை யாளத்தில் இன்றும் வழங்குகின்றது.

## தமிழ் உறவு

இத்தகைய சங்ககாலப் பழைய வழக்குகளை வைத்துக் கொண்டு தமிழைத் தாய்மொழியாவும், மலையாளத்தைப் பேச்சுமொழியாவும் கொண்டிருந்த மகாகவி உள்ளூர் பரமேஸ்வர ஐயர் என்ற புலவர், 'மலையாளமொழி தமிழ் மொழிக்குத் தமக்கை' என்று பொருத்தமான சான்று களின்றிக் கூறினார்.

ஆனால் வெளிநாட்டுக்காரரான கால்டுவெல் ஐயர் தமிழ்மொழிக்கும் மலையாள மொழிக்கும் உள்ள உறவைப் பற்றிக் கூறியதே மிகப் பொருத்தமானதாகும்.

கேரளத்தில் வழங்கிய தூய தமிழ் வடமொழியாளரின் தாக்கத்தால் கலப்பு மொழியான மலையாளமாக மாறியது. ஆயினும் அப்போதும் தூய தமிழ் வழக்குகள் காப்பாற்றப்பட்டுள்ளன.

இன்றும் கேரளத்தில் வழங்கும் ஊர்ப் பெயர்கள் தூய தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன. அப்பெயர்கள் தமிழ்நாட்டிலும் இன்றும் வழங்குகின்றன.

ஊர்ப் பெயர் ஆராய்ச்சியில் பல உண்மை களைக் காணலாம். கல்வெட்டுகளில் பண்டை ஊர்ப் பெயர்கள் வழங்கியுள்ளன.

மலையாள மொழியில் கிருஸ்திய கானங்களில் 'மார்க்கம் களிப்பாட்டு' என்ற பாட்டுத் தொகுதியின் முதல் பாட்டில் 'வேத்யனம்பு' என்னும் சொல் வழங்கி வருகின்றது. இந்த வேத்யனம்பு என்ற வழக்கு 'வேதினம்பு' என்று இருக்க வேண்டும்.

வேதினம் என்ற சொல் நற்றிணையில் கருக்கரிவாளைக் குறித்ததாகும். கருக்கரிவாளைப் போல இரம்பமுள் உடைய அம்புகள் உண்டு. இந்த அம்பை எய்தித் தூய தோமை யாரைக் (St. Thomas) கொன்றதாகச் செவிவழிக் கதை கூறுகின்றது.

## தோமையார் முடிவு

மலையாளப்பாட்டு தமிழில் கீழே காட்டப்படுகின்றது.

"மெய்க்கணிந்த பீலியும் மயில்மேல்த் தோந்தும் மேனியும்
பிடித்த தண்டும் கய்யும் மய்யும் எந்நந்நேக்கும் வாழ்கவே
வாழ்க வாழ்க நம்முடைய பரிஷயெல்லாம் பூமிமேல்
வழிகூறாய் நடக்கவேண்டி வந்தவரே நாமெல்லாம்
அழிவுகாலம் வந் டுத்து அலயுந்ந நின் மக்களெ
அழியாய் வண்ணம் காத்தருள்வான் கழிவுயேசு மார்த்தோம்மான்"

"மலமேன்நிந்நு வேத்யனம்பு சாத்தி எந்நபோல்
மைல்மேலேறி நின்ற நிலகாணவேணம் பந்தலில்

பட்டுடன் பணிப்புடவ பவிழமுத்து மாலயும்
அலங்கரிச்ச பந்தலில் வந்தெழுந்தருள்க
மார்த்தோம்மான்
அலங்கரிச்ச பந்தலில் வந்தருள் தரேணம்
மார்த்தோம்மான்!"

மேற்கண்ட பாட்டில் தூய தோமையாரை 'மார்த்தோம்மான்' என்று விளித்திருப்பதைக் காணலாம். மலையாளத்தில் கூறிய விளக்கத்தில் மயிலாப்பூர் மலையில் வைத்து மார்த்தோம்மான் அம்பெய்தி இறந்தார் என்பதை உணர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மெய்க்கணிந்த பீலியும், மயில் மேல் தோற்றும் மேனியும் என்று 'யேகமார்த்தோம்மானை' வர்ணித்திருப்பதைக் கவனிக்க வேண்டும்.

மைல் (மயில்) மேலேறி நின்ற நிலை காண வேணும் என்ற மலையாளப் பாட்டு வரிகளில் மயிலாப்பூருடன் தூய தோமையாரை நெருக்கமாகத் தொடர்புபடுத்திக் கூறும் செவிவழிச் செய்திகள் தெளிவாகத் தெரிகின்றன.

தமிழ் நாட்டில், சில கிறித்தவர்களிடையே மயிலை எய்த வேடன் அம்பு தவறித் 'தூய தோமையாரை'க் கொன்றதாகக் கூறுவர்*.

மயிலாப்பூரில் இன்றும் தூய தோமையார் ஆலயம் உள்ளது. கடற்கரைக்கருகில் இருக்கும் இந்த ஆலயம்தான் தேவாரத்தில் கூறப்பட்ட பழைய கபாலீசுவரர் ஆலயம் என்பர். இந்த ஆலயத்தின் தூண்களைப் போன்ற பொருள்கள் இங்குக் கிடைத்துள்ளன. மயிலாப்பூரில்

---

* வேதியன் (பிராமணன்) எய்த அம்பு பட்டுத் தோமையார் உயிர் துறந்தார் என்பாருமுளர்.

உள்ள கிறித்துவக் கோயிலிலும் மற்றும் உள்ள பழைய கிறித்துவக் கற்சிற்பங்களிலும் இரண்டு மயில்களுக்கிடையே சிலுவை காணப்படுகின்றது.

மயிலாப்பூர் தேவாரத்தில் மயிலாப்பூர் என்ற சிறந்த துறைமுகமாக இருந்தது. இந்தத் துறைமுகம் சங்க காலத்திலேயே இருந்ததாகவும் தெரிகின்றது. தூய தோமையார் கி.பி. ஒன்றாம் நூற்றாண்டில் சேர நாட்டிலிருந்து மயிலாப்பூர் வந்து இறந்தார் என்று செவிவழிச் செய்தியுள்ளது.

கேரளத்தில் தூய தோமையார் உயர்ந்த சாதி இந்துக்களை மதம் மாற்றினார் என்று கூறுவர். அவர்கள் இன்று மார்த்தோம்மான் கிறித்தவர்கள் என்று பிரிந்து இருக்கின்றனர்.

தூய தோமையார் மயிலாப்பூரில் இந்துக்களைக் கி.பி. ஒன்றாம் நூற்றாண்டில் மதம் மாற்றியதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால் பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டு செவிவழிச் செய்திகள் அவ்வாறு கூறுகின்றன. அவற்றின் உண்மையை எண்பிக்க முடியவில்லை.

## மயில்கள் வாழ்ந்தன

பழங்காலத்திய கிறித்தவர்கள் வீட்டுக் கதவுகளில் கஜலட்சுமி என்ற செதுக்கு வேலைப்பாட்டிற்கு ஈடாக இரண்டு மயிலும் நடுவில் சிலுவையும் இருந்ததை நான் பார்த்திருக்கின்றேன். அது மயிலாப்பூருடன் தோமையாரைத் தொடர்பு படுத்தி இணைத்த செவிவழிச் செய்தியால் வந்தது எனபது உண்மையாகும். அதனால்தான் மலையாளப் பாட்டில்,

'மெய்க் கணிந்த பீலியும்
மயில்மேல் தோன்றும் மேனியும்'

'மயில் மேலேறி நின்ற நிலை காண வேண்டும்' என்று மயிலுடன் இணைத்துத் தோமையாரவர்களைப் பற்றிப் பாடியுள்ளனர். இன்றும் மயிலாப்பூரில் மயில்கள் ஆர்ப்பு இல்லை; மயில்கள் வாழ்வில்லை.

நான் 25 ஆண்டுகளுக்கு முன்பு தேவகோட்டையில் விடியற்காலையில் பல மயில்களார்ப்பைக் கேட்டிருக் கின்றேன். பல வீடுகளில், கூரைகளில் வீட்டுமயில்கள் வாழ்ந்தன.

சங்க நூல்களில் காட்டு மயில்கள் கூறப்பட்டுள்ளன. பழனமஞ்ஞை என்று வயல் மயிலுங் கூறப்பட்டுள்ளது. இன்று தமிழகத்தில் பழனமயிலைப் பார்க்க முடியாது. ஆனால், இன்றும் ராஜஸ்தானில் பழன மயில்களைக் காணலாம்.

அவ்வாறாகவே சங்க காலத்திலும் தேவாரம் பாடப் பட்ட காலத்திலும் மயிலாப்பூரில் மயில்கள் ஆர்த்திருந்தன என்பதில் ஐயமில்லை. அதனால்தான் மயிலாப்பூர் என்ற பெயர் வந்தது.

மயிலைத் தொடர்புபடுத்திய அந்தப் பெயர் பண்டைக் கிறித்தவர்களிடையே தூய தோமையாருடன் இணைக்கப் பட்டுத் தோமையாருடைய செவிவழிச் செய்தியான வாழ்க்கை வரலாறுகள், பதினைந்து, பதினாறாம் நூற் றாண்டுகளில் தமிழ்க் கிறித்தவர்களிடையேயும் வழங்கியது. அவ்வாறு வழங்கினதிலிருந்து தோன்றிய ஒரு மலையாள நாட்டுப் பாடலில் 'வேதினம்' என்ற அரிய அழகிய சங்ககால வழக்கு மலையாள நாட்டுப் பாடலில் காணப்பட்டது மிகமிக வியப்பானதாகும். வேதினம் என்ற பெயர் நிகண்டு களில் காணப்படுகின்றது.

'கொந்துகோல்' என்ற புதுவை மாநிலப் பேச்சு வழக்கும், 'வேதினம்' என்ற மலையாள நாட்டினர் வழக்கும் பழந் தமிழ் இலக்கிய மரபில் வந்தவை என்பதை எண்ணும்போது வியப்பு மேலிடுகிறது.

# 18

# 'ஆராய்ச்சி'– ஓர் ஆராய்ச்சி

தென்னார்க்காடு மாவட்டத்திலும், புதுவை மாநிலப் பகுதிகளிலும் 'கம்பத்தம்', 'ஆராய்ச்சி' என்ற பேச்சு வழக்குகள் இன்றும் வழங்கி வருகின்றன.

## கம்பத்தம்

'கம்பத்தம்' என்ற சொல் வழக்கு இரெட்டி பெருநிலச்சுவான்தார்களைக் குறிக்கும். இது தெலுங்குச் சொல்லாகத் தெரிகின்றது. வரலாற்றுப்படி இரெட்டி சாதியினர் இராஷ்டிரகூட அரசினர் மரபில் வந்தவராவர்.

'கம்பத்தம்' என்ற பெருநிலச்சுவான்தார்களுக்கு உதவியாகவும், மேற்பார்வையாளராகவும் உள்ளவரை 'ஆராய்ச்சி' என்று அழைக்கின்றனர். இவ்வழக்கு சோழர் காலக் கல்வெட்டு வழக்காகும்.

## செல்வக் குவிப்பு

சோழர் காலத்தில்தான் பெருநிலச்சுவான்தார்கள்(Feudal land lords)பெருகினர். சோழர் காலத்தில்தான் வானளாவிய கோயில்கள் கட்டப்பட்டன.

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழப் பேரரசர்கள் (Chola EmPerors) திக்கெட்டும் சென்றும், கடல்கடந்து வென்றும் கொண்டு வந்த செல்வத்தைக் கோயில்கள் கட்டுவதில் கொட்டினார்கள்.

கோயில் பணிகள் சோழர் காலத்தில் சீராக்கப்பட்டன; மேன்மையாக்கப்பட்டன.

## ஆராய்ச்சி - தணிக்கையாளர்

ஸ்ரீ காரியம் பார்ப்போர் என்பவர் பொதுவாக கோயில் நிர்வாகத்தை கவனித்தனர். ஆனால் 'ஆராய்ச்சி', 'மேநாயகம்' ஆகிய அதிகாரிகள் கோயில் சொத்துக்களை நிர்வகித்தனர்.

ஆராய்ச்சி என்ற அதிகாரி கோயில் கணக்கையும் கோயில் சொத்துக்கள் பயன்படுத்தலையும் தணிக்கை செய்ய (Financial and Physical Audit) அனுப்பப்பட்ட அதிகாரியாகத் தெரிகின்றது.

உத்தம சோழனின் பத்தாவதாண்டு ஆட்சிக்காலத்தில் தீட்டப்பட்ட கல்வெட்டில் 'ஆராய்ச்சி' என்கிற பெயரில் ஓர் அதிகாரி குறிப்பிடப்படுகின்றார்.

## கல்வெட்டுச் சான்றுகள்

தென்னார்க்காடு மாவட்டத்தில் நல்லூரில் காணப் படும் உத்தம சோழனது கல்வெட்டில் சோழமன்னன் ஆராய்ச்சி என்கிற அதிகாரியைத் திருநல்லூரில் கோயில் கணக்கைச் சரிபார்க்க அனுப்பியதாகத் தெரிகின்றது.

இக்கல்வெட்டு, தென்னிந்திய சாசனத்தில் 1911ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய சாசனம் மூன்றாம் தொகுதியில் 41—ஆம் கல்வெட்டாக இது காணப்படுகின்றது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இன்னொரு கல்வெட்டிலும் 'ஆராய்ச்சி' என்ற பெயர் வழக்கு காணப்படுகின்றது. முனைப்பாடியுடையார் அக லேஸ்வரர் கோயிலில் ஆராய்ச்சி என்னும் பெயர் வழங்கு கின்றது. இவ்விரண்டு கல்வெட்டுகளும் தென்னார்க்காடு மாவட்டத்தில் காணப்படும் சோழர்காலக் கல்வெட்டு களாகும்.

சோழர் காலத்தில் வழங்கிய ஆராய்ச்சி என்ற பெயர், இன்றும் தென்னார்க்காடு மாவட்டம், புதுச்சேரி பகுதிகளில் வாழும் பெருநிலச்சுவான்தார்களாகிய இரெட்டிமார் பயிரிடும் நிலங்களை மேற்பார்வை செய்பவர்களுக்கு வழங்குவது வியப்பைத் தருகின்றது.

தமிழகத்தில் ஒரு பகுதியை ஆண்ட கன்னடம் பேசும் பேரரசர் ஹொய்சளர் ஆண்டபோதும், அதுபோன்று தமிழகத்தை ஆண்ட விஜயநகர ஆட்சியிலும், கன்னடம் தெலுங்கு மொழிகளின் தாக்கம் ஏற்பட்ட போதும், பல்லவர், சோழர்காலத்து ஆட்சிக்குரிய பல கல்வெட்டுத் தமிழ் வழக்குகள் அப்படியே போற்றப்பட்டதைக் காண லாம். அதில் ஒன்று, ஆராய்ச்சி என்ற சோழர் காலத்திய வழக்காகும்.

## கிருஷ்ணாவரம்

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர் ஆண்ட போது இறையிலியாகவோ, வேறு விதமாகவோ, கொடுக்கப்

பட்டு, தமிழ்நாட்டில் அமைந்த ஊர்கள் பலவும் கிருஷ்ணா வரம் என்று அழைக்கப்பட்டன. கிருஷ்ண தேவராயர் புதுவைப் பகுதியையும் ஆண்டார்.

இன்று கடலூரை ஒட்டியுள்ளதான புதுச்சேரி மாநிலத் துக்கு உட்பட்ட மதுரா கிருஷ்ணாவரம் என்ற கிராமம் குறவெளி மேடு எனும் புறப்பகுதியை உடையது.

நான் முன்னர் களப்பணியில் (Field Study) ஆராய்ந்த போது பரம்பரைச் செய்திகளை அறிந்தேன். கிருஷ்ணா வரம் கிருஷ்ண தேவராயரால் இறையலியாக தான் பெற்ற வெற்றியின் பெருமைக்காக—பிராமணர்களைக் குடியேற் றிய கிராமமாகும். இதன் அருகில் பிற்காலத்தில் குறவர் முதலிய பிற சாதியினர் குடியேறியதால் பிராமணர்கள் இந்தக் கிராமத்தை விட்டுச் சென்றனர் என்று எனக்குப் பரம்பரைச் செய்தியாகக் கூறப்பட்டது.

## கங்கை கொண்டான்

கங்கை கொண்டானான இராசேந்திர சோழன் கங்கை வரை சென்று சென்று தஞ்சைக்குத் திரும்பியபோது அவன் தங்கிய ஊர்களுக்கு (Camp Sites) "கங்கை கொண்டான்" என்று பெயர் சூட்டப்பட்டன.

சோழமன்னர் கடலுக்கு அப்பாற்பட்ட தூரதேச நாடு களை வென்று கடாரங் கொண்டான் என்று பெயர் சூட்டிக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்த ஊர்களை இறையிலி யாகவும் குடியேற்றத்திற்குக் கொடுத்திருக்கலாம்.

புதுவைக்கும் கடலூர் வட்டத்துக்கும் எல்லையில் உள்ள சின்ன கங்கனாங்குப்பம், பெரிய கங்கனாங்குப்பம்

என்கிற ஊர்களின் பெயர்கள் இராசேந்திர சோழன் காலத்தில் கங்கைகொண்டான் குப்பம் என்று வழங்கியதாகத் தெரிகின்றது.

தமிழ்நாட்டிலும் கங்கைகொண்டான் என்ற ஊர்ப் பெயர்கள் வழங்குகின்றன. இப்பெயர்களையும் வழங்கும் ஊர்களையும் ஆராய்ந்தால் சோழப் பேரரசன் இராசேந்திரசோழன் கங்கை வரை சென்று, வென்று திரும்பிய பெருஞ் சாலையைக் கண்டு கொள்ளலாம்.

## அரசூர்

புதுவை மாநிலத்திலும், தமிழ்நாட்டிலும் 'அரசூர்' என்ற ஊர்கள் பல உள்ளன. அவைகள், ஆண்ட அரசன் தற்காலிகமாக அரசுப்பணிகளை ஆராய்ந்து உத்தரவிட்ட, தற்காலிகமாகத் தங்கியிருந்த இடங்களாகும். அதனால் அந்த ஊர்கள் 'அரசூர்' என்றழைக்கப்பட்டன.

## முருங்கைப் பாக்கம்

இதுபோலவே பெரிய ஊர்களுக்கு அருகில் 'முருங்கைப் பாக்கம்' என்ற பல சிறிய ஊர்களின் பெயர்கள் காணப் படுகின்றன.

புதுவை நகரின் அருகிலும் திண்டிவனத்துக்கு அருகிலும் முருங்கைப் பாக்கம் என்ற ஊர்கள் உள்ளன. அப்பெயர் "மருங்கைப் பாக்கம்" என்ற பெயரின் மாறிய பேச்சு வழக்காகும்.

கி.பி. முதல், இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்குள் பாடப்பட்ட பட்டினப்பாலையிலும், சங்கநூல்களிலும் புற நகரை 'மருங்கையூர்', 'மருங்கைப் பாக்கம்' என்று கூறியுள்

ளைதக் காணலாம். அதனால் இன்று தமிழ்நாட்டிலும், புதுவையிலும் வழங்கப்படும் முருங்கைப் பாக்கம், 'மருங்கைப் பாக்கம்' என்ற பண்டைய வழக்கின் மாறிய வழக்காகும்.

மருங்கு என்ற வழக்கு சங்க காலத்தில் புறநகர் என்ற பொருளில் வந்ததாகும்.

புதுச்சேரியில் உள்ள முருங்கைப்பாக்கம் என்ற கிராமம் 'பொதுக்கே' என்று (கி.பி. முதல் நூற்றாண்டில் மேல்நாட்டு வணிகர்கள்) குறிப்பிட்டுள்ள புதுவை அரியாங்குப்பம் ஆற்றருகில் இருந்த உரோமன் வாணிக நிலையத்தை (Roman Emporium) ஒட்டி இருந்த மருங்கைப் பாக்கம் என்ற பெயராக இருக்கலாம்.

## சிந்துவெளி மரபு

ஒரு தலைநகரை இரு பிரிவாக பிரிப்பது சிந்துவெளி நாகரிகத்திலும் காணப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகத்தில் அரசர், வணிகர் நடுப்பகுதியிலும் (traders guilds), தொழிலாளர் புறப்பகுதியிலும் வாழ்வது கூறப்பட்டுள்ளது.

கழாத்தலையாரைப் பற்றிய ஒரு பாடலில் 'பேரரையம்', 'சிற்றரையம்' என்று நகரை ஆண்ட தலைநகர் கூறப்பட்டுள்ளது. ஆதலின் இந்த மரபு சிந்துவெளி நாகரிகத்திலிருந்து சங்ககாலம் வரையில் தொடர்ந்துள்ளது.

இன்று சிந்துவெளி நாகரிக உருவ எழுத்துக்கள் விழுப்புரத்துக்கு அருகில் கீழ்வாலைக் குன்றுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இன்றும் கிராமங்களில் வழங்கும் 'ஆராய்ச்சி' என்னும் பேச்சு வழக்கு எளியதாயினும் அதில் ஒரு கால வரலாறு

புதைந்துள்ளதைக் காணலாம். இதுபோன்ற கிராமத்தார் பேச்சு வழக்குகள், கோயில் சடங்கு வழக்குகள், பாமரர் வழக்குகளை ஆராய்ந்தால் உண்மைகளை அறியலாம்.

## நமது கடமை

இன்று, ஆடிட்டர் (Auditor) என்ற சொல்லுக்குத் தணிக்கையாளர் என்று தமிழில் கூறுகின்றனர். அதைவிட, புகழ் பெற்ற சோழர்களது ஆட்சி வழக்கையொட்டி, "ஆராய்ச்சிக் கணக்காளர்கள்" என்று வழங்குதல் பொருத்தமாக இருக்கும்.

ஏனெனில் ஆடிட்டர்கள், பணம் செலவழிப்பதையும், அதிகாரிகளின் செயலாக்கத் திறனையும், அதனால் ஏற்படும் பயனையும் ஆராய்கின்றனர். அதுபோன்ற கல்வெட்டுச் சொற்களையும், சோழர் ஆண்ட ஆட்சிச் சொற்களையும் இன்று பயன்படுத்தலாம். தமிழில் ஆட்சி மொழிச் சொற்கள் ஆங்கில வழக்குகளை பின்பற்றி அப்படியே மொழி பெயர்த்துச் செய்யும் போக்கு சரியாக அமைவதில்லை.

எடுத்துக்காட்டாகக் கூறவேண்டுமானால், Court of first instance இலங்கையிலும் புதுவையில் பிரெஞ்சுக்காரர் காலத்திலும் 'விளக்கத்துறை கோர்ட்டு' என்று அண்மைக் காலம் வரை வழங்கியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரைத் 'திணைக்களநாயகம்' என்று பிற்காலத்திய தமிழ்க் கல்வெட்டுகளில் இலங்கை நாட்டில் வழங்கியுள்ளது.

மாவட்ட ஆட்சியாளர் (Collector) என்ற புதிய வழக்கைப் புகுத்துமுன் 'தண்டல் நாயகம்' என்ற வழக்கைப் பயன்படுத்தினர். தடியை எடுத்து வரியைத் தண்டுபவர் என்ற பொருளில் தண்டல் நாயகம் என்ற பொருளைத் தருகின்றது.

ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்தில் வரிகளை வசூலிப்பதே மாவட்ட ஆட்சியாளர்களின் முக்கிய பணியாகும். இப்போது அத்துடன் நகரங்கள், கிராமங்களின் முன்னேற்ற வளர்ச்சிப் பணி மாவட்ட ஆட்சியாளருக்கு முக்கியப் பொறுப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

'திணைக்களம்' என்னும் கல்வெட்டுச் சொல் வழக்கு இன்றும் ஸ்ரீலங்காவில் 'இலாகா' (Department) என்பதற்கு ஆட்சிமொழித் தமிழில் (official language) வழங்குவது குறிப்பிடத்தக்கது.

நமக்குப் பல்லவ அரசு, சோழ அரசு, பாண்டிய அரசு, விஜயநகர அரசு, பாரம்பரிய சொல்வழக்குகள் உள்ளதால் அந்த ஆட்சிமொழி வழக்குகளைப் போற்ற வேண்டும். ஆங்கில வழக்குகளை மொழி பெயர்ப்பது (Litteral translation) பொருத்தமற்றது.

எல்லாவற்றுக்கும் ஆங்கிலத்தில் தேடுவது, எடுப்பது என்னும் நிலை முறையாகாது; நம் நாட்டில் முன்னர் வழக்கத்தில் இருந்துள்ளவற்றை ஆராய்ந்து பார்த்து இருப்பவற்றை, தக்க சொற்களைக் கண்டெடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

கற்றோரும், அரசியலாரும் விழிப்போடு செயல்பட வேண்டியது கடமையாகும். பழைமைச் சிறப்புகளைத் தேடிச்சேர்க்க வேண்டும்; அவற்றை மீண்டும் பழக்கத்தில் பயன்படுத்த பலவாறு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்; பரப்பிட ஆர்வமுடன் வகை செய்தல் வேண்டும். இவ்வாறெல்லாம் செய்தல் சமுதாயக் கடமையாகும். சிந்தித்துச் செயல்படுவோமாக!

## எமது சிறந்த வெளியீடுகள்

| | ரூ |
|---|---|
| **பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ்.** | |
| சங்க நூல்களில் மணிகள் | 10 — |
| சங்க நூல்களில் விந்தைப்பூச்சி | 5 — |
| இலக்கியத்தில் அறிவியல் | 15 — |
| இலக்கிய ஆய்வு | 13 — |
| Common names ... Flora & Fauna | 3 — |
| **டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியம்** | |
| கற்றதனால் ஆய பயன்? | 7 — |
| **டாக்டர் ஔவை நடராசன்** | |
| கம்பர் காட்சி | 13 . 50 |
| **கவிஞர் செவ்வேள்** | |
| கம்பன் சுவை | 6 . 25 |
| **புலவர் சு. குப்புசாமி** | |
| மலையமான்கள் | 9 — |
| வரலாற்று வண்ணம் | |
| **புலவர் ந. வேங்கடேசன்** | |
| வரலாற்றுச் சின்னங்கள் | 8 — |
| **புலவர் தி. தேவிதாசன், பி.லிட்.,** | |
| ஞானரதம்—ஒரு கண்ணோட்டம் | 10 — |

| | |
|---|---|
| கவிஞரேறு அரிமதி தென்னகன் | |
| அழகோவியம் | 9 — |
| புலவர் மு. த. வேலாயுதனார் | |
| கடல்வாணிகமும் தரைவாணிகமும் | 10 . 50 |
| பன்மொழிப் புலவர் இரா. மதிவாணன் | |
| சொல்லாய்வுக் கட்டுரைகள் | 16 . — |
| முத்து. எத்திராசன், எம். ஏ., | |
| கம்பர் காட்டும் கார்காலம் | 6 . 25 |
| ராதாரமணன் எம். ஏ., எம். எட்., | |
| பாரதி நோக்கில் பெண்மை | 8 — |
| ப. ரா. சுப்பிரமணியன், எம். ஏ., எம். எட்., | |
| இமயமலைப் பயணம் | 4 . 50 |
| கோகிலா சுந்தரம் | |
| மங்கையர் சாதனைகள் | 6 . 50 |
| மு. பரமசிவம் | |
| விந்தனும் விமர்சனமும் | 9 — |
| வெ. சுந்தரம் | |
| ம. பொ. சி. படைத்த புதிய தமிழகம் | 16 — |

பேராசிரியர் மா. ரா. இளங்கோவன்

| | |
|---|---|
| சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம் | 16 — |
| இந்திய இதழ்கள் | 15 — |
| முதல் நாளிதழ்கள் மூன்று | 12 — |
| கலையும் வாழ்வும் | 8 — |
| கல்விமொழி தமிழா, ஆங்கிலமா? | 3 . 50 |
| அறிவுலகின் குருதேவர் (தெ. பொ. மீ. தொகுப்பு) | 14 — |

ஔவை சு. துரைசாமி

| | |
|---|---|
| திருவாசகம் சிவபுராணம்—விரிவுரை | 2 . 50 |

மூவர் மொழிந்தவை

| | |
|---|---|
| உரைவேந்தர் ஔவை | 5 . 50 |

புலவர் தாமரைக் கண்ணன்

| | |
|---|---|
| வரலாற்றுக் கருவூலம் | 20 — |

ச. ஜெகத் ரட்சகன், பி. எஸ்ஸி.,

| | |
|---|---|
| பாரதியும் பாரதிதாசனும் | 12 . 50 |
| ஒரு சாதனைப் பூவின் சரித்திர வசந்தம் | |
| பெரியாரும் அண்ணாவும் | |

இளந்திரையன் எம். ஏ.,

| | |
|---|---|
| வண்ணப் பறவைகள் | 9 — |

புலவர் க. அரசமணி

புத்துலக வழிகாட்டிகள் 4.75

கே. எஸ். லட்சுமணன்

பேரறிஞர்களின் உவமைகள் 5 —

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

தாயுமானார் கதை 5.50

ஞானியாரடிகள் 6 —

கல் சொல்லும் கதைகள் 8 —

புனிதவதி இளங்கோவன் பி. ஏ., பி. டி.,

பாரதத் திலகம் மோதிலால் நேரு

காற்றினிலே தவழ்ந்தவை

திரு. வி. க. ஒரு சகாப்தம்

கனவுகள்

நான் கண்ட பெரியோர்கள்

# அருஞ்சொல் அடைவு

அக்காண்டி 20, 23
அங்காடி 159
அங்குசம் 197, 199
அச்சுமாறுதல் 73, 74
அசோக மன்னன் 112
அட்டவாயில் 132
அடியார்க்கு நல்லார் 169
அதியமான் நெடுமானஞ்சி 145-47
அதிரல் 161-63, 167-69
அப்பர் 53
அபிஷேகம் 94
அம்பலப்புழை 89
அம்பு 155, 203
அமராவதி 136-37, 139, 142-43, 48
அமெரிக்கா 192
அரக்கர் 52
அரசூர் 211
அரளிப்பூ 20, 40
அரிக்கமேடு 132, 138
அரிசி 133
அரிசிக்கார் 97
அரியாங்குப்பம் 212
அரிவாள் 200
அரும்பத உரை 163
அருமனவன் 114
அலரி 167
அலரிச்செடி 93
அவரை 189
அள்ளூர 144
அன்னம் 186
அனுமான் 52
ஆக்காட்டி 18-23
ஆக்குருவி 19, 23
ஆகமம் 128
ஆங்கிலேயர் 36, 214
ஆசாரிகள் 86, 87
ஆசான் 91
ஆசிய ஆஸ்திரேலிய மொழி 113
ஆசிரமம் 129
ஆஸ்டிரிக் இனமக்கள் 115
ஆஸ்டிரிக் மொழி 113—114
ஆடு 102, 104
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 101, 104, 108
ஆண்டாள் 46, 77
ஆத்திரேலியா 198
ஆந்திரச் சோடர் 135
ஆந்திர நாடு 91, 103, 133-37, 139, 142-47
ஆமான் 190-92
ஆராய்ச்சி 207-09, 212-13
ஆரியம் 113

ஆலமரம் 130-31, 154-55
ஆவரம்பூ 19-21, 40
ஆள்காட்டி 17, 18, 21-27, 30-41
ஆற்காடு 93
ஆனைச்சாத்தன் 46, 77
ஆனைமலை 105
இக்குவாகு 137, 146
இக்குவாகு அரசினர் 147
இக்குவாகு மரபு 145-46
இக்குவாகு மன்னன் 146
இக்குவாகு வம்சம் 143
இக்குவாகு வழியினர் 147
இசைக் கருவிகள் 39
இடங்கை 82
இடிகர் 91
இடைக்கழிநாடு 184-85, 187, 190-92
இடையன் 76
இடையன் பூச்சி 76
இந்திர கோபப் பூச்சி 187
இயற்கை வரலாற்றுக் கழகத்தார் 153
இரப்பான் 53
இரம்சான் 141
இராகவையங்கார். மு 141
இராசராசன் I 208
இராசேந்திரசோழன் 142, 208, 211
இராமபாதம் 154
இராமன் 127, 130-31, 151-53, 155, 157-58
இராமாயணம் 128, 156, 158
இராவணன் 156
இராஜஸ்தான் 205
இராஷ்டிரகூட அரசினர் 207
இரும்புலி 118
இருவெதிர் 118-19, 174
இரெட்டி 207, 209
இரெட்டிபாளையம் 135-36 148
இலக்கண ஆசிரியர் 111
இலக்கண உரையாசிரியர் 81
இலக்கண நூல் 96
இலங்கை 31, 17-19, 22, 24, 59-61, 85-87, 92, 98, 109, 112-13, 128, 154, 156-57, 184-85, 213
இலவித வித்தாரம் 155
இளந்திரையன் 142
இளந்தை 61
இளநீர் 94, 109, 113-15
இளம்பூரணர் 198
இறையிலி 209-10
இனக்கூட்டு வாழ்க்கை 50
ஈச்சங்கள் 97, 112
ஈராசு அடிகள் 141
ஈழக்கையர் 95
ஈழகுலச் சான்றோர் 98
ஈழத்தலரி 93

ஈழத்து பூதந்தேவனார் 184
ஈழநாடு 60, 75, 92-03, 97, 134, 144, 184
ஈழம் 91, 142
ஈழம் புஞ்சை 95
ஈழம் பூட்சி 93-04, 112
ஈழவர் 85-07, 89-91, 93-99, 112-13
உத்தம சோழன் 208
உதகமண்டலம் 105
உதியமரம் 146
உதியன் 146
உந்தூழ் 118-19, 122
உரையாசிரியர் 54, 74, 81
உரோமர் 128
உரோமன் வணிக நிலையம் 212
உளுத்தம் பயறு 195
உறுத்தே 69
உறையூர் 183
ஊறு 69
எஃகு 143
எட்டுக்கால் பூச்சி 76
எமனோ, டாக்டர் 69
எயில் பட்டினம் 131-32, 186
எயினர் 191
எலுமிச்சை 93
எள் 99
எறும்பு 49-54, 59, 62
எறுழம் 122-23
ஏணி உரிமை 95
ஏழ்தெங்க நாடு 111
ஏழ்பனை நாடு 111
ஐயனார் 196
ஐயனார் கோயில் 195, 196
ஐரோப்பா 153
ஒதியமரம் 146
ஒப்பாரி 20
ஒய்சள மன்னன் 141
ஒய்சளர் 140, 209
ஒய்சள வம்சம் 141
ஒவியர் பெருமகன் 184
ஓவியர் 184
ஓணம் திருவிழா 90
ஒய்மாநாடு 183, 185, 193
ஔவையார் 145
கங்கைகொண்டான் 211
கட்டெறும்பு 61
கடந்தல் 68-69
கடந்தி 69
கடந்துறுத்தெ 68
கடந்தூறு 68
கடந்தை 68-69
கடம்பர் 145
கடம்பு 186
கடம்பை 69
கடலூர் 134, 191, 210
கடவுள் 65
கடற்கரைப் பட்டினம் 128
கடஜ 68
கடஜு 68

கடாரங்கொண்டான் 210
கடில் 70
கடில்மாசி 70
கடுதூறு 68
கடுந்தெற்று 67
கடுந்தேறு 63-66, 70
கண்டாலி 70
கண்டி 86
கண்டெல்வி 70
கண்டோல் 114
கண்டோவி 69
கண்டோளி 70
கண்ணன் 153-54, 189
கண்ணி 18, 20, 30-31, 35, 39
கண்புல் 147
கணக்காளர் 213
கணந்துள் 37-38
கணபதி 142
கணபா 70
கணம்புல் 147
கந்தேறூறு 66
கம்பத்தம் 207
கம்பளிப்புழு 54, 57, 72
கம்பன் 52
கம்பு 147
கம்புல் 147
கம்மாளர் 86-07
கமுகு 93
கயவாய் 44
கயவு 44
கர்ப்பூரம் 94
கரிக்குருவி 43-07
கரிகாலச் சோழன் 85, 135
கருக்கரிவாள் 200
கருங்குருவி 46, 77
கருப்பச் சிதைவு 162
கருப்பொருள் 96, 111
கரும்பு 146-47
கரும்புல் 147
கல்யாணி நகர் 142
கல்லறை 65
கலியன் 77
கவசம் 80, 83
கவழம் 161
கவளம் 161
கழிகள் 185
கழுகு 43-44
கள்ளர் இனம் 141
கள்ளர் மரபினர் 141-42
கள்ளிறக்குவோர் 89, 91
கள்வர் மரபினர் 140, 142
களப்பிரர் 183, 185
களரி பயிற்று 91
கன்னடக்குடி 89
கன்னடநாடு 89, 91, 140-41
கன்னடப் பெயர் 68
கன்னடம் 179
கன்னட மொழி 68
கனஜ 68
கனஜடபுரி 69
கனூதுரு 68
கஜபாகு 142

கஜலட்சுமி 204
காக்கத் தம்புராட்டி 44-45
காக்கத் தம்புரான் 44-45
காக்கை 43, 45-46
காகந்தி 135-36, 148
காங்கோ நாடு 44
காசா 189
காசாம்பு 189
காசுகள் 134
காஞ்சி 134
காட்டன் 94
காட்டுப் பன்றி 192
காட்டுப் பாக்கம் 190
காட்டுப் பூச்சி 93
காட்டுப் பூனை 167
காட்டு மல்லிகை 163, 167—68
காட்டெருமை 190-92
காட்ராம்பாக்கம் 103
காடாரம்பம் 103
காடுமுழக்கி 44
காண்டில்பொட்டே 69
காண்டவாயில் 131, 133
காதிலை 22
காந்தள் 188
காப்பித் தோட்டம் 105
காயா 189
காயாமலர் 189
கார்த்திகைப்பள்ளி 90
காராடன்சாத்தன் 77
காரைக்கால் 196
கால்டுவெல் 90
காவிரி 85
காவிரிப்பூம்பட்டினம் 148
காளிதாசன் 155-56
கிணறு 191
கிராண்டி 69
கிராமணி 91, 198
கிருஸ்தியகானம் 202
கிருஷ்ணதேவராயர் 209-10
கிருஷ்ணன். எம் 171-72
கிரேக்கர் 128, 130-32, 158-59
கிளியனூர் 130, 196
கிறித்தவர் 203, 205
கீடஜாலம் 58
கீழ்வாலை 212
குக்கி 44
குஞ்சு 18, 20, 24, 27-30, 33-35, 51
குடகுமொழி 69
குடம்பை 51
குடவர் 83
குண்டர்ட், டாக்டர் 57-58
குதிரை 18, 197
குதிரைச் சாட்டை 197
குதிரை வணிகர் 144
குமரி 111
குமரிமாவட்டம் 57, 61-62
குருக்கத்தி 120-21

குருகிலை 120-21
குருளை 106
குவடு 102, 105
குழந்தை 52
குளவி 50, 63-67, 71, 73-75
குறத்தி 31
குறவர் 152, 210
குறிஞ்சி 119
குறுகிலை 121
குன்றிமணி 121
கூட்டுக்குளவி 67
கூட்டுப்புழு 51
கூடலூர் 130
கூடுர்தாலுக்கா 135
கூத்தாடிகள் 38-39
கூயிமொழி 55, 69
கேடயம் 88
கேரளநாடு 185
கேரளம் 22, 54-55, 77, 85-86, 88, 90-91, 95, 103, 112-13, 187, 201, 204
கேழமான் 192
கைக்கோளர் 82, 99
கைதமுக்கு 90
கொங்குநாடு 19, 28, 143
கொச்சிநாடு 85
கொட்டாங்கச்சி 189
கொடுங்களூர் 53
கொந்துகோல் 195-97,199
கோக்கயம் 44, 46
கோகிலம் 45
கோங்கமரம் 163
கோங்கு 167
கோடிக்கரை 127-30,132, 151-53, 156-59
கோடிவனம் 129
கோண்டிமொழி 69
கோபாலாச்சாரி. டாக்டர் 144
கோபம் 188
கோபிகை 154
கோல் 197-99
கோல்மொழி 69
கோழி 77, 186
கோழிச்சாத்தன் 77
சங்காலியா 156-57
சங்கீர்ணஜாதி 99
சத்திமுத்தப் புலவர் 172
சத்திரிய சாதி 144
சத்திரியன் 154
சம்பந்தர் 121, 199
சமணர் 121
சர்க்கரை 147
சரபம் 106
சரபமான் 106
சரபேசுவரர் 107
சலீம்அலி. டாக்டர் 26-27
சாட்டை 97
சாணார் 85-86, 90-92, 98-99
சாத்தன் 77
சாத்தி 77

சாதவாகன அரசர் 144-45
சாதவாகனப் பேரரசு 138
சாதவாகனர் 134, 136, 138-39, 142, 147
சாதி 64
சாந்த சிரி 145
சாமிநாதையர், உ. வே. 67, 80, 82, 102, 118
சாரணர் பாட்டு 106-07
சால் 134
சாலி 133
சாலியூர் 133-34
சாலு 133
சாளுக்கிய அரசன் 140
சாளுக்கிய சிற்பம் 143
சாளுக்கிய நாடு 143
சாளுக்கிய பேரரசு 140
சாளுக்கியர் 142
சான்றான் 95
சான்றோர் 79-82, 84, 87, 89, 97, 99
சான்றோன் 90-91, 98
சிகப்புக்கண் ஆள்காட்டி 22-23, 30, 32, 34, 36 39-40
சிங்கத்தான் 141
சிங்களர் 60
சித்த வைத்தியம் 129-30, 162
சிந்துப் பள்ளத்தாக்கு நாகரிகம் 141
சிந்துவெளி நாகரிகம் 212
சிரி 143
சிரிசாந்த மூலன் 145
சிரி பர்வத நாடு 136
சிரி பர்வதம் 138, 143
சிரிபவத்தே 137
சிரியன் கிறிஸ்துவர் 93
சிலந்திப் பூச்சி 76-76
சிவஞான முனிவர் 155
சிவபெருமான் 46, 155
சிவன் 46
சிற்றரையம் 212
சிறுகுடிப்பாக்கம் 152
சிறுத்தொண்டன் 142
சின்ன கங்கணுங்குப்பம் 210
சினப்புலி 44
சீனா 133
சுங்கச்சாவடி 195
சுத்தசன்மார்க்கம் 130
சுபக்கம் 71
சுமேரியர் 141
சுரபுன்னை 180-81
சுரம் 103, 181
சூரன்குடி பெரியநாடார் 57
செங்கம் 87
செடிநூல் 119
செடிநூலார் 168, 176-81
செந்நெல் 63
செம்புலியான் 141
செருந்தி 186
செருப்புமலை 83

செவ்வெறும்பு 54
செவினி 54, 61-62
சென்னை 189
சென்னைப் பல்கலைக் கழக அகராதி 54, 163
சேகுவர் 89
சேகொன் 87
சேதுக்கரை 127
சேரநாடு 53, 85, 92, 97-99, 110-111, 185
சேரமன்னன் 83, 99, 107
சேரமான்பெருமாள் 86
சேரர் 54, 84, 183
சேரர்படை 97
சேரலாதன் 104
சேரன் செங்குட்டுவன் 45, 102, 142
சேவகர் 89
சேகவன் 87
சேனாவரையர் 158
சைபீரியா 153
சைவசித்தாந்தம் 57-58, 71, 77
சைவர் 85
சோகர் 86-87
சோகன் 87
சோடவம்சம் 135
சோபட்டினம் 132
சோபாட்னா 132
சோமசுந்தரக்கடவுள் 47
சோமசுந்தரப்பெருமான் 45
சோமனூர் 17
சோழர் 84, 93-94, 98, 148, 183, 207, 209, 213
சோழர்படை 82
சோழிசுழவர் 90
ஞானப்பிரகாச அடிகள் 61
தகடூர் 146
தகர் 108
தச்சஆசாரி 86, 87
தச்சன் 86
தஞ்சை 143, 208
தடி 198
தண்டகாரண்யம் 102-04, 107-08
தண்டல்நாயகம் 214
தண்டன் 88
தண்டன் 91
தண்டன்தோடு 94
தண்டு 88
தணிக்கையாளர் 212
தமிழக்கண்ணன் 143-44
தர்மடம் 50
தர்ஸ்டான் 90
தருமபுர ஆதீனமடம் 118
தாய்க்கயிறு 95
தாலமி (டாலமி) 128, 158
தாலாட்டுப்பாடல் 41
தாவர நூலறிஞர் 96
தாழை 115-16, 186
தாறே 116
திகைத்திறலார் 130

திண்டிவனம் 65, 103, 106, 191, 196, 211
திணைக்களநாயகம் 213
திணைக்களம் 214
திப்புசுல்தான் 141
திராவிடப்பெயர் 140
திராவிடம் 113
திராவிடமொழி 68-69, 133
திருடன் 37
திருநெல்வேலி 29, 31, 33
திருநெல்வேலி மாவட்டம் 29, 33
திருமலைராயன் பட்டினம் 196
திருமறைக்காடு 159
திருவஞ்சிக்குளம் 87
திருவண்ணாமலை 87
திருவணைக் கரை 156
திருவனந்தபுரம் 90
திருவாங்கூர் நாடு 85
திருவிளையாடல் 43, 155
திரையர் 135-36, 147
திவ்வியப் பிரபந்தம் 188
தினைக்கார் 97
தீயர் 85-86, 88-89, 93, 99
தீவகர் 97
தீவர் 86, 91
தீவு 176
துறை 79
துறைமுகப் பட்டினம் 54
துறைமுகம் 127
துவர் 176
துழனி 152
துளிமொழி 69
தூக்கு 79
தூய தேர்மையர் 202-05
தூறு 162, 169
தெங்கின மரம் 86
தெங்கின வகுப்பு 89
தெங்கு 110, 116
தெலுங்கு மொழி 68, 120, 133, 209
தெற்கம் பாட்டு 200
தெறுதல் 64
தெறும் 122
தெறும்வீ 122
தெறுழம் 123
தென்னம்பாளை 99
தென்னவர் 109
தென்னார்க்காடு மாவட்டம் 54, 65, 208
தென்னை 109, 112, 115-16
தென்னை மரம் 96-97
தேமா 118
தேயிலைத் தோட்டம் 105
தேவாங்கு 55
தேவாரம் 121, 181, 204-05
தேன் 179
தேன்கூடு 75
தேனீ 179

தொண்டை நாடு 135, 142
தொண்டை மண்டலம் 134
தொண்டைமான் 135-36, 140, 142, 147-48
தொண்டையர் 135-36, 147-48
தொண்டையர் நாடு 142
தோட்டி 197
நகம் 163
நச்சினார்க்கினியர் 64, 66-67, 106-07, 119-21, 163, 168
நண்டுத்தெறுக்கால் 65
நத்தத்தனார் 183-87, 192
நந்திவர்மப் பல்லவன் II 94
நந்திவர்மன் III 94
நம்பூதிரிகள் 86
நல்லியக்கோடன் 183-84, 190
நல்லூர் நத்தத்தனார் 183-85, 192-208
நவகோடி சித்த ஆசிரமம் 130
நவகோடி சித்தர் 129
நாக அரசி 138
நாககேசரம் 179
நாகசம்பங்கி 179
நாகநாடு 134
நாகப்பூ 178
நாகபாசம் 52
நாகம் 175-81
நாக மலர் 179
நாகர் பரம்பரை 184
நாகனம் 178
நாகு 178
நாட்டாண்மைக்காரர் 86
நாட்டார் 200
நாட்டார் பண்பாடு 46
நாட்டார் பாட்டு 60
நாட்டார் பாடல் 35, 41
நாட்டார் மக்கள் 36, 73-74, 199
நாட்டார் வழக்காறு 34,
நாட்டுப் பாடல் 23, 32-33, 41, 59
நாட்டுப்புற மக்கள் 43
நாடார் 85, 90-91
நாடி 90
நாடு காணிச்சுரம் 103-04
நாய் 77
நாயக்கர் 198
நாயகர் 198
நாயர்கள் 86
நாராயணசாமி ஐயர் 122
நாரிகேயா 113
நாரிகேலா 114
நாரை 49, 51, 172
நாவல் பழம் 175-76
நிகம 128-29, 158
நிகமம் 158-59
நியம மூதூர் 159
நியர் 113-14

நியர் கொலை 113
நியு 114
நியுகினித்தீவு 114
நிலச்சுவாந்தார் 207
நீர் 113-14
நீர்க்கடம்பு 185
நீலகண்ட சாத்திரியார் 142
நீலகிரி 103
நீலகேசி 178
நீலச்சேவல் 186-87
நீலமணி 186
நீற்றின்கூடு 55
நூற்றுவர் கன்னர் 144
நெட்டப்பாக்கம் 19
நெய்தல்திணை 96, 111
நெய்தல் நிலம் 185
நெய்வேலி 191
நெல்லித்தோப்பு 186
நெல்லூர் 133-35, 148
நெல்லூர் மாவட்டம் 135, 148
நொச்சி நியமங்கிழார் 128, 159
பச்சைப் புழு 73
பசிபிக் தீவு 114
பசுவினம் 191
பட்டு நூல் 51
பட்டுப்புழு 54
பட்டுப்பூச்சி 72, 188
படைக்கலம் 81-82
பணிக்கர் 91
பதிவதம் 139
பதிவிரதம் 139
பதினெட்டான்மார் 87
பப்பரவன் 114
பப்பவன் 114
பப்புவன் 114
பம்பாய் 153
பர்மா 114
பர்வதசிரி 138, 148
பர்வத ஸ்ரீ 138, 145, 148
பரதவர் 152
பரம்பத்தையன் 23, 26
பரம்பு 21, 23
பரமேஸ்வர ஐயர் 201
பரிவாரம் 154
பருவதஸ்ரீ 139
பல்லவர் 84, 92-95, 97-99, 112-13, 134, 145-209
பலாசம் 120
பலா மரம் 49, 52, 59, 185
பவத்திரி 127, 131-33, 135-38, 147-48
பழங்குடி 83-84, 138, 152
பழங்குடி மக்கள் 75
பழவேற்காடு 136
பறவைகள் புகலிடம் 153
பறவை நூலார் 29-32, 35, 40-43
பன்றி 192
பனங்கள் 97

பனை 111
பனை மரம் 96, 111
பாகல் 60
பாண்டி ஈழவர் 90
பாண்டிய அரசு 213
பாண்டியர் 84, 110, 151
பாண்டியன் 45
பாணப்பாடி 84
பாணர் 82, 84, 184
பாணர் குடி 84
பாணராட்டிர அரசு 145
பாணராஷ்டிரம் 84
பாபிலோனியர் 141
பார்த்தலோமியோ 90
பார்வை 39
பாரதியின் பாட்டு 174
பாலிமொழி 148
பாற்கர இரவிவர்மன் 53
பிணம் தின்னிக் கழுகு 22
பிரஞ்சுத் திட்டம் 88
பிரம்ம சத்திரிய அரசன் 145
பிரம்ம சத்திரியர் 138
பிராகிருதம் 70, 129, 134, 137-39
பிராமணர்கள் 210
பிராமணன் 138, 144-45
பிள்ளை 88
பின்னத்தூர் 122
பீமராஜன் 44
பீலிவளை 134
புகார் 142
புங்கம் 110
புங்கு 110
புதுக்கோட்டை 105, 140
புதுச்சேரி 19, 197, 209
புதுச்சேரி மாநிலம் 19
புதுவை 103, 105, 130, 132, 186, 191, 195-96, 207, 210-13
புல்லி 139-140, 142
புலி 105, 118, 139
புலிகடிமால் 141
புலிப்புறா 140
புலிமாய் 140
புலிமாயி 141
புலிமெய் 140
புலி வேடம் 141
புவசைலியான 139
புழு 50-51, 54, 57-58, 72-74
புள்ளி 139
புள்ளூறு 66, 69
புளி 168
புளி எறும்பு 61
புற்று 49
புன்கு 110
புன்னாகம் 181
புன்னை 180-81, 186
புனல் 168
புனலி 163
புனலிக்கொடி 168
பூச்சி 34-54, 57-58, 62, 72, 74-76, 187-88

பூச்சி நூலறிஞர் 73
பூசாரி 195-96
பூட்சி 93-94
பூண்மரம் 181
பூதம் 142
பூர்வசைலியான 139
பூழித் தச்சன் 87-88
பூழித்தலை 88
பூழிநாடு 88
பூழியர் 83
பெரிப்புளூஸ் 93-94, 96, 128
பெரிய கங்கணங்குப்பம் 210
பெரியசாமித்தூரன் 17-19, 24, 30, 32
பெரிய நாடார் 61-62
பெருங் கற்கால நாகரிகம் 136
பெரும் புலி 118
பெருமூங்கில் 118-19
பேரரையம் 212
பொகுட்டெழினி 145
பொதுக்கே 212
பொம்மையபுரம் 32
பொன் 176
போசளர் 140
போர் வீரர் 83
பௌத்த நூல் 155
பௌத்தப் பள்ளி 133
பௌத்த மதம் 138
பௌத்தர் 85, 137, 147, 155, 179
மகரந்தத் தூள் 180, 186
மகா தலைவர் 144
மகாதேவன். ஐ 138, 141
மகாபாரதம் 156
மகா புருஷன் 155
மகாவத்து 155
மங்கலம் 195-96, 198
மங்கள்ராஜ் ஜான்ஜன். ஜே 17, 20-21, 23, 27, 37-41
மஞ்சள் கண் ஆள்காட்டி 22-29, 31-32, 34, 38-39
மஞ்சள் கண்ணி 22, 26
மஞ்ஞை 205
மட்டக்களப்பு 59
மண்குளவி 75
மண்கூடு 73
மணியக்காரர் 198
மத்திய இந்தியப் பழங்குடி 156
மயிர்க்குட்டி 57, 72
மயில் 189, 203-05
மயிலாப்பூர் 203-05
மயிலை நாதர் 110, 114
மயிலைநாதர் உரை 43
மயூரசர்மன் 145
மரக்காணம் 131-32, 192
மரக்கால் 63
மரவிடை 61, 190

மராத்தி மொழி 69-70
மராமரம் 155
மருங்கூர் பட்டினம் 127
மருங்கைப்பாக்கம் 211-12
மருங்கையூர் 211
மருத்நிலம் 185-86
மருத மரம் 121-22
மருதி 77
மல்லிகை 167
மலைக்குடி 44
மலையாடு 102, 105-08
மலையாள ஈழவர் 90
மலையாள நாடு 86-87, 89, 91, 93, 95
மலையாளப் பாட்டு 202, 204-05
மலையாளப் பெயர் 46, 69
மலையாளம் 22-23, 26, 44, 55, 57, 59, 62, 68, 76, 103, 201
மலையாள மொழி 22, 57-58, 104, 200-02
மலையாள வழக்கு 58
மலைவாழ் மன்னன் 140
மலேயா 109
மழவர் 82-84
மறவர் 82
மறைக்காடு 129
மறைமலை நகர் 189
மாகி 50, 88, 1[illegible]3
மாடு 18-19, 23, 77, 192
மாண்டவாயில் 131
மாதவி 121, 178
மார்க்கம் களிப்பாட்டு 202
மார்த்தோம்மான் கிறிஸ்துவர் 204
மால் 15
மாவிடை 61
மாவிலங்கை 184
மான் 192
மிருத்தியுஞ்சய மந்திரம் 47
மிளகப்ப ன்195-96
மிளகய்யனார் 196
மிளகு 196
மிளகுக் கொடி 185
மிளகுப்பொதி 195
மீறு 55, 61
முசடன் 54
முசிரி 53
முசிறு 53, 61
முசிறு எறும்பு 54
முசு 53
முசுக்கொட்டாம் பூச்சி 54
முசுட்டை 52, 55
முசுட்டெறும்பு 52, 54
முசுடன் 53
முசுடு 54
முசுண்டை 189
முசுமுசுக்கை 54
முசுறுப்புல் 54
முட்கோல் 197
முட்டை 18-19, 22, 24, 26-28, 31, 34-35, 37, 49-51, 73-74

முண்டகம் 186
முண்டலவெருது 120
முண்டாமொழி 114-15
முத்து 186
முதலியார் 91
முந்தூழ் 117-20
முயல் 198
முயிற்றுக்கடி 62
முயிற்றுப்புல் 54
முயிற்றெறும்பு 57, 59, 61-62
முயிறி 52
முயிறு 49-55, 59-61
முயிரிக்கோட்டு அஞ்சு வண்ணம் 53
முயிரிக்கோடு 53
முரம்பு 21, 23
முரவி 55
முருக்க மரம் 120
முருக்கிலை 121
முருங்கைப் பாக்கம் 211-12
முள்ளம் பன்றி 192
முனியப்பன், புலவர் 102
முனியன் 77
முனைப்பாடியுடையார் அகலேஸ்வரர் 209
மூங்கில் 118, 171-72, 174
மூடு 67
மூடை 66-67, 76
மூண்டர்கள் 115
மூதாய் 62, 187
மெய்கண்டார் 74, 77
மேநாயகம் 208
மேற்குத் தொடர்ச்சிமலை 176, 181
மைக்குட்டி 57
மைசூர் மன்னர் 105
மொச்சை 189
மொலகுறுகுலு 133
யவனர் மது 97
யாழ் 184
யாழ்ப்பாணம் 184
யானை 114, 161-62, 171-72, 199
யானை ராஞ்சி 44
யுவான் சாங் 133
யூதர் 53
யேகமார்த் தோம்மான் 203
லங்கா 156
லூர்து. தே 17
வங்காள நாடு 45
வசந்தன் பாட்டு 59
வஞ்சி 115, 183
வட்டாரப் பாடல் 41
வடக்கன் பாட்டு 200
வட கேரளம் 55
வடநூல் 154
வடமலையாளம் 22, 26, 59, 62, 76
வடமொழி 69-70, 102-03, 113-14, 129, 137-39, 148, 155, 157, 159-179, 201

வண்டு 72
வண்ணம் 79
வண்ணாரப்பாவி 30-31
வண்ணான் 76
வயவன் 43-44
வரிப்புலி 105
வருடை 102, 104, 106-07
வரையாடு 104
வல்லூறு 66, 69
வலங்கை 82
வலசை 24-25
வலியன் 43-45
வழிப்போக்கர் 39
வழை 180
வளைதடி 198
வளையம் 153
வானகோவரையர் 84
வாதாபி 142
வால்மீகி ராமாயணம் 156
வாவிலாவ் 114
வாள் 88-89
வானவரம்பன் 80
வித்தகம் 74
வித்தியானந்தம், சு 18
விலங்கியலார் 192
விலங்கு நூலார் 191
விழுப்புரம் 186, 212
விளக்கத்துறை கோர்ட்டு 213
விளையாட்டு 155
வின்சுலோ அகராதி 163, 169
விஜயநகர அரசு 213
விஜயநகர ஆட்சி 89, 209
விஜயபுரி யபுவதெசா 137
விஷ்ணு 158
வீட்டுக்கோழி 77
வீரன் 81
வெட்டுக்கிளி 34
வெதிர் 118, 174
வெள்ளம் 18
வெள்ளைக்காரன் 105-07
வெற்றிலை 121
வேங்கடசாமி. சீனி 133, 144
வேங்கடம் 139-40
வேட்டுவப் பெயரளி 71-72
வேட்டுவர் 152
வேட்டுவன் 35, 38, 57-58, 71-74, 77
வேட்டுவாளி 57
வேட்டை 199
வேட்டைக்காரன் 35
வேட்டையாளன் 36-39
வேடந்தாங்கல் 153
வேடர் 75
வேதம் 128, 158
வேதாரண்யம் 158-59
வேதினம் 195, 200
வேதினம்பு 202
வேளிர் 141
வேளிர் குலம் 142
வேளூர்ப்பாளையம் 94
வைதீக இந்துமதம் 99
வையாபுரிப்பிள்ளை 146
ஜபல்பூர் 156
ஜாகீர் 89
ஹலெபெய்க்க 89
ஸ்ரீகாரியம் 208
ஸ்ரீ பர்வதம் 145
ஸ்ரீலங்கா 214

இந்நூலின் சிறப்பு

## நாட்டுப்புற இயல்,
## அறிவியல், வரலாறு சார்ந்த
## ஆய்வுகள் !

சில உயிரினங்கள், தாவரங்கள் பற்றிய அறிவியல் விளக்கங்களோடு கூடிய சொல்லாய்வு இந்நூலில் சிறப்பாகக் காணலாம்.

சங்ககாலத்து அறிவியல் அநுபவத்தை ஆசிரியர் மிக அரிய முறையில் எடுத்துக் காட்டுகிறார்.

வரலாற்று நெறிமுறைகளும் மரபுவழிப் பண்பாடுகளும் ஆங்காங்கே குறிப்பிட்டு, பொது மக்கள் வழங்கும் வழக்குகளில் உள்ள உண்மைகளைஆசிரியர் சிறப்பாக விளக்கியுள்ளார்.

இலக்கியம், அறிவியல், வரலாறு கற்போர்க்கு இந்நூல் மிகவும் துணைபுரியும்:

wrapper printed by:
prabhu printing house, madras-17